
ஸ்ரீ புவனேச்வரி விஜயம்



அப்தபூர்த்தி விழா சிறப்பிதழ்

துன்மதி—சித்திரை ஏப்ரல் ரூ. 2—00

முன்னுரை

ஸ்ரீபுவனேச்வரி விஜயம் தன்னுடைய மூன்று ஆண்டு சிறப்புப் பணியை ரௌத்ரி வருஷம் பங்குனி மாதத்தில் பூர்த்தி செய்தது. ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களின் அருளாசிகளுடன் ஸ்ரீபுவனேச்வரி சாரிடீஸ் டிரஸ்டு நடத்திவரும் ஸ்ரீபுவனேச்வரி விஜயம் இம்மாதத்தில் ஒரு சிறப்பு அம்சத்தைப் பெற்றுள்ளது. ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களின் ஷஷ்டி அப்தபூர்த்தி வைபவம் 25—3—81 அன்று நடைபெறுகிறது.

இந்த இதழை ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய சரண கமலங்களில் பக்தகோடிகளின் ஒருமித்த காணிக்கையாக அனந்தகோடி சாஷ்டாங்க நமஸ்காரங்களுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பதிப்பாசிரியர் குழு



ஸ்ரீ புவனேச்வரி விஜயம்

பதிப்பாசிரியர்கள் குழு

1. ஸ்ரீ V. S. கணபதி சாஸ்திரிகள், B. A., B. L.
2. ப்ரம்மஸ்ரீ உ. வே. அக்னிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார்
3. ,, ராஜகோபால சாஸ்திரிகள், மஞ்சக்குடி
4. ,, ராமனாத தீக்ஷிதர்
5. ,, ராம தீக்ஷிதர்
6. ,, முத்துஸ்வாமி சாஸ்திரிகள்
7. ,, திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள்
8. ,, கவியோகி சுத்தானந்த பாரதியார்
9. ,, கி. வா. ஜகன்னாதன்
10. ,, V. S. மணி அய்யர்
11. ,, நடராஜன் (நஜன்)
12. கவிதாமணி. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
13. கவிஞர் திலகம்- ஸ்ரீ பாரதன்
14. ஸ்ரீ வேங்கடராமன்
15. ,, மனம் சேர. சந்திரகாசன்
16. ,, வைத்தியநாதன் (ஆசிரியர், "ஜோதிடக் கடல்")
17. ப்ரம்மஸ்ரீ ச்ருங்காரசுப்ரமண்ய சாஸ்திரிகள், கூத்தனூர்

ஸ்ரீ புவனேச்வரி விஜயம் (மாத இதழ்)

தனிப்ரதி	1-00	பரம்பரை சந்தா	251-00
ஆண்டு சந்தா	11-00	போஷகர்	1001-00
ஆயுள் சந்தா	151-00		

மலேயா, பர்மா } ஆண்டு சந்தா { Sea Mail 35-00; Air Mail 60-00

Printed by: L. TYAGARAJA SARMA
at Sarma's Sanatorium Press, Ganeshnagar, Pudukkottai-622 001
and Published by Dr. N. Thiagarajan, for Sri Bhuvaneswari
Charities Trust. Adhishtanam. East VII Street. Pudukkottai-622001

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ புவனேச்வரி விஜயம்

(மாத இதழ்)

விஜயம் : 4	துன்மதி—சித்திரை ஏப்ரல்—1981	அருள் : 1

விஷய அட்டவணை | பக்கம்

குறிப்பு: சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுது தங்களது சந்தா எண்ணை மறக்காமல் தயவுசெய்து எழுதவும். விலாசம் மாறினால் சந்தா எண் எழுதி தெரியப்படுத்தவும். தங்கள் சந்தாக்களை புதுப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கட்டுரை எழுதி அனுப்பும் நேயர்கள் தெளிவாக எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஜய ஜய புவனேச்வரி ஜய ஜய புவனேச்வரி

ஸ்ரீ புவனேச்வரி விஜயம்



जगन्नायकि त्वत्स्वरूपं सदा मे
मनो ध्यायत् ध्वस्तमोहान्धकारम् ।
असह्येऽपि दुःखे त्वदीयांघ्रिपद्म
स्मृतेर्मास्तु भङ्गो नमस्ते नमस्ते ॥ ३६ ॥

புவனேச்வரி, என் உள்ளம் மாயை என்னும் இருளை நீங்கி இடைவிடாது உனது அழகிற் சிறந்த உருவத்தை தியானித்துக் கொண்டிருக்கவேண்டும். தாளவொணுத் துயர் வந்திடினும் உனது திருவடித் தாமரைகளைத் தொழுது ஏத்த யாதொரு இடையூறும் உண்டாகாமல் இருக்க அருள்செய். உனக்கு வணக்கம், வணக்கம்.

—ஸ்ரீ புவனேச்வரி ஸுப்ரபாதம்

ஜய ஜய புவனேச்வரி ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி
ஜய ஜய புவனேச்வரி

ஸ்ரீ புவனேச்வரி விஜயம்

புதுக்கோட்டை அதிஷ்டானம்
ஸ்ரீ புவனேச்வரி சாரிடீஸ் ட்ரஸ்ட் வெளியீடு

விஜயம் 4 | துன்மதி – சித்திரை | அருள் 1

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ புவனேச்வரி அந்தாதி

நா. கனகராஜய்யர்

இருப்பது பொய்யெனப் போவது மெய்யென வெண்ணிநைந்து
கருப்புகு துன்பங் கழன்றோட நோற்கும் கருத்துடையீர்
விருப்பு வெறுப்பறு வேதாந்த வல்லிவிமலை சிவை
அருப்புறு மெல்விரற்பூம் பதம் போற்றியடை மின்களே. 36

உரை: இம்மானுட உடம்போடு என்றுமிருப்பது பொய்யே. இவ்வுடம்பை இழந்துபோவது உறுதியென்று எண்ணி வருந்தி, உலகத்தில் கர்ப்பவாசம் பெறும் துன்பம் கழன்று ஓடவேண்டித் தவம்புரியும் கருத்துள்ள நன்மக்களே! விருப்பு, வெறுப்பு என்ற இருமையற்ற வேதாந்தவல்லியான விமலை, சிவையென்ற புவனேச்வரியின் அரும்புபோன்ற மெல்லிய விரலுள்ள பூப்போன்ற பாதங்களைத் துதித்து அடைவீர்களாக.

விரை: இருப்பதுபொய், போவது மெய்யென்பது பட்டினத்தடிகள் வாக்கில் வந்த கருத்து. ''ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யு:'' என்ற பகவத் கீதைப் பதமும் அதனையே உறுதியாய் உரைப்பது. உடம்பு நிலையற்றது, உயிர் வாழ்வு நிலையற்றது. பிறந்த உயிர் எல்லாம் இறப்பது உறுதியாதலின், உடம்பு இருக்கும்போதே அதனால் பெறத்தக்க நற்பயனைப்பெற முயலவேண்டும். கருப்புகு துன்பம், கருக்குழிக்குள் உடம் பெடுத்துப் புகும் துன்பம் சிறைக்குள் அகப்பட்ட அடிமை போன்றே கருப்பைக்குள் பத்துமாத காலம் கிடந்து, ஊறிப் பல வகைத் துன்பம் அடையும் உயிரின் நிலையை ''உடற்கூற்று வண்ணத்தில்'' பட்டினத்தார் நன்கு விளக்கியுள்ளார். ஜீவ வர்க்கம் பலவாகும். கருப்பைக்குட் துன்பம் எல்லா உயிர் களுக்கும் உண்டு. ஆயினும் இத்துன்பத்தின் எல்லையை யறியுமறிவு, மனிதப்பிறப்பு எடுத்த உயிர்களுக்கே அமைவது ஆதலின், மனிதரை விளித்தே இச்செய்யுள் மெய்ப்பொருள் உரைக்கின்றது. மனித உடம்பு பெற்ற உயிர்களே கருப்பெறு துன்பம் கழன்றோட நோற்கும் கருத்தை முற்பிறப்பின் புண்ணியத்தாலடையலாம். துன்பமின்னதென்றுணர்ந்தபிறகே அது கழல நோற்கும் கருத்து உண்டாகும். வேதாந்தவல்லி வேதசிரத்தில் நடனமாடும் மின்னற்கொடி போன்ற இறைவி. விருப்பு, வெறுப்பறும் என்ற அடைமொழி வேதாந்தத்திற்கும், வேதாந்தவல்லிக்கும் பொருந்தும். பாதத்திற்குப்பூவை உவமை கூறும் வழக்கம் காலங்கண்டதே. விரல்கள் அப்பூவோடு ஒட்டி நிற்கும் அரும்புகளாக உவமிக்கப்படுவது புதுமை, மலர்கள் இனத்தில் அரும்பும் உண்டு. மலரும்போது சில அரும்புகளும், மலர்களை ஒட்டியிருப்பது செவ்வணி போன்ற செடிகளிற் காணப் படும் காட்சியாகும். அச்செடியிலே சில மலர்கள் காலையில் எட்டு நாழிகைக்கு மலரும். மலர்கள் விளங்கத்தோன்ற இடையே அரும்புகளும் அடங்கியிருக்கும். சிவந்த திருவடி மலரையும், விரல்களையும் இப்படி வர்ணிப்பது பொருத்தமே.

—— (தொடரும்)

ஸ்வாமி என்பது என்ன?

[ஸ்ரீ காஞ்சி ஜகத்குருவின் உபதேசங்கள்]

—: சென்ற இதழ் தொடர்ச்சி :—

எல்லாவற்றிலும் உயர்ந்தது ஸ்வாமி என்று அவர் சொல்லியிருக்கிறார். "அர்ஜுனா, உயிர்களனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். புஷ்பத்தில் நான் வாசனை, மாதங்களில் நான் மார்கழி, ருதுக்களில் நான் வசந்தம், எதெது பெருமையுடையதோ, உண்மையுடையதோ, அழகுடையதோ, வலிமையுடையதோ, அதெல்லாம் நான் என்று பகவான் சொல்லியிருப்பதுபோல், எது உத்கிருஷ்டமோ அது ஸ்வாமி, தயையில் உத்கிருஷ்டம் ஸ்வாமி, ஞானத்தில் உத்கிருஷ்டம் ஸ்வாமி, சக்தியில் உத்கிருஷ்டம் ஸ்வாமி. அவர் நிறைந்தவர், நாம் குறைந்தவர், நாம் பெரிய பள்ளம்போல் இருக்கிறோம். அதைத் தூர்த்து நம்மையும் நிறைவாகச்செய்ய அவர் பிரயாசைப் படுகிறார். ஆனால் நம்முடைய குறைவாகிய பள்ளம் நிறைவதில்லை. ஆகாரம் வேண்டும், பணம் வேண்டும், பட்டங்கள் வேண்டும், உத்தியோகம் என்று நமக்குப் பல தேவைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. இத்தனை தேவைகளிலும் 'அவன் பணம் என் பையில் வரவேண்டும் என்ற ஆசையே நிற்கிறது. ஆகையால் இந்தப் பள்ளம் தூர்வதே இல்லை. ஆகையால் நாம் குறைவாகவே இருக்கிறோம். ஸ்வாமிக்குத் தேவையில்லை. ஆகையால் அவர் நிறைவாகவே இருக்கிறார். அந்தந்தக் குறையை நிவர்த்திசெய்ய ஒவ்வொன்றுக்கு ஒரு நிறைவு இருக்கிறது. ஒரு கன்னியை விவாகம் செய்துகொண்டு அழைத்துக்கொண்டு வருகிறான். அவளுக்கு நிறைவு எது? வணக்கம், நாணம் முதலியன. எனக்கு நிறைவு எது? நான் இங்கே ஒரு ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன் உங்களுக்கெல்லாம் உபதேசம் செய்துகொண்டிருக்கிறேன். இது எனக்கு நிறைவு.

நன்றி: ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், சென்னை

— தொடரும்

ஸத்புருஷர்கள்

(ஸ்ரீ ச்ருங்கேரி மஹாஸ்வாமிகளின் உபதேசம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆனால் அவரவர்களுக்குக் குறிப்பிட்ட சில விஷயங்களைமட்டும் நன்கு படித்து பாஸ் செய்யவேண்டும் என்று நியமம் உண்டு. இதுபோலவே தர்மங்கள் அனந்தமாயிருந்தாலும் சிலவற்றை மட்டும் கட்டாயம் அனுஷ்டித்து வரவேண்டும். முக்கியமாக காயத்ரியை விடாமல் எல்லோரும் ஒழுங்காய் ஜபம் செய்துவர வேண்டும்.

கர்ப்பதானம் முதலான நாற்பது ஸம்ஸ்காரங்களுடன் எட்டு ஆத்ம குணங்களையும் சேர்த்து 48 ஸம்ஸ்காரங்கள் ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றன. இதில் கடைசியாக உள்ள எட்டு குணங்களும் ஆத்ம ஸம்பந்தமானது ஸூக்ஷ்ம சரீரத்தைப் பற்றியது. இவை ரொம்ப முக்கியம். இவைதான் சிரேயஸ்ஸுக்கு முக்கிய காரணம்.

கிரஹஸ்த தர்மங்களில் பஞ்ச மஹாயக்ஞம் மிகவும் முக்கிய மானது. இந்தக் காலத்தில் ஒரு யாகம் செய்வதே ரொம்ப சிரமமாயிருக்கும் பொழுது ஐந்து யக்ஞம் எப்படிச் செய்வது என்ற நினைக்கக்கூடாது. இதை யாவரும் சுலபமாக அனுஷ்டிக்கலாம். யக்ஞம் என்பது பகவானின் ஆராதனைதான். நாம் தினசரி செய்துவரும் பாபங்கள் விலக இந்த யக்ஞம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பாபங்களைச் செய்யாமல் நம்மால் இருக்கமுடியாது. அதாவது நாம் வீட்டில் சமைப்பதற்காக அடுப்பு மூட்டும்பொழுது விறகில் உள்ள சிறு பூச்சிகள் நாசமாகின்றன. அதுபோல் உரலில் குத்தும்பொழுதும், அம்மியில் அரைக்கும்பொழுதும், வீட்டில் பெருக்கும்பொழுதும், காய்கறி நறுக்கும்பொழுதும் பிராணிகள் இறக்கின்றன. நம் போகத்திற்காக இந்தப் பாபங்களை தினசரி நாம் செய்துவருகிறோம். இதைச் செய்யாமலும் இருக்கமுடியாது. இதற்குப் பிராயச்சித்தமாகத்தான் 5 யக்ஞங்களைச் செய்யும்படி சாஸ்திரங்கள் உபதேசிக்கின்றன. அவைகளாவன :

(1) ப்ரம்ம யக்ஞம், (2) பித்ரு யக்ஞம், (3) தேவயக்ஞம், (4) பூத யக்ஞம், (5) மனுஷ்ய யக்ஞம்.

நன்றி : ஸ்ரீ சங்கரக்ருபா, விகாரி—ஐப்பசி

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளின்

அருளுரைகள்

ஏ மனமே! இடைவிடாமல் உன் மனம் கடவுளையே சார்ந்திருக்கட்டும்.

ஏ மனமே! திரிகரண சுத்தியுடன் கடவுளை வணங்கு, போற்று, பூஜைசெய். சரணமடைந்துவிடு.

ஏ மனமே! மாசுமருவற்ற வெட்டவெளியைப்போல் உன் மனம் இருந்துவரும்படி கவனித்துக்கொள்.

ஏ மனமே! உன் குறிக்கோளிலிருந்து பிறழாதவனாய் இருந்துவா.

ஏ மனமே! கடவுளை உனக்குள் வைத்துவிடு. காலன் அணுகான். கவலைகள் அற்றுப்போகும்.

ஏ மனமே! உடலைப் பார்க்காதே. எல்லோருடைய உள்ளத்தையும் பார்த்துவா.

ஏ மனமே! உன்னுடைய உயிருக்கும் உயிராயிருந்து உன்னைக் காப்பது சிவமாகும்.

ஏ மனமே! ஆத்மாவுள்ள ஒவ்வொரு மனிதனின் உள்ளமும் இருட்டாக இருக்கமுடியாது.

ஏ மனமே! பற்றுதல் உள்ள பற்பல ஜன்மங்களை எடுத்தாக வேண்டும். ஜாக்ரதை.

ஏ மனமே! சோதித்த பிறகு முழுமனதுடன் நம்பிவிடு.

ஏ மனமே! கடலின் கீழ்ப்பகுதியைப்போல் உன் மனம் இருந்து வரட்டும்.

ஏ மனமே! நீ தெய்வத்தைச் சத்தியமாக நம்பிவிடு. உனக்கு நல்வாழ்வு கிட்டிவிடும்.

—

(தொடரும்)

க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்

மந்த்ர சாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜ்யோதிஷ கல்பதரு,
உபன்யாஸக ரத்னம், ஸ்ரீ குருவாயூரப்பதாஸன்
B. சுந்தரராமன், M. A., B. Ed.,
பழமானேரி அஞ்சல், (வழி) திருக்காட்டுப்பள்ளி-*613 104*

26. ருக்மிணி பார்வதிதேவியைப் பூஜித்தல்

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் தன் பரிவாரங்களுடன் குண்டினபுறத்திற்குள் பிரவேசித்தார். அரசனுன பீஷ்மகன் ஸ்ரீக்ருஷ்ணரைப் பூஜித்து எதிர்கொண்டழைத்தான். பலராமனும் சைன்யங்களுடன் ஸ்ரீக்ருஷ்ணனைப் பின்தொடர்ந்து குண்டினம் என்ற அந்த பட்டினம் வந்தடைந்தார். தூது வந்த பிராம்மணோத்தமரும் கண்ணனுடன் நகரை அடைந்து ருக்மிணியிடம் சென்று நடந்த விருத்தாந்தங்களைக்கூறி கண்ணனின் வரவைக் கூறினுர். வேறு எதையும் பிரதியாகக் கருதாத அந்த அந்தணருக்குத் தன் நமஸ்காரம் ஒன்றை மட்டும் ருக்மிணி அன்புடன் செலுத்தி அவர் ஆசீர்வாதம் பெற்றுள்.

குண்டினபுரத்து மக்கள் அனைவரும் ஸ்ரீக்ருஷ்ணனின் திருமேனி அழகைக் கண்டு வியந்தார்கள். ''உலகிலேயே அழகான இந்த திவ்யமங்கள ரூபனை விட்டுவிட்டு, துன்மார்க்கனுன சிசுபாலனுக்கு நம் ராஜகுமாரி ருக்மிணியைக் கொடுக்க, இந்த ருக்மியின் கெட்ட புத்தி அல்லவா முடிவு செய்துவிட்டது'' என்று ஜனங்கள் புலம்பினுர்கள். இவ்விதம் அன்றைய இரவு ஒருவழியாகக் கழிந்தது.

மறுநாள் பொழுது விடிந்தது. சந்திரன்போல் முகமுள்ள ருக்மிணி விவாகத்திற்காக ஆபரணங்களை அணிந்துகொண்டும், ஸ்ரீபகவானிடம் தன்னை அர்ப்பணித்து விடவேண்டும் என்ற எண்ணம் கொண்டும், வீரர்களும், சேடியர்களும் புடைசூழ ஸ்ரீ பார்வதிதேவியை நகருக்கு வெளியே இருந்த கோவிலில்சென்று நமஸ்கரித்து பூஜை செய்யும்பொருட்டு பட்டினத்தின் கோட்டையைவிட்டு வெளிக்கிளம்பினுள்.

கைலாயத்தில் கிரிஜையாகவும், வைகுண்டத்தில் ஸ்ரீயாகவும், பிரம்மலோகத்தில் வேதரூபிணியாகவும் தேவலோகத்தில் போக

ரூபிணியாகவும், வானில் சந்த்ரிகையாகவும், பூமியில் அன்னை யாகவும் உயிர்களிடத்தில் உள்ளமாகவும், செயலில் தர்ம மாகவும் வாக்கில் உண்மையாகவும் வாழ்க்கையில் ஆனந்த மாகவும் திகழ்பவள் பரமேச்வரி.

கோபிகைகள் கண்ணனைப் பதியாக அடையவேண்டி பரமேச்வரியை காத்யாயனி ரூபமாக வழிபட்டு அவ்விதம் அடைந்தனர். ருக்மிணி தேவியும் அம்பாளின் அனுக்ரஹத்தையே சாச்வதம் என்று நம்பினுள்.

நம் புராதன மந்த்ர சாஸ்த்ரங்களில் ஸ்வயம்வரா பார்வதி என்ற அற்புதமான மந்த்ரம் உள்ளது. இதை ஜபித்து வருபவர் களும், இந்த ஹோமத்தைசெய்து ரக்ஷை தரிப்பவர்களும் விவாஹ ப்ராப்தியை உடனே அடைவது நிச்சயம். ஸ்வயம்வரா பார்வதி மந்த்ரத்திற்கு ஸ்வயம்வரா பார்வதிதேவி அதிதேவதை பிரம்மாரிஷி, காயத்ரி சந்தஸ், ஹ்ரீம்பீஜம், ஸ்வாஹா சக்தி, ஸர்வவசங்கரீதி கீலகம். த்யான ஸ்லோகம் பின்வருமாறு:

''பாலார்க்காயுத ஸுப்ரபாம் கரதலே லோலத்விரேபாகுலாம்
மாலாம் ஸந்ததீம் மனோஹரதனும் மந்தஸ்மிதோத்யன்முகீம்
மந்தம் மந்தம் உபேயுஷீம் வரயிதும் சம்பும் ஜகன்மோகினீம்
வந்தே தேவமுனீந்த்ர வந்திதபதாம் இஷ்டார்த்ததாம்
பார்வதீம்''

இனி மாலா மந்த்ரம் பின்வருமாறு:

''ஓம் த்ரைலோக்ய மோஹினி, ஜகத்ரய மோஹினி, உரக வச்யமோஹினி, ராஜவச்ய மோஹினி, ஸ்திரீ புருஷவச்ய வசங்கரீமோஹினி ஸகல ஸ்திரீ புருஷ ஹ்ருதயம் மம வசம் குரு குரு ஸ்வாஹா'' என்பதாகும்.

இனி மூலமந்த்ரம் பின்வருமாறு:

''ஓம் ஹ்ரீம் யோகினி யோகினி, யோகேச்வரி, யோக அபயங்கரி ஸகல ஸ்தாவர ஜங்கமஸ்ய முகம் ஹ்ருதயம் மம வசம் ஆகர்ஷய, ஆகர்ஷய, ஆகர்ஷய ஸ்வாஹா''

இந்த மந்த்ரங்களை விவாஹ ப்ராப்தியின்பொருட்டு ஜபித்துவர விரைவில் விவாஹமாகும். ஹோமம் ரக்ஷை பற்றிய விஷயங்கட்குக் கட்டுரை முகப்பிலுள்ள என் முகவரிக்குத் தபால் தலையுடன் எழுதலாம்.

இவ்விதம் பார்வதி தேவியைச் சரணமடைந்து ஸ்ரீருக்மிணி தேவி பூஜைகளை நடத்தினுள்.

कुलवधूभिरुपेत्य कुमारिका गिरिसुतां परिपूज्य च सादरम् ।
मुहुरयाचत तत्पदपङ्कजे निपतिता पतितां तव केवलम् ॥

குலவதூபிருபேத்ய குமாரிகா
கிரிஸுதாம் பரிபூஜ்ய ச ஸாதரம் ।
முஹுரயாசத தத்பத பங்கஜே
நிபதிதா பதிதாம் தவகேவலம் ॥

"கன்னியாள் ருக்மணி குலத்துக்
கவின்மாதர் சூழ்ந்திடக் கோயில்
துன்னியே மலைமகள் தன்னைத்
துதி, பூசை செய்தபின், அன்னை
தன் கமலத் திருவடிசூடி,
"நற்கணவன் ஆகிடக் கண்ணன்
தன்னையே அருளிடவேண்டும்
தயாபரி!" எனப் பன்னி இரந்தாள்"
(நாராயணீயம்—தமிழாக்கம்)

ஸ்ரீபட்டதிரி குருவாயூரப்பனிடம் கேட்கிருர்: "ஹே குருவாயூரப்பா! குமாரியான ருக்மிணி குல ஸ்திரீகளுடன் ஆலயத்திற்குள்சென்று ஹிமவானின் பெண்ணுன பார்வதி தேவியை நன்கு பூஜித்து அன்னையின் சரண கமலங்களில் நமஸ்கரித்துத் தங்களையே பர்த்தாவாக அளிக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வேண்டினுளாமே" என்று பட்டதிரி கேட்க, ஸ்ரீகுருவாயூரப்பனும் 'ஆமாம்' என்று தலையை அசைத்து அங்கீகரித்திருக்கிருர்.

இவ்விதம் அம்பாளைப் பூஜைசெய்து வெளிவந்த ருக்மிணியை நன்கு பார்க்க ஆவல்கொண்டு அரசர்கள் யாவரும் நெருக்கியடித்துக்கொண்டு நின்ருர்கள். ஸ்ரீருக்மிணி தன் காந்தியால் எல்லா திக்குகளையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு ஆலயத்தில் இருந்து வெளிக்கிளம்பினுள். பகவாஞன ஸ்ரீக்ருஷ்ணனும் ருக்மிணியை அபஹரிக்க எண்ணம்கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக வந்துநின்று காத்திருந்தார். அதற்கேற்ற தக்க தருணமும் வாய்த்தது.

— தொடரும்

ஹோமங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த மகான்

ஸ்ரீவித்யோபாஸக, ஞான பாஸ்கர, "நஜன்"

நம் இந்து சமயத்தின் லக்ஷியமே ''ஸர்வே ஜனு ஸுகினோ பவந்து'' என்பதுதான். எல்லோரும் சுகமாக வாழவேண்டும். அப்படி வாழ்ந்து எதற்காக இப்பிறப்பு எடுத்தோமோ அதன் பயனை அடையவேண்டும்.

இதற்கு வேதம் காட்டிய வழி ஹோமம் (யக்ஞம்). எதற்காக ஹோமம் செய்யவேண்டும்?

கர்மங்களில் சிறந்தது யக்ஞமே (யக்ஞோஹி ச்ரேஷ்ட தமம் கர்ம:) என்கிறது சாஸ்திரம். யார் கிரஹஸ்தன்? என்ற கேள்விக்கு ஆதி சங்கரர் பதிலளிக்கையில் எவன் யக்ஞம் செய்கிறானோ அவனே. வேதங்களில் அளிக்கப்பட்ட உலக க்ஷேமத்தை அளிக்கும் கர்மமே யக்ஞம்'' என்று கூறுகிறார்.

ஜப தபங்களில் ஒருவன் தனிப்பட்ட முறையில் உயர்ந்து மோக்ஷத்தை அடையலாம் ஆனால் பொது மக்களுக்கு சமூகத்திற்கு நன்மை ஏற்படவேண்டும் என்றால் அதற்கு யக்ஞம்தான் சிறந்த சாதனம். இது மனிதனுடன் உடன் பிறந்தது என்கிறார் கிருஷ்ண பகவான் கீதையில்.

இந்த யக்ஞம்மூலம் தேவர்கள் திருப்தியடைந்து மழை முதலிய வசதிகளை அளிக்கிறார்கள். மனிதன் யக்ஞம்மூலம் தேவர்களுக்கு உதவுகிறான். தேவர்கள் மழைமூலம் மக்களுக்கு உதவுகிறார்கள். இது ஒரு சக்கரம்போல் சுற்றுகிறது. இந்த சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கவேண்டும் என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார்.

ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா பரோவாச ப்ரஜாபதி:
அனேன ப்ரஸ விஷயத்து மேஷ வோவஸத் விஷ்ட காமதுக் ||

முறையோடு செயல்புரிவதுதான் கர்மம் அக்கர்மமே யக்ஞமுமாகும்.

யக்ஞத்தின் அடிப்படை தியாகமே. அக்னிக்கு ஹோமம் செய்வதுமூலம் நம் திரவ்யத்தை நாம் தியாகம் செய்கிறோம். ''நான் எனது'' என்ற அகங்காரத்தை தியாகம் செய்யவேண்டும் என்பதற்கு இது ஒரு வழிகாட்டி 'நான் எனது' என்ற அபிமானம் இல்லை என்றால் இந்த உலகமே நடைபெறாது. ஆனால் இது எல்லை மீறி போய்விடாதிருக்கவேண்டும் இதில்தான் லோக க்ஷேமமே இருக்கிறது.

நான்கு வேதங்களில் யஜுர் வேதம் யக்ஞத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறது அதிலுள்ள சுலோகம் ஒன்றின் அர்த்தம்.

''வாழ்வின் நன்மைக்காக வேள்விசெய்து தன் ஜீவனையே ஹவிஸ்ஸாக அர்ப்பணிக்கும் மகா ஜனங்களே!

''தேச நலத்திற்கும் தேச பாதுகாப்பிற்குமான நற்செய்திகளை ஒளியை பரப்புவதுபோல வீடுவீடாகச்சென்று ஒலி பரப்புங்கள்''.

''வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சக்திகளும் உங்களுக்குத் துணையாகவும் பாதுகாப்பாகவும் நிற்கின்றன''.

''பிரஜைகளின் உணர்ச்சிகள் பெரும் ஜோதியாக ஜ்வலிக்கும்போது இந்த தேசபக்தி அபாரமாகிவிடுகிறது. எவராலும் இதை வெல்ல முடியாது. இந்த சக்தி சம்பத்து நிறைந்த நிலையில்தான் வாழ்வின் வேள்வியே நடைபெறுகிறது. இந்த யாகம் ஒவ்வொருவரால் தனியாக செய்யமுடியாது. யாகம் செய்விக்க உடல் உழைப்போ, பொருள் உதவியோ செய்து புண்ணியமடையலாம். இதை அறிவிக்கும் வாக்கியம்

த்ருணானி ஹி இச்சந்தி குசதவமேவ
 வ்ருக்ஷா யூபத்வம் பசவச்ச கோத்வம் ।
ஸர்வா பிரஜா: பிராஹ்மணத்வம் நரேந்திர
 ந பிராஹ்மணாத்வாத் பரமஸ்தி கிஞ்சித் ॥

இதன் பொருள் சாதாரண புல்வகைகள் யாகத்திற்கு உபயோகிக்கப்படும் குசம், தர்ப்பம் இவைகளாக பிறக்க வேண்டுகின்றன. மரங்களெல்லாம் யாகத்தில் பயன்படும் யூபங்களாகவும் மிருகங்களெல்லாம் யாகத்திற்கு பால் கொடுத்து உதவும் பசுக்களாகவும் எல்லா மக்களும் வேதமோதுபவர் குலமாக இருக்க பகவானை வேண்டுகின்றன.

இந்த மாதிரி யக்ஞம் என்ற வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதுபோல மக்கள் கஷ்டப்படுவதை சத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள்கண்டு மனம் வருந்தினர். இந்த ஹோம முறையைக் கையாண்டு லோகத்திற்கு க்ஷேமம் அளிக்க அவா கருணை உள்ளம் முடிவுசெய்தது. புவனேச்வரியை பிரதிஷ்டை செய்தபின் 20 ஆண்டுகள் கழித்து அதாவது 1956ல் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் நித்ய சண்டீ ஹோமம் செய்ததிலிருந்து ஆண்டுதோறும் விடாமல் தைலதாரை போல பல ஹோமங்களை செய்துவந்துள்ளார். செய்யாத ஹோமம் எதுவுமே பாக்கியில்லை.

இன்று பிரதிபாபிரசுரம் 54 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. இம்மகானின் தொடர்பு 3வது புத்தகமான துர்க்கா பரமேஸ்வரியிலிருந்தே ஏற்பட்டது. அன்றுமுதல் எழுதிய கையெழுத்துப் பிரதியை அம்பிகை பாதத்தில்வைத்து பூஜை செய்துவிட்டு சத்குருநாதருக்கு முதல் காரியமாக இன்ன புத்தகம் போடுகிறேன் என்று கடிதம் எழுதுவேன். மறு தபாலில் அருளாசி வந்துவிடும். பம்பரமான என்னை அம்பிகை அவர் மூலம் ஆட்டிவைக்கிருள். இன்னும் இப்பம்பரம் ஒய்ந்து விழுந்துவிடாமல் சுற்றிக்கொண்டிருப்பதற்குக் காரணம் சத்குருநாதரின் பரிபூரண கடாக்ஷம்தான்.

இப்படி என்னை ஊக்கி அம்பிகைப் பணிசெய்ய ஆளாக்கி விட்டவருக்கு அவருடைய வர்த்தந்தி விழாவில் என்ன காணிக்கை அளிப்பது என்று தெரியாமல் திகைத்தபோது திருப்பரங் குன்றத்தில் பஞ்சாயதன மஹாயக்ஞம் நடத்தப்போவதாகவும் ஸ்ரீமதி கமலா ஸ்ரீனிவாசன் கடிதம் எழுதி அதில் இந்த யக்ஞங்களைப்பற்றிப் பேசவேண்டும் என்றும் அன்புக் கட்டளை யிட்டிருந்தார். ஸ்ரீவித்யா நவாவரண பூஜை வெளியிட்டதுடன் ஸ்ரீவித்யா ஹோமம்பற்றியும் ஒரு புத்தகம் வெளியிட எண்ணி இருக்கிறேன் கணக்கற்ற வேள்விகளை செய்துவரும் சத்குரு ஸ்வாமிகளுக்கு அவ்வேள்விகளை விளக்கும் புத்தகத்தை காணிக்கையாகவிடுவதைவிட வேறு என்ன பொருளைக்கொண்டு என் பக்தியையும் அபிமானத்தையும் காட்டமுடியும்?

''நஜன் எழுதுவது நிஜம் உன் பேனவில் தவறு எதுவும்வர அம்பிகை அனுமதிக்கமாட்டாள்'' என்று ஆசிர்வதித்து அபார தன்னம்பிக்கையை என்னுள்ளே வளர்த்த சத்குருநாதர் அவர்.

அவர் வாழ்க! அவர் கருணை உள்ளம் வாழ்க!

ஸ்ரீ தேவீபாகவதம்

(தர்மக்ஞ. மாயூரம் M. ராமனுத தீக்ஷிதர்)

மனோரமை, போரில் தந்தை இறந்ததைக் கேட்டாள். தந்தையும், கணவனும் இறந்தபிறகு நாதன் இல்லாத ஸுதர்சனன் என்ற தனயனுக்கும், யுதாஜித்தினால் ஆபத்து ஏற்படும் என்ற பயம் ஏற்பட்டது. உடனே கதறினாள். நான் எங்கே செல்வேன்? என்ன செய்வேன்? லோபம் மிகவும் பாபச் செயலை செய்யத் தூண்டுமே. லோபமுள்ளவன் தாயையும், தந்தையையும் ஸஹோதரனையும், ஏன் குருவையும் கொல்வான். செய்யக் கூடாதது எதையும் செய்வான். சக்களத்தி லீலாவதி என் புதல்வனிடம் தயையுள்ளவளா? எனக்குக் காப்பு ஒன்றுமில்லாமல் போய்விட்டதே என்று பலவிதமாய் புலம்பிக்கொண்டு எப்படி யாவது இந்த ஸுதர்சனனைக் காக்கவேண்டும் என்று ஒரு மந்திரியை துணைக்கு அழைத்துக்கொண்டு காசி தேசத்தில் ஸுபாஹு அரசன் காப்பாற்றுவான் என்று நிசியில் புறப்பட்டாள். மிக்க கஷ்டத்துடன் கங்கையைக் கடந்து த்ரிவேணி, ப்ரயாகை சென்று பரத்வாஜர் ஆச்ரமத்தை அடைந்தாள். ரிஷியானவர் மிகவும் வருந்தி வருகின்ற மனோரமையைக் கண்டு, ''நீ யார்? தேவர்களைச் சேர்ந்தவளா? மனித ஸ்திரீயா? அரசாங்கத்தை ஆளும் ஸ்திரீயை போல் தோன்றுகிறதே. இந்த குமாரன் யார்?'' என்று கேட்டார். மந்திரியை ஏவினாள். மந்திரி கூறினான்: அயோத்யா ராஜ்யாதிபதி துருவஸந்தியின் பட்டமஹிஷி. அரசனை சிங்கம் தாக்கியது. பிறகு எதிரிகளால் ஆக்ரமிக்கப்பட்டது தேசம். சிறிய பிள்ளையுடன் தங்களைச் சரணமடைந்தாள். தாங்கள் காப்பாற்றவேண்டும். நாதனற்றவர்களைக் காப்பாற்றுவது யாகம் செய்வதைவிட மேலானது என்று கூறினான். உடன் மஹரிஷி பயமில்லாமல் இங்கேயே வசிக்கலாம். இங்கு சோகம், மோகம், பயம் ஒன்றும் கிடையாது. கவலையில்லாமல் இருங்கள் என்று கூறினார். அவ்விதம் அங்கேயே தங்கினாள்.

யுதாஜித் தனது பேரன் சத்ருஜித் என்பவனுக்கு பட்டாபிஷேகம் செய்வித்தான்—ஸுதர்சனன் பரத்வாஜர் ஆசிரமத்தில் வசித்து வருவதை வேவுகாரர் மூலமறிந்து சேனையுடன் வந்தான். மனோரமை சேனையைக்கண்டு கலங்கினாள்— ரிஷியிடம் கூறுகிறாள். ஒரு சமயம் பாண்டவர்கள் வனவாஸம் செய்யும்பொழுது திரௌபதியை ரிஷிகளின் ஆச்ரமத்தில்விட்டு

வேட்டையாடச் சென்றபொழுது ஸிந்துதேச அரசன் ஜயத்ரதன் பலாத்காரமாக திரௌபதியை அபஹரித்தான் என்பதையும் ஒரு சமயம் ப்ரஹலாத பௌத்ரன் பலிசக்ரவர்த்தி யாகம் செய்யும் பொழுது தேவர்களுக்காக மஹாவிஷ்ணுவானவர் வாமன ரூபங் கொண்டு அவன் ராஜ்யத்தை அபஹரித்தார் என்றும் கேள்வி யுற்றேன். ஆகையினால் ஒருவரையும் நம்பமுடியவில்லை. யுதாஜித் ஸைன்யத்துடன் வருகிறான் காப்பாற்றவேண்டுமென்று சரணமடைந்தாள்.

யுதாஜித் மஹரிஷியிடம்—ஸுதர்சனனையும் மனோரமையையும் வெளியில் அனுப்பும், ஹடாத்காரம் செய்யாதீரென்று கர்ஜித்தான். சிறு குழந்தையுடன் ஒரு ஸ்திரீ வசிக்கிறாள் நீ வந்த வழியில் செல் அல்லது உனக்கு சக்தியிருந்தால் அழைத்துச் செல் என்றார். விஸ்வாமித்ரர் வஸிஷ்டருடைய பசுவை அழைத்துச் சென்றதுபோல் என்று கூறினார் மஹரிஷி. அரசன் மந்திரிகளிடம் கேட்டான் என்ன செய்யலாமென்று? முன்பு ஒரு சமயம் விச்வாமித்ரர் அரசாட்சி புரியும்பொழுது வஸிஷ்டர் ஆச்ரமம் சென்றார். அரசன் ஆச்ரமம் வந்ததும் சேனையுடன் கூடிய அரசனுக்கு சிறந்த விருந்தையளித்தார். ஆச்சர்யமடைந்த அரசன் விருந்து செய்வதற்கு காரணம் நந்தினி என்ற பசு என்று அறிந்து பசுவைக்கேட்டான். ஹோம த்ரவ்யங்களை அளிக்கும் பசுவை கொடுக்கமுடியாது என்று வஸிஷ்டர் கூறினார். ராஜா சேனையின் பலத்தைக்கொண்டு வஸிஷ்டரை எதிர்த்தான். பசுவின் ஹும்காரத்தினால் பற்பல படர்கள் தோன்றி அரசனின் சேனையை அழித்தனர். உடன் மிக அவமானமடைந்து விச்வாமித்ரர் பல வருஷங்கள் தவம்புரிந்து மஹரிஷியானார். ஆதலால் தபஸ்விகளிடம் வைரம் வேண்டாமென்றுசொல்லி அழைத்துக் கொண்டார்கள்.

ஆச்ரமத்திலுள்ள ஸுதர்சனனை ஒரு சமயம் ரிஷிகுமாரன் ஒருவன் க்லீப என்று கூப்பிட்டான் இதைக் கேட்டவுடன் மிக வியப்புடன் ''க்லீ'' என்பதை மனதில் நினைத்துவந்தான், உரிய காலத்தில் உபனயனம் செய்வித்து வேத சாஸ்திரங்களை மஹரிஷி கற்பித்தார். ஐந்து வருஷங்கள் சென்றன. ஒரு சமயம் காட்டில் தனியாக உள்ள சமயம் அம்பாளை காண்கிறான். ஆச்சரியமடைகிறான். சிவப்பு வர்ணத்துடன் கருட வாகனத்தில் ஸர்வாபரணங்களுடன் வைஷ்ணவ துர்கையைக்கண்டு வியப்படைந்தான். அம்பாள் வில், அம்புகள், கவசம், ஆயுதங்களை கொடுத்து மறைந்தாள்.

இந்த சமயம் காசி தேசத்து அரசகுமாரி சசிகலா என்பவள் பரத்வாஜ ஆச்ரமத்தில் வளரும் சுதர்சனனைப்பற்றி தூதுவர் முகமாக அறிந்து அவனையே மணம் செய்துகொள்ள ஆவல் கொண்டாள். இந்த சமயம் அந்த சசிகலையின் ஸ்வப்னத்தில் அம்பாள் தோன்றி ஸுதர்சனன் எனது பக்தன். அவனை மணந்து சுகமாய் வாழ்வாய் என்றுகூறி மறைந்தாள். அதுமுதல் அந்த ஞாபகமே, ஒன்றும் பிடிக்காமல் நினைத்துவந்தாள். ஒரு சமயம் வனத்தில் ஒருவரைக் கண்டாள். எங்கிருந்து வருகிறீர் என்று கேட்டாள். பரத்வாஜர் ஆச்ரமத்திலிருந்து என்றார். அங்கு ஏதாவது ரமணீயமான பொருள் உண்டா என்றாள். அதற்கு "ஏ பெண்ணே! மிக அழகுடன் மன்மதன்போல் ஸுதர்சனன் என்ற அரசகுமாரன் வசிக்கிறான். அவனுடைய ஒவ்வொரு அவயவங்களும் பார்க்கப் பார்க்கத் திகட்டாமல் கண்பதிந்து வருகிறது. பிரம்மதேவன் எல்லா அங்கங்களிலும் ஸௌந்தர்யத்தை ஒரு உடலில் காணவிரும்பிப் படைத்தாரோ என்று சொல்லலாம். நீயும், அவனும் சேர்ந்து மணம் செய்துகொண்டு ஒரு மனையில் அமர்ந்தால் பிரம்ம ஸ்ருஷ்டி பயனுள்ளதாகும்" என்றார்.

இதைக்கேட்டு அந்த புருஷனை நினைத்து வேறு ஆஹாரம், விஹாரம், புஷ்பம், தோழிகள் ஒன்றுமே பிடிக்காமல் இருந்து வந்தாள். தந்தை பெண்ணின் திருமணத்திற்காக ஸ்வயம்வர மண்டபம் ஏற்பாடு செய்து அரசகுமாரர் அனைவரையும் அழைத்து அவள் மனம்போல் வரிக்கவேண்டுமென்று நினைத்தார். இதை அறிந்த சசிகலை தோழியின் வழியாக தாயாரிடம் தனது விருப்பத்தையும், ஸ்வப்னத்தில் அம்பாள் தோன்றியதையும் சொன்னாள். பட்டமஹிஷியும் அரசனிடம் தெரிவித்தாள். அரசன் ராஜ்ய ப்ரஷ்டன், ரிஷி ஆச்ரமத்தில் பிக்ஷை எடுத்து உண்கிறான். மேலும் யுதாஜித் தனது பேரனுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து ராஜ்யத்தை வசம் செய்துவிட்டான். ஸுதர்சனைக் கொல்லவும் முயற்சி செய்கிறான். ஆகையினால் அவனை மறந்து விடச்சொல் என்றார். இதைத் தாய் முகமாக அறிந்த அரசகுமாரி என்மனம் அவனைக் கணவனாக வரித்துவிட்டது. அம்பாளின் ஆக்ஞை. எக்காரணத்தினாலும் மற்ற ஒருவரை மணக்கமாட்டேன் என்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள். ஆனாலும் அரசன் சுயம்வரம் ஏற்பாடு செய்கிறான். இதையறிந்த சசிகலை கலக்கத்துடன் அம்பாளை பிரார்த்திக்கிறாள். ஒரு அந்தணரைக்கண்டு எனது காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னாள். அவரும் ஏற்றுக்கொண்டார்.

சசிகலை கூறுகிருள்: ஏ ஸுதர்சன அரசகுமாரனே! நான் தங்களை பராசக்தியின் ப்ரேரணையினால் மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களாலும் கணவனாக வரித்திருக்கிறேன். தாய் தந்தை இடையூறு செய்தாலும் நஞ்சுண்டோ, நெருப்பில் விழுந்தோ உயிரை இழப்பேன். வேறு புருஷனை மணக்க மாட்டேன். அம்பாளின் அருளால் இது நிறைவேறும், வந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இதை ஸுதர்சனனிடம் அந்தணர் அறிவித்தார். ஸுதர்சனன் அம்பாளின் காமராஜம் என்ற மந்திர மஹிமையால் சக்ரவர்த்திபோல் விளங்குகிருன். ஆச்ரமத்தில் உள்ள அனைவரும் வாழ்த்தி நல்லாசி கூறுகின்றனர் அரசகுமாரியின் அபிப்ராயமறிந்த ஸுதர்சனன் பரத்வாஜ மஹரிஷியிடம்கூறி விடைபெற்றுத் தாயிடம் கூறினுள். தாயானவள் யதாஜித்தின் பகைமையை நினைத்து வருந்தினுள். ஆனாலும் அம்பாளின் அருள் வலிமையினால் செல்லத் தீர்மானித்தாள். பிரார்த்தனையுடன் அனுப்புகிருள்.

अग्रतस्ते अम्बिका पातु पार्वती पातु पृष्ठतः ।
वाराही विषमे पातु दुर्गा दुर्गेषु कर्हिचित् ॥
कालिका कलहे घोरे पातु त्वां परमेश्वरी ।
मण्डपे तत्र मातङ्गी तथा सौम्या स्वयंवरे ॥
भवानी भूपमध्ये तु पातु त्वां भवमोचिनी ।
गिरिजा गिरिदुर्गेषु चामुण्डा चत्वरेषु च ॥
कामगा काननेष्वेवं रक्षतु त्वां सनातनी ।
विवादे वैष्णवी शक्तिः अवता त्वां रघूद्वह ॥
भैरवी च रणे सौम्य शत्रूणां वै समागमे ।
सर्वदा सर्वदेशेषु पातु त्वां भुवनेश्वरी ॥
महामाया जगद्धात्री सच्चिदानन्दरूपिणी ॥

[மனக்கவலை முதலிய ச்ரமம் நேரும் சமயம், தூரதேசம் செல்லும் சமயம் இதை பாராயணம் செய்யவும். அம்பாளின் அருள் கிடைக்கும்.]

உனது முன்புறத்திலும், பின்புறத்திலும், பயங்கர தேகத்திலும், கோரமான கலகத்திலும், ஸ்வயம்வர மண்டபத்திலும், அரசர்களின் நடுவிலும், மலை, ஆறு கடக்கும்பொழுதும், எதிரிகளின் விவாதம், யுத்தம் இதிலும் அம்பாள் உன்னைக் காக்க வேண்டும்.

துளஸி ராமாயணம்

(டாக்டர். என். ஸ்ரீதரன், எம். ஏ., பிஎச். டி.,
மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை)

> பால காண்டம் தொடர்ச்சி <

பானுபிரதாபன்—கபட முனிவர் சந்திப்பு

157:1 இவ்வாறு பானுபிரதாபன் அலையும்போது ஓர் ஆசிரமத்தைக் கண்டார். அங்கு ஓர் அரசர் போலி முனிவர் வேடத்தில் இருந்தார். அவருடைய நாட்டைப் பானுபிரதாபன் பறித்துக்கொண்டுவிட்டார். ஏனெனில் அந்த அரசர் போரில் படையைத் துறந்து ஓடிவிட்டார்.

157:2 (போர் சமயம்) அது பானுபிரதாபனுக்கு சாதகமான காலம் என்றும் தனக்குக் கெட்ட காலம் என்றும் ஊகித்து ஓடிய அந்த அரசர் தன் இருப்பிடத்திற்குப் போகவில்லை. ஆணவம் காரணமாகப் பானுபிரதாபனைச் சந்திக்கவுமில்லை.

157:3 மனத்தில் கோபத்துடன் அவர் ஏழை முனிவர்போல் வேடம் தரித்துக் காட்டில் வசித்துவந்தார் அவரிடம் தான் பானுபிரதாபன் இப்போது போய்ச் சேர்ந்தார். அவரை அந்த அரசர் அடையாளம் புரிந்துகொண்டு விட்டார்.

157:4 தாகத்தால் தவித்ததால் பானுபிரதாபன் அவரை அடையாளம் கண்டுபிடிக்கவில்லை. வேஷத்தைப் பார்த்து, முனிவரென நினைத்து, குதிரையிலிருந்து இறங்கி வணங்கினார். அவரும் கெட்டிக்காரர் என்பதால் முன்னெச்சரிக்கையாகத் தன் பெயரைக் கூறவில்லை.

158:0 பானுபிரதாபன் தாகத்துடன் இருப்பதைக்கண்டு முனிவர் குளம் இருக்குமிடம் காட்டினார். அரசர் குதிரையுடன் அதில் இறங்கி, நீர் பருகி, குளித்து மகிழ்ந்தார்.

158:1 களைப்பு நீங்கி அரசர் சுகம் பெற்றார். முனிவர் அவரை ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அஸ்தமன நேரம் ஆகிவிட்டது கண்டு அவர் அரசரை உட்கார வைத்து மென் குரலில் கூறினார்.

அரசர் வந்ததிலிருந்து முனிவர் அவரை அமரச் சொல்லவில்லை. அரசரிடம் விபரம் விசாரிக்கவில்லை. தன்னைத் தெரிந்துவிடும் என்ற பயத்தால் அஸ்தமனம்வரைக் காத்திருந்தார். வெளிச்சக் குறைவால் பானுபிரதாபன் அவர் யாரெனக் கண்டுபிடிக்க முடியாதல்லவா?

அரசர்—முனிவர் உரையாடல்

158:2 ''நீ யார்? அழகிய இளைஞனாகிய நீ உயிரைத் துச்சமாக மதித்துத் தனியாக ஏன் காட்டில் அலைந்துகொண்டிருக்கிறாய்? உன்னிடம் அரச லட்சணங்கள் தெரிகின்றன. உன்னைப் பார்த்ததும் என் மனத்தில் கருணை உண்டாகிறது.''

158:3 ''முனிவரே, பானுபிரதாபன் என்ற அரசரின் அமைச்சர் நான். வேட்டையாடி அலைந்தபோது வழி மறந்து விட்டேன். ஆனாலும் என் அதிர்ஷ்டம் காரணமாக இங்குவந்து தங்கள் திருவடிகளைத் தரிசிக்கமுடிந்தது.

அரசியல் தந்திரம் காரணமாக அரசர் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. அரச லட்சணங்கள் தெரிவதாக முனிவர் கூறிவிட்டதால் ஏறத்தாழ அதே லட்சணங்களுடைய அமைச்சராகத் தன்னை அறிமுகம் செய்துகொள்கிறார்.

158:4 உங்களைப் போன்றவர்கள் தரிசனம் (நகரவாசியாகிய) எனக்குக் கிடைப்பது அரிது. ஒருவேளை என் தலைவிதி கொஞ்சம் நன்றாக உள்ளதுபோல் தோன்றுகிறது. முனிவர் கூறினார்: 'மகனே, இருட்டிவிட்டது. உன் ஊர் எழுபது யோஜனை தூரத்தில் உள்ளது.

159:0 பயங்கரமான இரவு. அடர்ந்த காடு. வழியோ ஏதும் இல்லை. இதை உணர்ந்து இன்று இங்கே தங்கிவிடு. காலையானதும் கிளம்பிப் போ.

159:அ துளஸி கூறுகிறார்: தலைவிதி எப்படியோ அதற்குத் தக்கப்படித்தான் உதவி கிடைக்கிறது. அந்த உதவி தானே முன்வந்து குறிப்பிட்ட நபரை குறிப்பிட்ட விதியின் நிலைமைக்கு இட்டுச்செல்கிறது.

159:1 தங்கள் விருப்பப்படியே எனக்கூறி அரசர் முனிவர் கட்டளையை ஏற்றுக்கொண்டார். குதிரையை மரத்தில் கட்டிவிட்டு வந்தமர்ந்தார். முனிவர் பாதங்களை வணங்கி, அவரைப் புகழ்ந்து, தன் அதிர்ஷ்டத்தை மெச்சிக்கொண்டார்.

159:2 பிறகு கூறினார்: 'பிரபுவே உங்களைத் தந்தையாக நினைத்து, துணிந்து கேட்கிறேன். என்னைத் தங்கள் மகனாகவும் ஊழியனாகவும் கருதி உங்கள் பெயரையும் மற்ற விவரங்களையும் சொல்லவும்.

159:3 அரசர் முனிவரை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. கபடமுனிக்கு அரசரைத் தெரிந்துவிட்டது. அரசர் தூய உள்ளம் உடையவர். முனிவர் கபடத்தில் திறமைசாலி. அவரோ எதிரி, மேலும் க்ஷத்திரியர்; அரசராக இருந்தவர். பானுபிரதாபனை ஏமாற்றித் தன் வேலையை முடித்துக்கொள்ள (பழிவாங்க) விரும்பினார்.

159:4 எதிரியாகிய முனிவர் தான் இழந்த அரச இன்பங்களுக்காக வருந்திக்கொண்டிருந்தார். அவர் உள்ளம் செங்கற் சூளையைப்போல் தகித்துக் கொண்டிருந்தது. விரோதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்த அவர் அரசரது கபடமற்ற சொற்களைக்கேட்டு மகிழ்ந்தார்.

160:0 அவர் கபடம்தோய்ந்த மென்குரலில் கூறினார்: 'எனக்கு இப்போது வெறும் பிச்சைக்காரன் என்றுதான் பெயர். நான் எத்தகைய செல்வமும் வீடும் அற்றவன்'.

160:1 அரசர் கூறினார்: 'உங்களைப்போல் ஞானியரும், கர்வம் நீங்கியவர்களும் இப்படித்தான் தங்கள் மகிமையை மறைத்துக் கூறுவார்கள். எல்லாவிதத்

திலும் சிறந்தோராக இருப்பினும் பரிதாபமான வேஷம் பூண்டு காட்சி அளிப்பார்கள்.

160:2 ஆகவேதான் இவ்வாறு வலிந்துசென்று வறுமையை மேற்கொள்பவர்கள் ஹரிக்குப் பிரியமானவர்கள் என வேதங்கள் உரைக்க, சான்றோரும் வலியுறுத்துகின்றனர். உங்களைப்போல் செல்வமற்ற, வீடற்றவர்கள்மீது பிரும்மா, சிவன் ஆகியோருக்கும் சந்தேகம் ஏற்படுகிறது (இத்தகையவர்கள் உண்மையில் ஏழைகளா அல்லது முனிவர்களா என்ற சந்தேகம் அல்லது இத்தகைய முனிவர்கள் பிரம்ம பதவி, ருத்ர பதவிக்குத் தகுதி யுடையவர்கள் ஆகிவிடுவர் என்ற சந்தேகம்).

160:3 நீங்கள் எப்படியிருந்தாலும் அப்படியே இருங்கள். நான் உங்கள் பாதங்களை நமஸ்கரிக்கிறேன். எனக்கு அருள் புரியுங்கள். அரசருடைய உண்மையான அன்பையும் அவர் தன்மீதுகொண்ட நம்பிக்கையும்கண்டு (கபட முனிவர்)

160:4 எல்லாவிதமாகவும் அரசரைத் தன் வசப்படுத்திக் கொண்டு, போலி அன்பை வெளிப்படுத்திக்கொண்டு சொன்னார்: நான் கூறுவது உண்மை. நான் இங்கேயே நீண்ட காலமாக வசித்து வருகிறேன்.

161:0 இதுவரை நான் யாரையும் சந்தித்ததில்லை. ஆகவே நான் யாரிடமும் (என்னைப்பற்றி) எதுவும் சொன்ன தில்லை. உலகப்புகழ் நெருப்பிற்குச் சமம். அது தவ வலிமை என்ற காட்டை அழித்துவிடும்.

161:அ துளஸி கூறுகிறார்: அழகிய, பொருத்தமான வேஷம் கண்டு மூடர்கள்தான் மயங்குவர். கெட்டிக்காரர்கள் ஏமாறமாட்டார்கள். மயில் அழகானதுதான். நல்ல குரல் உடையதுதான். ஆனால் அது பாம்பையல்லவா ஆகாரமாகச் சாப்பிடுகிறது.

161:1 (முனிவர் கூறினார்:) ஆகவே நான் உலகின் பார்வையில் இருந்து மறைந்து வாழ்கிறேன். எனக்கு ஹரியைத் தவிர மற்றவைகளில் அக்கரை இல்லை. பிரபுவிற்கோ எதுவும் கூறாமலேயே (என்னைப்பற்றித்) தெரியும். மக்களைக் கவர முயற்சிப்பதால் என்ன பலன்?

161:2 நீ தூய்மையானவன், நல்லறிவு உடையவன். எனக்குப் பிரியமானவன் ஆகிவிட்டாய். உனக்கு என்மேல் அன்பும் நம்பிக்கையும் உண்டு. ஆகவே உன்னிட மிருந்து எதையும் மறைத்தால் அது பெரிய குற்றமாகி விடும்.

161:3 கபட சந்யாசி தன் விரக்த மனப்பான்மையை மேலும் வர்ணிக்க அரசருக்கு அவர்மேல் நம்பிக்கை கூடியது. மனம், வாக்கு, செய்கையால் அரசர் தன் வசப்பட்டு விட்டதை அறிந்து முனிவர் தொடர்ந்து கூறினர்.

161:4 'என் பெயர் ஏகதனு' இதைக்கேட்டு அரசர் வணங்கிச் சொன்னர். 'என்னைத் தங்கள் சேவகனுகக்கருதித் தங்கள் பெயரின் அர்த்தத்தை விளக்கவும்'.

162:0 (முனிவர் கூறினர்): ஆதியில் சிருஷ்டி ஏற்பட்ட சமயம் என் தோற்றம் ஏற்பட்டது. எனக்கு ஏகதனு (ஒரே உடல்) என்று பெயரிடப்பட்டது. ஏனெனில் பிறகு நான் வேறு உடல் தரித்தது இல்லை.

162:1 இதைக்கேட்டு வியப்படைய வேண்டாம். தவத்தால் பெறமுடியாதது எதுவுமில்லை. தவவலிமையால் பிரம்மா உலகைப் படைக்கிறர். விஷ்ணு காப்பாற்றுகிறர்.

162:3 சிவன் அழிக்கிறர். இதைக்கேட்டு அரசருக்கு முனிவர்மீது பக்தி ஏற்பட்டது. முனிவர் (தன் நீண்டநாள் ஆயுளை நிரூபிக்கும் வகையில் பழங்காலக் கதைகள் கூறத் தொடங்கினர்.

162:3 கர்மம் (வினைப்பயன்), தர்மம் ஆகியவைபற்றிய வரலாறு களையும், வைராக்கியம், விவேகம் ஆகியவைபற்றிய விளக்கங்களையும் கூறினர். உலகின் தோற்றம், வளர்ச்சி பிரளயம் பற்றிய கதைகளை வியப்பைத்தரும் விஷயங் களுடன் கலந்து வர்ணித்தார்.

162:4 இதையெல்லாம் கேட்டு அரசர் அவர் வசப்பட்டு விட்டார். தன் [உண்மையான] பெயரைக் கூறிவிட்டார். முனிவர் சொன்னர்: ''எனக்கு உன்னைத் தெரியும். நீ கபடம் செய்தாய். ஆனாலும் எனக்குப் பிடித்திருந்தது.

163:0 அரசன் தன் பெயரைக் கண்ட இடங்களில் கூறக்கூடாது என்று ஒரு விதி (நீதி) உள்ளது. உன்னிடம் அந்தத் திறமையைக் கண்டு எனக்கு உன்மீது அன்பு]மதிப்பு] ஏற்பட்டது.

163:1 உன் பெயர் பானுபிரதாபன். உன் தந்தை ராஜா சத்யகேது. இவ்வாறு குருவின் அருளால் எல்லாம் தெரிந்துகொள்ளலாம். ஆனால் (தெரியும் என்பதை) வெளியில் சொல்லக்கூடாது. இதனால் தீமை ஏற்படும்.

163:2 உன் நேர்மை. அன்பு, நம்பிக்கை, அரசியல் நீதியில் திறமை ஆகியவை கண்டு என் மனத்தில் பாசமேற்பட்டு விட்டது. நீ கேட்டதால் என் கதையைக் கூறினேன்.

163:3 நான் சந்தேகமில்லாமல் மகிழ்ச்சியடைகிறேன். உனக்கு விருப்பமானதைக் கேள்.'' இதைக் கேட்டு அரசர் இன்பமடைந்தார். முனிவர் காலைப் பிடித்துப் பலவிதமாக வேண்டினார்.

163:4 கருணைக் கடலாகிய முனிவரே, தங்கள் தரிசனத்தால் எனக்கு அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் கைமேல் கிடைத்துவிட்டன. உங்கள் மகிழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு இதுவரை அடையமுடியாதிருந்த வரம் ஒன்றைப் பெற்று, கவலையிலிருந்து விடுபட விரும்புகிறேன்.

164:0 நான் மூப்பு, மரணம், துன்பத்தால் பீடிக்கப்படாதவனாக விளங்கவேண்டும். என்னை யாரும் போரில் வெல்லக் கூடாது. இவ்வாறு எதிரிகள் இல்லாமல்போய் உலகத்தை நூறு கல்ப காலம்வரை நானே ஒரு குடைகீழ் ஆளவேண்டும்.

164:1 முனிவர் கூறினார்: 'அப்படியே ஆகட்டும். ஆனால் இதிலுள்ள ஒரு கஷ்டத்தையும் அறிந்துகொள். காலம் (அல்லது காலனும்) உன் கால்களை வணங்கி நிற்கும். அந்தணர்களைத் தவிர யாவரும் உன்னிடம் பணிவுடன் இருப்பர்.

164:2 தவ வலிமையால் அந்தணர்கள் எப்பொழுதும் பலமுடையவர்களாக உள்ளனர். அவர்களுடைய கோபத்திலிருந்து யாரையும் காப்பாற்றமுடியாது.

அவர்களை உன் வசப்படுத்திவிட்டால் பிரும்மா, விஷ்ணு, சிவனும் வசப்படுவர்.

164:3 அந்தணர்களைக் கட்டாயப்படுத்தி அடக்கிவிடமுடியாது என்பதை சாத்தியம்செய்து கூறமுடியும். அவர்கள் சாபம் இடாதவரை உனக்கு எக்காலத்திலும் நாசம் வராது.

164:4 இதைக்கேட்டு அரசர் மகிழ்ந்து கூறினர்: 'எனக்கு என்றும் அழிவேற்படக்கூடாது. உங்கள் அருளால் எனக்கு எப்போதும் நன்மைவிளையட்டும்'.

முதலில் (பாடல் 164:0) நூறு கல்ப காலம் மட்டும் அழியாமல் இருந்தால் போதுமெனக்கேட்ட அரசர் அவ்வரம் கிடைத்ததும் இன்னும் பெரிய வரமாக என்றும் அழிவு வரக் கூடாதெனக் கேட்கிறுர். ஒரு லாபம் கிடைத்ததும் பேராசை தோன்றிவிடுகிறது—லாபாத் லோபோபஜாயதே.

165:0 முனிவர் கூறினர்: ''அப்படியே ஆகட்டும். ஆனல் நீ காட்டில் வழி தவறியதையும், என்னைச் சந்தித்ததையும் வெளியிட்டால் (நல்லதல்ல) பிறகு என்னைக் குறை சொல்லக்கூடாது.

165:1 இக்கதையை (சந்திப்பை) வெளியிட்டால் உனக்கு ஆபத்துவரும் என்பதால் தடுக்கிறேன். இது ஆறுவது காதை எட்டியதும் உனக்கு அழிவேற்படும். இது சத்தியம்.

மந்திரங்கள் ரகசியமானவை. ஆறுவது காதை எட்டினல் அவை வலிமை இழந்துவிடும் என்பர். [ஷட்கர்ணோ பித்யதே மந்த்ர:] முனிவர் தன் கதையும் அப்படிப்பட்டது என்கிறுர்.

165:2 இதை வெளியிட்டாலோ அல்லது அந்தணர் சாபம் இட்டால்தான் உனக்கு மரணம் ஏற்படும். வேறெந்த வகையிலும் உனக்கு அழிவில்லை. சிவன், விஷ்ணு கோபித்தாலும் ஆபத்தில்லை.''

165:3 அரசர் அவர் காலைப் பற்றிக்கொண்டு சொன்னர்:- நீங்கள் கூறுவது உண்மை. அந்தணர், குரு இருவரின் கோபத்திலிருந்து யார்தான் காப்பாற்றமுடியும்? ப்ரம்மா

கோபித்தால்கூடக் குரு காப்பாற்றுவார்? குருவுடன் விரோதம் வந்தால் உலகில் யாருமே காப்பாற்ற முடியாது.

165:4 உங்கள் கட்டளைப்படி நடக்காவிடில் என் வாழ்க்கை நாசமாகட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் அந்தணர்கள் சாபமிட்டால் அது வலிமையுடையதாக இருக்குமே என அஞ்சுகிறேன்.

166:0 அந்தணர்களை எப்படி வசப்படுத்துவது என்று தயவு செய்து கூறவும். உங்களைப்போல் இவ்வளவு தூரம் என் நன்மையை விரும்புவோர் வேறு யாரும் உள்ளதாகத் தோன்றவில்லை.''

166:1 ''அரசே, கேள். [அந்தணர்களை வசப்படுத்த] பலவித உபாயங்கள் உண்டு. ஆவை கஷ்டமானவை. அவை களால் பலன் கிடைப்பதும் நிச்சயமில்லை. ஒரு சுலபமான வழி கூறுகிறேன். ஆனால் அதிலும் சிக்கல் உள்ளது.

166:2 அந்த உபாயம் எனக்கு எளிது. ஆனால் (அதை நிறை வேற்ற) நான் உன் நகரத்திற்குப் போக முடியாது. நான் பிறந்ததிலிருந்து இதுவரை எந்தக் கிராமத்திற்கும் அல்லது யார் வீட்டிற்கும் போனதில்லை.

166:3 நான் போகாவிடிலோ உன் காரியம் நடைபெறாது. பெரும் தர்ம சங்கடமாக உள்ளது. அரசர் மென் குரலில் சொன்னார்: வேதங்கள் ஒப்புக் கொள்கின்றன. (என்னவென்றால்)

166:4 பெரியோர் தாழ்ந்தவர்களிடம் அன்பு காட்டுகின்றனர். மலையும் பூமியும் தங்கள் தலைகளில் முறையே புல்லையும் தூசியையும் தரிக்கின்றன. கடலின் தலைமீது நுரை பொங்குகிறது.

167:0 அரசர் முனிவர் கால்களைப் பற்றிக்கொண்டு மேலும் கூறினார்: 'கிருபை செய்யவும், நீங்கள் சான்றோர் தீனதயாளர் எனக்காகச் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளவும்'

— தொடரும்

ஸ்ரீமத் பகவத்கீதை

(சுவாமி சித்பவானந்தர் அவர்களின் வியாக்யானத்துடன்)

नासते विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्वदर्शिभिः ॥ २६ ॥

நாஸதே வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத: ।
உபயோரபி த்ருஷ்டோzந்தஸ்த்வனயோஸ்தத்வதர்சிபி: ॥

இல்லாதற்கு இருப்புக்கிடையாது, இருப்பது இல்லாமல் போவதும் இல்லை. உண்மையறிந்தவற்கே இவ்விரண்டின் முடிவு விளங்கும். தத்வதர்சனம் என்பது உண்மையைக் காணுதல். உண்மையைக் காண்பதற்கே உயிர்கள் முயன்று வருகின்றன. தேடிய பொருளைக் கண்டெடுத்தவர்க்கு மேலும் தேடித்திரிய வேண்டிய அவசியமில்லை. உள்ளது எது என்று தேடுவது உயிர்களின் இயல்பு இருப்பதை உரியதாக்கிக்கொள்ளச் செய்யும் முயற்சியே வாழ்க்கை என்று அழைக்கப்படுகிறது. கோடை காலத்தில் ஓடையில் நீர் ஒடுங்கி இருக்கும்போது நெடுந் தூரத்துக்கு நனைந்த பூமி அதில் கண்ணுக்குத்தென்படுகிறது. ஆயினும் அதை சாகுபடிக்கு உரியதாக்கிக்கொள்ள யாரும் முயல்வதில்லை. ஏனென்றால் மாரி காலத்தில் மீண்டும் பெருக் கெடுத்து ஓடும் பிரவாகத்துக்கு அது உட்படும். நாளைக்குப் பயன்படாது போகுமாதலால் இன்றே அது பயனற்றதென்று கருதப்படுகிறது.

தத்துவதர்சிகள் தேகத்தையும் அதினின்று தோன்றும் சுக துக்கங்களையும் அங்ஙனம் கருதுகின்றனர். முன்பு ஒரு காலத்தில் நம் தேகம் இல்லை. இடையில் அது வந்துள்ளது. பின்பு அது இல்லாமற்போம். ஆகையால் இடையில் இருக்கும்பொழுதும் உண்மையில் அது இல்லாததே—அபாவமே. கனவில் வந்துள்ள செல்வம் வந்திருக்கும்போதும் உண்மையில் இல்லை.

தேகம் அஸத்து, அதாவது இல்லாதது. ஏனென்றால் அதன் இடத்து பாவமில்லை, இருக்கின்றேன் என்ற உணர்ச்சியில்லை. முன்பு இல்லாது இடையில் வந்து, இறுதியில் மறைவது விகாரப் படும் தன்மையது. ஆதலால் அது இருக்கும்போது இல்லாதது என தள்ளத் தகுந்தது. அதனிடத்திருந்து வரும் சுகதுக்கங்களையும் அப்படியே புறக்கணிக்கவேண்டியது பெரியோர் கடமை.

ஆத்மாவோ வஸ்து, அதாவது உள்ளது. ஏனென்றால், அதனிடத்து உணர்வு உண்டு. இருக்கிறேன் என்ற உணர்ச்சி அல்லது பிரக்ஞை வடிவமானது அது. பிரக்ஞையானது காலத்தால் தேசத்தால் அல்லது அவஸ்தையால் அடிபடாதது. ஒரு விகாரத்தையும் அது எடுப்பதில்லை. மாறுபாடு என்பது ஆத்மாவுக்கு இல்லை. அது நித்யமாய் உள்ளது.

ஸ்ரீஞானேச்வரி கீதை (தமிழாக்கம் கோமதி ராஜாங்கம்)

ஹே அர்ஜுனா! புத்திமான்கள் எதை அறிகிறார்களோ, அந்த விஷயத்தைக் கூறுகிறேன் கேள். இந்த ஜகத் ரூபமான உபாதியில் என்றும் எங்கும் நிறைந்த சைதன்யம் மறைந்து இருக்கிறது. தத்வ ஞானிகள் இதை அறிகிறார்கள். ஜலமும் பாலும் ஒன்றுகலந்திருப்பதால் ராஜஹம்ஸம் அதைப் பிரித்து விடுகிறது. தட்டான் தங்கத்தை ஸ்புடம்வைத்து சுத்தத் தங்கத்தையும் அசுத்தத்தையும் வேறாக்குகிறான். கவனமாகத் தயிர் கடைவதால் வெண்ணை கிடைக்கிறது. அதுபோல உயிருடன்கூடிய தானியத்தைப்புடைத்தால் கனபதார்த்தமான தானியம் தங்குகிறது. மெல்லியதான உமி பறக்கிறது. அது போல சிந்தனைசெய்யும் ஞானிகளுக்கு பிரபஞ்சம் லேசாகவும் வேறாகவும் தோன்றுகிறது. தத்துவம் ஒன்றே அவர்களின் மனதில் நிற்கின்றது. அதனால் அழியும் வஸ்துக்களை அவர்கள் உண்மை என்று நம்புவதில்லை. சத்-அசத்தைப் பிரிக்கும் அறிவு அவர்களிடமிருக்கிறது.

—

(தொடரும்)

நீதி சதகம்

(பர்த்ருஹரி)

(ப்ரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், திருச்செங்கோடு)

क्वचित् पृथ्वी शय्या क्वचिदपि च पर्यङ्कशयनः
क्वचिच्छाकाहारः क्वचिदपि च शाल्योदनरुचिः ।
क्वचित् कन्धाधारी क्वचिदपि च दिव्याम्बरधरो
मनस्वी कार्यार्थी न गणयति दुःखं न च सुखम् ॥

தன் காரியத்தை நிறைவேற்றும் உறுதியுள்ள தீர மனிதன் இன்ப துன்பங்களை சமமாக மதிப்பான். சில சமயம் தரையிலும், சில சமயம் கட்டிலிலும் படுப்பான். சில சமயம் கீரையைத் தின்று வாழ்வான். சில சமயம் நெல்லரிசிச் சோற்றை சுவைப்பான். சிலசமயம் கந்தை அணியவேண்டின் அணிவான். சில சமயம் சிறந்த பட்டாடை உடுப்பான்.

निन्दन्तु नीतिनिपुणा यदि वा स्तुवन्तु
लक्ष्मीस्समाविशतु गच्छतु वा यथेष्टम् ।
अद्यैव वा मरणमस्तु युगान्तरे वा
न्यायात्पथः प्रविचलन्ति पदं न धीराः ॥

தீர புருஷர்கள், நீதியறிந்த பெரியோர்கள் திட்டினாலும், புகழ்ந்தாலும், செல்வம் வந்தடைந்தாலும், செல்வம் அழிந்து போனாலும், இன்றே மரணம்வரினும் சரி அல்லது நீண்ட நாட்கள் கழித்து வருவதானாலும் சரி, நியாய வழியிலிருந்து ஒரு அடிகூட மாறிச் செல்லமாட்டார்கள்.

—

(தொடரும்)

॥ हे मानस! भज सद्गुरुनाथम् ॥

—" परदेशी "—

सन्ततं भज शान्तानन्दं
अन्तरायकृन्तनं ।
सद्गुरुचरणारविन्द सेवया चिन्तां धावतु ॥ (सं)

अन्ततो गत्वा स्कन्दमातास्वरूपं
आचार्यं कृपानिधिम् ।
आत्मज्ञानविहीनंपण्डित-
पामरजनोद्धारकम् ॥ (सं)

दर्शनमात्रक्षाळितकल्मषं
स्मयमानवदनसरोरुहम् ।
दर्शितविविधलीलावैभवं
दीनपार्थसारथिविनुतम् ॥ (सं)

ஸ்ரீசத்குரு சாந்தானந்தர் கலிவெண்பா

(ஆக்கம் கவிஞர் சேலம் செ. சி. இராமசாமி)

மூவரும் போற்றும் முதல்வா முழுதுணர்
தேவரும் போற்றிடும் தேவதேவா—மேவிடும்
தேவியர்ப் போற்றிடும் தெய்வமே பேரருள்
காவியம் பாடும் கவிக்குயிலே—கூவிடும்
சேவல் கொடியோனின் சிந்தைநிறைச் சீர்வாழ்வே
ஆவல் கணபதியின் அற்புதமே—காவல்
கடம்பனின் கண்ணே கருத்தே கனித்தமிழே
கூடல் மதுரையின் கோபுரமே—திடம்பட
பாடிடும் ஏழிசைப் பான்மையே பைந்தமிழே
கூடிடும் நிட்டையே குன்றமே—மூடிய
மேகம் மறைக்கா விழுச்சுடரே விண்ணமுதே
மோகனப் புன்னகையே மோனமே—ஆகமம்
சாற்றும் அறிதுயிலே சந்தத நான்மறையே
ஏற்றத்தின் ஏணியே ஏக்கத்தை—மாற்றவல்ல
மாண்பே மதியே மனம்நிறை நல்மகிழ்வே
யாண்டும் நடுநிலையே இன்பமே—வேண்டுவார்
வேண்டிய நல்கும் விழுப்பொருளே சத்குருவே
ஆண்டிடும் ஆற்றலே அன்புருவே—தீண்டிடும்
தென்றலே சீர்த்தமிழ்த் தெம்பாங்கே தேர்இசையே
அன்னையே ஆக்கமே ஆருயிரே—நன்றுசெய்
நாயகமே தாயகமே நற்திறனே நல்மணியே
சேயகமே செம்மையே சேவகமே—தூயகமே
ஊக்கமேநற் கேணியே ஒண்பொருளே நல்ஞானத்
தேக்கமே தேர்கனியே தெள்ளமுதே—பூக்கும்
கருணைசேர் வெள்ளமே கற்பகக் காவே
அருளே அழகே அறிவே—அருமைசேர்
ஜட்ஜுசாமி சீடரே சீரார்ந்த நல்வைரமே

நுட்பமே நுண்மாண் நுழைபுலமே—திட்பமே
அம்மைப் புவனை அருளே அதிசயமே
நம்மைக் கவர்ந்திடும் நாநயமே—இம்மை
மறுமை இரண்டின் வளத்துணையே சால்பே
பொறுமையே மாநிதியே பொன்னே—திருவிடமே
கந்தகிரி கண்ட கவினே கலைமணியே
பந்தமில்லாப் பந்துவே பக்தரின்—சொந்தமே
ஆண்டுகள் ஆறுபத்தின் ஆன்ற வளநிறைவே
தூண்டுகோலே வேண்டுகோளே தூமணியே—காண்கின்ற
காந்தமே கண்ணொளியே காலைக் கதிரவனே
சாந்தமே நற்சாந்தா னந்தசாமி—சாந்துணையும்
உம்பொற்றாள் ஒன்றே உரம்

சாந்தானந்தம் வாழ்க!

[மகரிஷி சுத்தானந்த பாரதியார்]

சத்குரு தேவன் சாந்தா னந்தன்
அறுபத் தொன்றை அப்புறம் திருப்பி
பதினா றகவைப் பச்சிளங் குமரனாய்
என்றும் வாழ்கவே எழிலார் அன்னை
புவனேஸ் வரியின் பொலியன் பருளால்
பார்க்கத் தங்கம் பழகத் தங்கம்
குணமும் தங்கம் குமரன் வடிவம்
அவதூ தர்களின் நவதூத னாக
சனாதன தருமம் தழைத்திட வந்தோன்
புதுக்கோட் டையிலும் கந்தப் பொருப்பிலும்
அன்னான் வடித்த அற்புதச் சிற்பமும்
அழகிய சிலைகளும் அம்பிகை முருகன்
அருட்குரு நாதர் அமர்சந் நிதிகளும்
வேதா கமப்படி வியன்பெறு விழாவும்
நித்திய பூஜையும் நிரம்பிய தருமமும்
அருமறை முழக்கமும் அன்ன தானமும்
கண்டு கண்டு களித்து மகிழ்ந்தேன்
ஈடிணை யில்லாப் பீடுறு துறவி
பணிவும் துணிவும் பரிவும் செறிவும்
அணியும் சடாதரன் அன்பே வடிவோன்
சொல்லும் செயலும் வெல்லுந் திறனும்
அல்லும் பகலும் அருட்கதிர் வீசும்
தெய்வப் பொலிவும் தேனார் மொழியும்
என்னென் றுரைப்பேன் என்னுள் ளத்தைக்
கொள்ளை கொண்ட வள்ளற் சாமி
வாழிய வாழிய ஊழி தோறூழி
பண்டார் வேதப் பண்பாட் டுடனே
எண்டிசை யுலகும் ஏத்திப் புகழ
நூறு நூறாண்டுகள் பேறெல்லாம் பெற்றே
அன்பும் அருளும் அமைதியும் ஆற்றலும்
சீரும் சிறப்பும் திருவும் அறிவும்
எண்ணிய தெல்லாம் இனிதுகை கூடும்
ஆற்றலும் வீறும் ஏற்றமும் பெருக
வாழிய சாந்த வரகுரு நாதன்
சுத்தா னந்தன் சொல்மனங் குளிர
நிலவுக சாந்தா னந்த நிமலனே
சிவமுரு கனுடன் சிற்பரா சக்தி
நலமெலாந் தருக ஞாலமுய் திடவே.

'காருண்யமூர்த்திக்கு கனகாபிஷேகம்'

கூத்தனூர், ஸ்ரீ சிருங்காரசுப்ரமண்ய சாஸ்த்ரிகள்

கருணையின் செயலைக் குறிக்கோளாகக்கொண்டதே மகா காவியம் யாவும் கொடிபடரக் கொம்பு கொடுப்பார்கள். ஆனால் ஒரு அரசன் தன் தேரையே கொடிக்குப்படர அளித்தானும். ஒருவன் ஒரு பறவையின் பசிதணிய ஊனைக்கொடுத்தானும். இவை யாவும் கருணையின் செயலே. அதேபோல், இக்கலியில் கருணையின்செயலை பார்க்குமிடம் உண்டா! என்றே அநேகமாக தோன்றும்போது, ஆங்காங்கே ஸ்ரீஜகன்மாதா தன் அடியார் உய்ய தன் கருணையின் அம்சமாகவே பரமஹம்சர்களை, பிறப்பித்து பிறவிச் சுழலில் தடுமாறும் ஜீவன்களை காத்து வருகிறுள் என்பது கண்கூடு. துறத்தும் பெரிய ஸம்சாரி. எத்தனையோ ஏழைகள் நினைவு அந்த துறவி உள்ளத்தில் எத்தனையோ கலியை விரட்டி, கிருத யுகத்தைநாட்ட செயல்கள் திட்டம் எழுத்தில் எழுதமுடியாத கலியுக சுகபிரம்மமோ அல்லது ஸ்கந்தனே, தக்ஷிணமூர்த்தியோ என்றே ஊன்றி கவனத்தால் தோன்றும் பெரிய, பெரிய தன, கனவான்கள் நிரம்பிய நிர்வாகம்கூட நிர்வகிக்கமுடியாத நித்ய வேதபாராயணம் ஸ்ரீபுவனேச்வரி ஆலய ஷட்காலபூஜா, பாடசாலை, ஸ்ரீஸ்கந்தாச்ரம பூஜா பாடசாலை யாவும் சாமான்யமாய் நடத்தகூடிய காரியமா? பேசலாம் யாவும் செய்வது சிரமம். அதை நடத்திக்காட்டி பண்டிதர்கள்முதல் பாமரர்வரை யாருக்கும் தாய், தந்தை, குரு தெய்வமாய் காக்ஷி தரும் ஸ்ரீ சாந்தாநந்தர் ஸத்குரு அவர்களுக்கு ஷஷ்டியப்த சாந்தி நாளில் கனகாபிஷேகம் செய்வதும், காண்பதும் பரமபாக்கியம். யாவரும் காணத் தவருதீர்கள்.



देव्यपराधक्षमापणस्तोत्रम्

தேவி அபராத க்ஷமாபண ஸ்தோத்ரம்

(ஆதிசங்கரர் அருளியது)

தமிழாக்கம்: ரா. பத்மநாபன், பம்பாய்

न मन्त्रं नो यन्त्रं तदपि च न जाने स्तुतिमहो
न चाह्वानं ध्यानं तदपि च न जाने स्तुतिकथाः ।
न जाने मुद्रास्ते तदपि च न जाने विलपनं
परं जाने मातस्त्वदनुसरणं क्लेशहरणम् ॥ १ ॥

ந மந்த்ரம் நோ யந்த்ரம் ததபி ச ந ஜாநே ஸ்துதிமஹோ
ந சாஹ்வாநம் த்யாநம் ததபி ச ந ஜாநே ஸ்துதிகதா: ।
ந ஜானே முத்ராஸ்தே ததபி ச ந ஜாநே விலபனம்
பரம் ஜாநே மாத: த்வதநுஸரணம் க்லேச ஹரணம் ॥ 1

மந்திரம் தந்திரம் அறியேன்
மாண்துதி, அழைத்திடல், தியானம்
விந்தையார் கதைஇவை அறிவேன்
விதமுறு முத்திரை அறியேன்
முந்தினேன் முறையிட நின்பால்
மூள்செயல் இஃதையே அறிவேன்;
முந்துறும் துயரெலாம் இதுவே
முற்றவும் மாய்த்திடும், தாயே!

विधेरज्ञानेन द्रविणविरहेणालसतया
विधेयाशक्यत्वात्तव चरणयोर्या च्युतिरभूत् ।
तदेतत् क्षन्तव्यं जननि सकलोद्धारिणि शिवे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ॥ २ ॥

விதேரக்ஞாநேந த்ரவிண விரஹேணலஸதயா
விதேயா சக்யத்வாத் தவ சரணயோர்யா ச்யுதிரபூத் ।
ததேதத் க்ஷந்தவ்யம் ஜநநி ஸகலோத்தாரிணி சிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி ॥ 2

पृथिव्यां पुत्रास्ते जननि बहवः सन्ति सरलाः
परं तेषां मध्ये विरलतरलोऽहं तव सुतः ।
मदीयोऽयं त्यागः समुचितमिदं नो तव शिवे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ॥ ३ ॥

ப்ருதிவ்யாம் புத்ராஸ்தே ஜனனி பஹவ: ஸந்தி ஸரலா:
பரம் தேஷாம் மத்யே விரள தரளோऽஹம் தவ ஸுத: ।
மதீயோऽயம் த்யாக: ஸமுசிதமிதம் நோ தவ சிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி ॥ 3

जगन्मातर्मातस्तव चरणसेवा न रचिता
न वा दत्तं देवि द्रविणमपि भूयस्तव मया ।
तथापि त्वं स्नेहं मयि निरुपमं यत्प्रकुरुषे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ॥ ४ ॥

ஜகன்மாதர் மாதஸ்தவ சரணஸேவா ந ரசிதா
ந வா தத்தம் தேவி த்ரவிணமபி பூயஸ்தவ மயா
ததாபி த்வம் ஸ்நேஹம் மயி நிருபமம் யத் ப்ரகுருஷே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி ॥ 4

இறைவயத்தால் அறியாமை, ஏழ்மை,
எழுசோம்பல், இயலாமை இவற்றால்
சிறிதுமுன்றன் அடிதொழாக் குறையேன்;
சீவரைஎ லாம்ஏற்றும் தாயே!
நிறைமங்க லையே! என்றன் பிழையை
நீ பொறுத்தாள்! பிழைக்குணமார் புதல்வர்
நிறையஉளர்; ஆயின்சேய் பாலே
நிச்சயம்அன் பிலாஅன்னை இல்லை. 2

இப்புவியில் அன்னையே! உனக்கோ
எண்ணிலா மக்கள்தாம் உளரால்;
இப்பையல் தான்மிக்க சேய்மை
இருந்திடுமோர் மகனலவோ? ஆக
எப்படியோ என்னைக்கை விடாமல்
இறைவியே! காத்தாள்க! மிக்க
தப்புகுண மகனிருப்பான்; ஆயின்
தயவில்லாத் தாய்எங்கும் இல்லை. 3

உலகனைத்தின் அன்னையே! உன்றன்
ஒன்பாதத் தொண்டாற்றேன்; ஏதும்
சொலுபொருள்தான் இட்டறியேன்; தேவி!
சொரிகின்றாய் அப்படியும் நிகரில்
பலபடியாய் அன்பென்பால்! என்னே!
பராபரையே! நின்மலையே! தாயே!
அலகில்லாப் பிழைசெய்ம கனுண்டு;
ஆயின்அன்பு இலாத்தாயே இல்லை. 4

परित्यक्ता देवा विविधविधसेवाकुलतया
मया पञ्चाशीतेरधिकमपनीते तु वयसि ।
इदानीं चेन्मातस्तव यदि कृपा नापि भविता
निरालम्बो लम्बोदरजननि कं यामि शरणम् ॥ ५ ॥

பரித்யக்தா தேவா விவிதவிதஸேவாகுலதயா
மயா பஞ்சாசீதேரதிகமபநீதே து வயஸி ।
இதாநீம் சேன்மாதஸ்தவ யதி க்ருபா நாபி பவிதா
நிராலம்போ லம்போதர ஜநநி கம் யாமி சரணம் ॥ 5

श्वपाको जल्पाको भवति मधुपाकोपमगिरा
निरातङ्को रङ्को विहरति चिरं कोटिकनकैः ।
तवापर्णे कर्णे विशति मनुवर्णे फलमिदं
जनः को जानीते जननि जपनीयं जपविधौ ॥ ६ ॥

ச்வபாகோ ஜல்பாகோ பவதி மதுபாகோபமகிரா
நிராதங்கோ ரங்கோ விஹரதி சிரம் கோடிகநகை: ।
தவாபர்ணே கர்ணே விசதி மனுவர்ணே பலமிதம்
ஜன: கோ ஜானீதே ஜனனி ஜபனீயம் ஜபவிதௌ ॥ 6

चिताभस्मालेपो गरलमशनं दिक्पटधरो
जटाधारी कण्ठे भुजगपतिहारी पशुपतिः ।
कपाली भूतेशो भजति जगदीशैकपदवीं
भवानि त्वत्पाणिग्रहणपरिपाटीफलमिदम् ॥ ७ ॥

சிதாபஸ்மாலேபோ கரலமசனம் திக்படதரோ
ஜடாதாரி கண்டே புஜகபதிஹாரி பசுபதி: ।
கபாலி பூதேசோ பஜதி ஜகதீசைகபதவீம்
பவாநி த்வத்பாணிக்ரஹணபரிபாடீபலமிதம் ॥ 7

என்குடும்பம் காப்பதற்காப் பலவாம்
இயல்பணியில் ஈடுபட்டே, தேவி
நன்மையளி தெய்வவழி பாட்டை
நான்துறந்தேன்; முதிர்வயதில் இன்று
நின்கருணை கிட்டவில்லை என்றால்
என்செய்வேன்? நீள்யானை முகத்தான்
தன்தாயே! ஆதரவில் லேன்யான்;
சார்துணையை நாடிஎங்குச் செல்வேன்? 5

இழிதொழிலோன் ஆயினும்,நின் மந்த்ரம்
இயைபதினைந்து அக்கரம்தன் செவியில்
விழுந்தவுடன், தேனினுமே இனிய
மெச்சுகுரல், துயர்நீக்கம், அவையில்
விழுச்சிறப்பார் செல்வமிவை சேர
மிளிர்பயனை அடைவான்;சீர் அபர்ணா!
ஒழுங்குநிலை செபம்செய்வோ னுக்குக்
கிட்டொணா ஒன்றுண்டோ? தாயே! 6

சுடுகாட்டின் நீறணிந்தோன் விடத்தைத்
துய்த்திட்டோன்; திசைஆடை புனைந்தோன்;
சடைமுடியான்! கழுத்தில்பாம் பாலாம்
மாலையான்; சீவர்கள் தலைவன்;
முடைஓட்டின் கரன்;பூதக் குழுவோர்
முதல்;பரமன் பவானியே! நின்கைப்
பிடித்துமணம் கொண்டதன்றோ உலகை
முழுதாளும் பெருந்தலைவன் ஆனான்; 7

न मोक्षस्याकाङ्क्षा भवविभव वाञ्छापि च न मे
न विज्ञानापेक्षा शशिमुखि सुखेच्छापि न पुनः ।
अतस्त्वां संयाचे जननि जननं यातु मम वै
मृडानी रुद्राणी शिव शिव भवानीति जपतः ॥८॥

ந மோக்ஷஸ்யாZகாங்க்ஷா பவவிபவ வாஞ்சாபி ச ந மே
ந விக்ஞானுபேக்ஷா சசிமுகி ஸுகேச்சாபி ந புன: ।
அதஸ்த்வாம் ஸம்யாசே ஜனனி ஜனனம் யாது மம வை
ம்ருடானீ ருத்ராணீ சிவசிவ பவானீதி ஜபத: ॥ 8

नाराधितासि विधिना विविधोपचारैः
किं रूक्षचिन्तनपरैर्न कृतं वचोभिः ।
श्यामे त्वमेव यदि किञ्चन मय्यनाथे
धत्से कृपामुचितमम्ब परं तवैव ॥९॥

நாராதிதாஸி விதினு விவிதோபசாரை:
கிம் ருக்ஷசிந்தனபரைர்ந க்ருதம் வசோபி: ।
ச்யாமே த்வமேவ யதி கிஞ்சன மய்யனுதே
தத்ஸே க்ருபாமுசிதமம்ப பரம் தவைவ ॥ 9

आपत्सु मग्नः स्मरणं त्वदीयं
करोमि दुर्गे करुणार्णवेशि ।
नैतच्छठत्वं मम भावयेथाः
क्षुधातृषार्ता जननीं स्मरन्ति ॥१०॥

ஆபத்ஸு மக்ந: ஸ்மரணம் த்வதீயம்
கரோமி துர்க்கே கருணுர்ணவேசி ।
நைதச்சடத்வம் மம பாவயேதா:
க்ஷுதாத்ருஷார்த்தா ஜனனீம் ஸ்மரந்தி ॥ 10

சீர்வீடும் உயர்பிறப்பின் எணமும்
    தெருள்ஞான மார்இன்ப நுகர்வும்
ஆர்வமுடன் அடைசிந்தை இல்லேன்;
    ஆகவே, சிவசிவ!மி ருடானி!
சீர்ருத்ரா ணி!பவாநி! என்றே
    திருநாமம் ஓதுவோர் குலத்தாம்
ஆர்பிறப்பை அடையவேண் டிட்டேன்;
    அன்னை!மதி நிகர்முகத்தோய்! தேவி! 8

மந்திரநூல் நவிலு,வழி பாட்டை
    வகையாக நானியற்ற வில்லை;
சிந்தனைசேர் மொழிகளால் ஏதும்
    செய்திலேன்; அன்னையே! யாதும்
சொந்தமிலாத் தமியேனின் பாலே
    தூயஉன்றன் தண்தயையை மிகவாத்
தந்தாளல் நினக்கேபொ ருந்தும்;
    சாமளையே! பராபரையே! தேவி! 9

கருணைக் கடலே! மங்கலையே!
    கவினுர் துர்க்கை மாதேவி!
மருவும் மிக்க துன்பத்தில்
    மனதால் ஆழ நினைநினைப்பேன்;
சிறுவன் என்ற எண்ணத்தை,
    சேரும் பிழையாக் கருதிடேல்!
உறுத்து பசி தா கத்தால்,சேய்
    தாயை நினைத்தல் உறுதியன்றே? 10

जगदम्ब विचित्रमत्र किं
    परिपूर्णा करुणाऽस्ति चेन्मयि ।
अपराधपरम्परावृतं
    न हि माता समुपेक्षते सुतम् ॥ ११ ॥

ஜகதம்ப விசித்ரமத்ர கிம்
    பரிபூர்ணா கருணாऽஸ்தி சேன்மயி ।
அபராதபரம்பராவ்ருதம்
    ந ஹி மாதா ஸமுபேக்ஷதே ஸுதம் ॥ 11

உலகன்னை! என்பால் உன்குறைவில் கருணை
உலவச்செய் தாளல் ஓர்வியப்பும் இல்லை;
பலகுற்றம் புரிந்தும் பாராள்தாய் அவற்றை;
நிலவுதயை யாலே மகனைக்கை நீக்காள். 11

मत्समः पातकी नास्ति पापघ्नी त्वत्समा न हि ।
एवं ज्ञात्वा महादेवि यथायोग्यं तथा कुरु ॥ १२ ॥

மத்ஸம: பாதகீ நாஸ்தி பாபக்னீ த்வத்ஸமா ந ஹி ।
ஏவம் ஞாத்வா மஹாதேவி யதா யோக்யம் ததா குரு ॥ 12

எனையொப்ப குற்றம் இயற்றியோர் இல்லை;
உனையொப்ப பாவம் ஓட்டுவோர் இல்லை;
எனதுநிலை இங்ஙன் அறிந்தபினே ஏற்ப
நினதருளைப் புரிவாய் நின்மலையே! தாயே! 12

॥ தேவி அபராதக்ஷமாபண ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ॥

ஸ்ரீ சாந்தானந்த விஜயம்

(அக்னிஹோத்ரம் ஸ்ரீ உ. வே. ராமானுஜதாத்தாசாரியார்)

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நடைபெறப்போவதைக் கண்டு மிகுந்த சந்தோஷத்தை அடைகிறேன். கோடிக்கணக்கில் இருக்கும் ஹிந்து ஜனங்களை கைதூக்கிவிட எத்தனை ஸ்தாபனங்கள் இருந்தாலும் போதாது. எத்தனை மஹான்கள் இருந்தாலும்போதாது. பழங்காலத்தில் மஹரிஷிகள் காடுகளிலும், குகைகளிலும் வசித்து உக்கிரமான தபஸ் செய்து உலக மக்களுக்கு நன்மையைத் தேடினார்கள். ஒரு வேதமந்த்ரம் மஹான்கள் எப்படி உதயம் ஆகிறார்கள் என்று கூறுவது கவனிக்கத் தக்கது. நதிகள் கூடும் இடத்திலும், மலைகுகைகளிலும் வசித்துவந்த மகான்கள் லோகத்தை பாதுகாத்தார்கள்.

ஆனால் இப்போது அவ்வித வாய்ப்பு இல்லாததால் மக்கள் நடுவிலேயே ஞானிகள் இருந்துவருகிறார்கள். மக்களோடு மக்களாக பழகி அவர்களை திருத்தவேண்டிய காலமிது. ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளை தெரிந்துகொள்ளாத ஆண்களோ, பெண்களோ கிடையாது. ஒவ்வொரு குடும்பமும் ஸ்வாமிகளை தங்களோடு இருப்பதாக நினைக்கிறார்கள். சிரித்த முகத்தோடு அவர்களுக்கு உபதேசமும், ஆறுதலும் சொல்லும் ஸ்வாமிகளின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்வாமிகள் எங்கு இருந்தாலும் தங்களோடு தங்களுடைய குடும்பத்தோடு கூடியிருப்பதாகப் பல்லாயிரக்கணக்கான குடும்பத்தினர் நினைக்கிறார்கள். மேலும் இவர்கள் மக்களோடு மக்களாகப் பழகி, மக்களைத் திருத்துவது தெய்வப்பணியாகவே வேதம் கூறுகிறது. இவர்களைப்பற்றிவேதம் கூறுவதைக் கவனிப்போம்.

ப்ரம்ம ஞானிகள் ப்ரம்மானுபவத்தை அடைந்தவர்கள். ப்ரம்ம நிஷ்டையிலேயே இருந்துவிடுகிறார்கள். ஆனால் கீதையில் பகவான் ஞானிகள் ப்ரம்மத்தை உலகத்தில் பார்ப்பதால் லோக ஹிதனத்தில் ஈடுபடுவதாக கூறுகிறார்.

லபந்தே ப்ரஹ்மநிர்வாணம்ருஷய: க்ஷீணகல்மஷா: ।
சின்னத்வைதா யதாத்மான: ஸர்வபூதஹிதே ரதா:

இதற்குத்தகுந்த த்ருஷ்டாந்தம் ஸ்வாமிகளின் முயற்சியே. கடந்த வருஷங்களில் லக்ஷக்கணக்கான ஹோமங்கள் நடந்திருக்கின்றது என்று அளவிட்டு சொல்லமுடியாது. மஹாசமுத்திரம்போலுள்ள மந்த்ர சாஸ்திரங்களில் காணப்பட்டுள்ள பல மந்த்ரங்கள் உயிர் பெற்றுள்ளது. மந்த்ர சாஸ்திரங்கள் ஸ்வாமிகள்மூலம் புனர் வாழ்வைப் பெற்றுள்ளன. ஸ்வாமிகளின் பிறப்பும், வாழ்வும் உலகத்திற்கு மிகவும் பயன்பட்டுள்ளன. லோகாதீதர்களான அவர்களுக்கு வாழ்வைப்பற்றிய கவலை இல்லாதிருந்ததாலும் அவரைப் போன்றவர்களின் வாழ்வு உலகத்தின் வாழ்வாய் இருப்பதால் அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்ந்துவர இறைவனை வேண்டுகிறோம்.

—

ஸ்ரீகுரு மஹிமை

உபன்யாஸக சக்ரவர்த்தி சேங்காலிபுரம் ராமதீக்ஷிதர்

பரம புண்யமான இப்பூவுலகில் அரியதான மனிதப் பிறவியை அடைந்துள்ள நமக்கு ஸ்ரீஸத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களை காணவும் அவருடன் பழகவும் அவருடைய அருளாசி பெறவும் வாய்ப்பு ஏற்பட்டது என்பது நாம் பல ஜன்மாவில் செய்த புண்ணியத்தின் பலனேயாகும்.

பெரும் புண்ணியத்தால்தான் ஸத்குரு கடாக்ஷம்கிட்டும் என்று புராண இதிஹாஸங்கள் கூறுகின்றன.

सतां सकृत्सङ्गतमीप्सितं वरं ततःपरं मित्र इति प्रचक्षते ।

நல்லோர்களை வாழ்வில் ஒருமுறை காண்பது என்பதே பெரும் புண்ணியமாகும். மிகமிகப் புண்ணியம் செய்தவர்களுக்கே மஹான்களைக்கண்டு அவர்களோடு வசிக்கும் பாக்கியம் கிடைக்கும் என்று ஸ்ரீமஹாபாரதம் கூறுகிறது. ஸ்ரீதாயுமானவ ஸ்வாமி களும் க்ஷேத்திராடனம்செய்து புண்ய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்து திருக்கோயில்களை வலம்வந்து இறைவனை தரிசனம்செய்த புண்ணியசாலிகளுக்குத்தான் நல்வார்த்தைசொல்லி கடைத்தேர வைக்கும் குரு தரிசனம் கிடைக்கும் என்று சொல்கிறார்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொல்லச் சத்குருவும் வாய்க்கும் பராபரமே'' ஒரு தபஸ்வி ஒரு சமயம் நாரதரைக் கண்டார் அவரிடம் மஹான் களின் தரிசனம் என்ன பலன்தரும் என்று கேட்டார், அதற்கு நாரதர் அவரைத் தன்னுடன் அழைத்துச்சென்று சாக்கடை நீரில் வசித்த ஒரு புழுவைக் காட்டினார். இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அப்புழுவை ஒரு காக்கை கொத்தித் தின்றுவிட்டுப் போய்விட்டது. பிறகு கிராமத்தில் ஒரு மாடு கன்றுபோடும் இடத்திற்கு அழைத்துச் சென்றார், பிறந்த கன்று இவர்களைப் பார்த்ததும் இறந்துவிட்டது.

பிறகு இராஜாவின் அரண்மனைக்கு போவோம் வாருங்கள் என்று நாரதர் தபஸ்வியை கூப்பிட்டார் அதற்கு தபஸ்வி போதும் இனி நான் எங்கும் வரவில்லை போய் பார்க்கும் இடமெல்லாம் மரணம் ஏற்படுகிறது என்றார். இதைக்கேட்ட நாரதர் இனி அப்படி ஆகாது என்னுடன் வாருங்கள் என்று சொல்லி நிர்பந்தமாய் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். நாரதரைக் கண்ட அரசன் சந்தோஷப்பட்டு ஆசனம்கொடுத்து உபசரித்தான்,

அரசனிடம் உனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கப் போகிறது, பிறந்ததும் தங்கத் தட்டில்வைத்து இங்கு கொண்டுவரச்சொல் என்று நாரதர் கூறினர்.

அதன்படியே குழந்தை பிறந்தது அரசனும் பிறந்த குழந்தையை தங்கத்தட்டில் எடுத்துவரச் சொன்னன். குழந்தையைக்கண்ட நாரதர் தான் அழைத்துவந்த தபஸ்வியைப் பார்த்து மஹான்களின் தரிசனம் என்ன பலன்தரும் என்று இக் குழந்தையை கேளுங்கள் என்ருர். தபஸ்வியும் அப்படியே குழந்தையைப்பார்த்துவினவ அதற்கு அக்குழந்தை பதில் கூறியதாவது நான் ஒரு புழுவாய் சாக்கடை நீரில் வசித்து வந்தேன் இன்று காலே தங்களேக்கண்ட பாக்யம் மதியம் ஒரு கன்ருய்ப் பிறந்தேன். மறுபடி தங்களேப்பார்த்த புண்ணியம் இப்பொழுது அரச குமாரனுய் பிறந்துள்ளேன் என்றது மஹான் களுடைய தரிசனம் நம் கஷ்டங்களேப் போக்கி இஷ்டங்களேக் கொடுக்கும். ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களே தரிசனம் செய்யவும் அவர் பிரதி வருஷம் செய்துவரும் மஹாமந்திர ஹோமங்களில் பங்குகொள்ளவும் ஸ்ரீபுவனேஸ்வரியை நினேக்கவும் நாம் பெரும் பாக்கியம் செய்துள்ளோம் என்பதில் சந்தேகமேயில்லே இம்மஹத்தான புண்ணியங்களே நமக்கு அளித்துவரும் ஞானி ஸ்ரீசத்குரு சஷ்டி அப்தபூர்த்தியை மிகச் சிறப்பாக கொண்டாட வேண்டியது நம் கடமையாகும் இவ்வைபவத்தில் நடைபெற விருக்கும் மஹாமந்திர ஹோமங்கள் வேதபாராயணம் முதலியவை களில் ஆஸ்திகர்கள் பங்குகொண்டு நன்கு உபகரித்து சகல பாக்கியங்களேயும் அடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

॥ श्री भुवनेश्वर्यै नमः ॥

இப்பாமலர் காணிக்கை

திருவெண்காடு முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்

श्री पुदुक्कोट्टैनगर विराजमान श्रीसदाशिवब्रह्मेन्द्रसरस्वत्यवधूतस्वामिनां अतिपवित्रे श्रीमदधिष्ठाने, श्री शेलं नगर विराजमान स्कन्दगिरि स्कन्दाश्रमे च कृतनियतावासानां, महामहिमसंपन्न-सद्गुरुवर-श्रीमत् स्वयंप्रकाशस्वामिप्रियशिष्याणां, शमदमादिसकलसद्गुणसंपन्नानां अनवरत श्रीभुवनेश्वरीध्याननिर्धूतनिखिलकल्मषाणां, कुण्डलिनी योगाभ्यास सञ्जात परमानन्द पयोधि निमग्नान्तरङ्गाणां. कारितानेक विविधयज्ञानां, लोककल्याण करणैक समासक्त-चित्तानां, अवधूतकुलतिलकायमानानां, श्रीसद्गुरुवर-आत्माराम - श्रीमत् शान्तानन्दावधूतस्वामिवर्याणां षष्ट्यब्दपूर्तिमहोत्सवसमये तदीयभक्तजनैः सविनयं सादरं सप्रणामं च समर्पितेयं

பெருமைமிக்க புதுக்கோட்டை நகரில் திகழும் ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் மிகப் புனிதமான அதிஷ்டானத்திலும், பெருமைமிக்க சேலம் நகரில் விளங்கும் ஸ்ரீ ஸ்கந்தகிரி ஸ்ரீ ஸ்கந்தாச்ரமத்திலும் ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் எப்போதும் தங்கி அருளுகின்றனர். ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் மஹாமஹிமை பொருந்திய ஸத்குருவரர் ஸ்ரீமத் ஸ்வயம்ப்ரகாச ஸ்வாமிகள் அவர்களின் பேரன்பிற்குரிய சிஷ்யராவார். சமம், தமம் முதலிய நற்குணங்கள் அனைத்தும் பொருந்தியவர். ஸ்ரீ புவனேச்வரிதேவியை இடைவிடாது தியானிப்பதால் மாசற்ற மஹான். குண்டலினீ யோகத்தில் ஈடுபட்டு பரமானந்தப் பெருங்கடலில் மூழ்கிய மனத்தினர். பலவித யஞ்யங்களைச் செய்வித்தவர். உலகம் உய்யவேண்டும் என்ற ஒரே எண்ணம் படைத்தவர். அவதூத ஸந்நியாஸிகளுக்குத் திலகம்போல் திகழ்பவர். இவ்வாறான பெருமைகொண்டு ஆத்மாராமராய் விளங்கும் ஸத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களுக்கு, அன்னாரது **"அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில்"** ஸ்ரீமத் ஸ்வாமிகளுடைய அன்பர்களால் வினயத்துடனும் அன்புடனும், வணக்கத்துடனும் அளிக்கப்படுகிறது.

॥ उपहारपद्यावलिः ॥

तप्तस्वर्णसमुज्वला पृथुजटाभारोद्वहा सस्मिता
देव्याराधनपूतकुङ्कुमलसत्फाला कषायावृता ।
यज्ञस्थापितहेमकुम्भविगलत्तोयाभिषेकार्द्रिता
शान्तानन्दयतीश्वरस्य विमला बाभाति सौम्याकृतिः ॥

ஸ்ரீஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் மனதைக்கவரும் உடல் வளம் உடையவர். உருக்கிவிட்ட பொன்போன்று பிரகாசிக் கின்றது அவர் திருமேனி. சிரத்தின்மீது உயரத்தூக்கிக் கட்டிய ஜடாபாரம் அழகை அதிகமாக்கும் புன்சிரிப்புத் தவழும் களங்க மற்றமுகம் அன்னை பராசக்தி ஸ்ரீபுவனேச்வரி தேவியின் திருவடித் தாமரைகளில் அன்றுடம் அர்ச்சனைசெய்த பவித்திரமான குங்குமம் அவரது அகன்ற நெற்றியில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் காவித்துணியைச் சுற்றிக்கொண்ட திவ்ய தேஹம் அகத் தூய்மையை அழகாய் சுட்டிக்காட்டும். ஆண்டுதோறும் வேத வல்லுனர்களாலும் மந்திர சாஸ்திரம் தேர்ந்த பெரியோர் களாலும் வேத மந்திரங்கள் ஓதி தங்கக் குடங்களில் ஸ்தாபிக்கப் பெற்றதும் 51 ஔஷதிகள் நிறைந்ததும் பல புண்யநதிகளினின்றும் கொண்டுவரப் பெற்றதுமான புண்ணியத் தீர்த்தங்களால் வேதியர் வேத கோஷத்துடன் நீராட்டப்பெற்ற பெரும்பேறு பெற்றவர் இவ்வாறான ஸத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களுடைய அருள்திருமேனி அன்பர்கள் உள்ளங்களில் என்றும் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

यज्जिह्वामधुरं ब्रवीति ललिते प्रत्यङ्गिरे ह्रीं शिवे
श्रीमातुर्भुवनेश्वरीति सततं यत्नं विना श्वासवत् ।
यन्नेत्रे विमले प्रपञ्चमखिलं देवीमयं पश्यतः
शान्तानन्दयतीश्वरो विजयते सोऽयं सतामग्रणीः ॥२॥

ஸாதுக்களின் முன்வரிசையில் நிற்பவர் ஸத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள். அவருடைய புண்ணியம் செய்த நாக்கு, மூச்சு விடுவதுபோல் முயற்சியின்றியே எப்போதும் லலிதே! பிரத்யங்கிரே! ஹ்ரீம்! சிவே! ஸ்ரீமாதா புவனேச்வரி என்று எப்போதும் தெளிவாகக் கூறிக்கொண்டிருக்கிறது. நாக்கு படைத்தவர் பெறும் பயன் இதைவிடச் சிறந்ததுண்டோ! ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் ஒளிமிக்க ஞானக்கண்கள் காணும் இடமெல்லாம் உலகின் இயற்கையழகைப் பார்க்காது, அவை எங்கும் அகில உலகையும் ஈன்றெடுத்த பராசக்தி ஸ்ரீ புவனேச்வரி மாதாவின் அழகிய கோலத்தையே காண்கின்றன. தாம் வழிபடும் தெய்வமாகவே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் கான்பதுவே பக்தியின் முதிர்ச்சி என்பர் பெரியோர்.

धन्यं यस्य मनः सदा परशिवस्यांके निषण्णां शिवां
ध्यायत्याश्रितवत्सलां शुभतमौ हस्तौ परांबार्चने ।
उद्युक्तौ भवतस्सुगन्धिकुसुमैः सोऽयं वरो योगिनां
शान्तानन्दयतीश्वरो विजयते षड्भिर्विमुक्तोऽरिभिः ॥३॥

ஸ்ரீஸத்குரு சாந்தானந்த ஸ்வாமி அவர்கள் காமம் க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் இவைகளினின்றும் விலகியவர். அவருடைய மனம் மிகவும் பாக்யம் செய்ததாகும். ஏனென்ருல் அது என்றும் எப்போதும் மணித்வீபத்தில் சிந்தாமணி க்ருஹத்தில் பிரம்மா முதலியவர் தாங்கும் ஸ்ரீமத் ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீபுவனேஸ்வரியுடைய இடது மடியில் இனிதமர்ந்தருளும் ஸ்ரீ புவனேஸ்வரி ஜகன்மாதாவையே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய திருக்கரங்கள், வாசனைநிறைந்த மலர்களால் எப்போதும் பராசக்தியை முறைப்படி அர்ச்சனை செய்வதிலேயே ஈடுபட்டிருக்கின்றன. இவ்வாருன மஹான் ஸத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் உலகத்தவரிடையே மிகவும் சிறந்து விளங்குகின்றனர்.

श्रीमत्स्कन्दगिरौ भवद्भिरचितः स्कन्दाश्रमः शोभनः
शैलाख्यानगरे तथैव नवसालाख्ये पुरे विश्रुतम् ।
रम्यं श्रीभुवनेश्वरीसुखनिवासार्थं कृतं मन्दिरं
श्रीकैङ्कर्ययशो निवेदनजयस्तम्भौ विभातोऽक्षयौ ॥४॥

ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் மிகவும் பாக்யம்செய்த பெரியவர். அவர் புதுக்கோட்டையில் ஸ்ரீ புவனேச்வரி ஜகன்மாதா மணித்வீபத்தையும் மறந்து மகிழ்ந்திருக்கும் வகையில் மிகவும் அழகாக ஒரு வாசஸ்தலம் அமைத்திருக்கின்றனர். அவ்வாறே சேலம், உடையாப்பட்டியில் ஸ்ரீ ஸ்கந்தகிரி ஸ்கந்தாச்ரமத்தில் பிரணவப்பொருளுரைத்த திருமுருகனுக்கும். அன்னை ஸ்ரீ துர்கா தேவிக்கும் மிகவும் அழகிய வாசஸ்தலம் அமைத்துத்தந்திருக் கின்றனர். ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் செய்த, செய்துகொண்டு இருக்கின்ற திருப்பணிகளுக்கு இவ்விரண்டிடங்களினும் அழியாத ஜயஸ்தம்பங்களாய் விளங்குகின்றன.

श्री-चण्डी-भुवनेश्वरी-रिपुहरप्रत्यङ्गिरा-शूलिनी-
दत्तात्रेय-सुदर्शने-श-शरभ-स्कन्द-ग्रहाणां कृताः ।
विघ्नेशस्य च तृप्तये तनुभृतां यज्ञा हि सौख्यप्रदाः
यैस्तेषां सदृशोऽस्ति किं क्षितितले धन्योऽवधूतोत्तमः ॥

ஸத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் மனித ஸமுதாயம் வளங்கள் அனைத்தும்பெற்று வாழ்வதற்காக, ஆண்டுகள்தோறும் மிகவும் சிறப்பாக பெருமனத்துடன், வேத விதி வழுவாது மந்திரஸித்தி பெற்றவர்களைக்கொண்டு ஸ்ரீகணபதி ஸ்கந்தர் நவக்கிரஹங்கள் லக்ஷ்மீ துர்கா புவனேச்வரி, சத்ருபாதை போக்கும் பிரத்தியங்கிரா சூலினி, தத்தாத்ரேயர், சுதர்சனம், ருத்ரன் சரபர் முதலிய பெருந் தெய்வங்களெல்லாம் மிகவும் மகிழ்ச்சியுற்று பேரருள்வழங்க பல வேள்விகளை செய்து வருகின்றனர். இவ்வாறு லோக க்ஷேமத்திற்காக வேள்விகள் பல செய்துவரும் ஸ்வாமிகளுக்கு ஈடாக மானிலத்தில் வேறு அவதூதர் உண்டோ! என்ற வியப்பு எல்லோர் மனதிலும் உண்டாகின்றது. ஆண்டுகள்தோறும் புதுக்கோட்டை வேள்வி நேரத்தில் தெய்வக்கோட்டையாக மிளிர்வதை ஆயிரக்கணக்கான பக்தர்கள்கண்டு பரவசமெய்துகின்றனர்.

जायन्ते मरणं च यान्ति मनुजाः कीटादिवद्भूतले
तेष्वेकः सुकृती विवेकसहितः सञ्जायते भाग्यतः ।
तत्राम्बाचरणाब्जलीनहृदयः श्रीसद्गुरो! योगवित्
संन्यासिष्ववधूतवर्गसहितो यज्ञे रतो दुर्लभः ॥६॥

ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் அவர்களே! இவ்வுலகில் பூச்சி, புழுக்கள்போல், மனிதர் பிறக்கின்றனர். சின்னாட்கள் வாழ்ந்து மரிக்கின்றனர். இது அன்றாடச்செய்தி. மனித சமூகத்தில் ஒரு சிலரே பாக்கியசாலியாய் விவேக ஞானம் மிக்கவனாய் பிறக்கிறான். அதில்கூட பராசக்தியின் சரணாரவிந்தங்களில் ஈடுபாடுடையவனாய் யோகத்தில் ஈடுபட்டவனாய் ஸந்நியாசியாய், அதிலும் உயர்ந்த அவதூதராய், அதிலும் வேதங்களில் நம்பிக்கையுடன் வேத வேள்விகளில் ஈடுபாடுடையவராய் தோன்றுவது (தங்களைப்போல்) மிகவும் துர்லபமன்றோ! தாங்கள் கிடைத்தது இந்த நாடும், நாட்டு மக்களும் செய்த பாக்யமே!

शान्तानन्दयतीश्वरं बुधजनाः पुम्भावमाप्तां भुवं
प्राप्तां श्रीभुवनेश्वरीं त्रिजगतामम्बां समाम्नवते ।
ये पश्यन्ति जनास्तु तं सुकृतिनः तेनापि दृष्टाश्च ये
ते धन्यास्सततं भवन्ति भुवने तेषां यशः संपदः ॥७॥

ஸ்ரீஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் புருஷ உருவம் பெற்று, பூவுலகம் வந்தடைந்த ஜகன்மாதா புவனேச்வரி தேவி என்றே கூறுகின்றனர். அவ்வாறான தெய்வீகத் தன்மை பெற்றவர் அவர். அம்மஹானை எந்தப் புண்ணியசாலிகள் தரிசிக்கின்றனரோ அல்லது எந்தப் புண்ணியசாலிகள் அவரால் காணப்பெறுகின்றனரோ அவர்களே இவ்வுலகில் பேறுபெற்றவர் ஆவார். அவர்களே புகழ்பெற்று தனதான்யங்கள் நிறையப் பெற்று பெருவாழ்வு வாழ்கின்றனர்.

मूलाधारगतां प्रबोध्य विधिवत् पद्मे सहस्रारके
देवीं कुण्डलिनीं शिवेन मुदितां संयोज्य योगेन यः ।
आनन्दार्णवसंप्लुतः प्रतिदिनं प्राप्नोति देवीकृपां
शान्तानन्दयतीश्वरं तु तमहं वन्दे नृणां भद्रदम् ॥८॥

ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் பெரிய யோகி. சித்தபுருஷர். ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் மூலாதாரத்தில் முடங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியை தன் யோக மஹிமையால் எழுப்பி, மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹம், விசுத்தி, ஆஞ்ஞாசக்ரம் என்ற ஆறு ஆதார சக்ரங்களையும் மூன்று கிரந்திகளையும் கடக்கச் செய்து சிரத்திலுள்ள ஸஹஸ்ராரகமலத்தில் சதாசிவனுடன் மகிழ்ந்திருக்கச் செய்து, அப்பரமானந்தப் பெருங் கடலில் தானும் மூழ்கியவராய் பிரதி தினமும் பராசக்தியின் அவ்யாஜமான கருணைக்குப் பாத்திரமாகின்றனர். இவ்வாறன யோகத்தில் ஈடுபட்டு மக்களுக்கு நன்மைகள் பல செய்து வருகின்றனா ஸ்ரீ ஸ்வாமிகள். அந்த கருணைமூர்த்தியான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளை நான் வணங்குகிறேன்.

वेदेष्वेव सुरक्षितेषु भविता धर्मोऽपि संरक्षितः
तेनेदं निखिलं जगत्किल भवेत् संरक्षितं सर्वथा ।
मत्वेत्थं परिपालयन्ति सततं ये पाठशाले स्वयं
तान्वेदावनदक्षिणान्यतिवरान् वन्दामहे सादरम् ॥९॥

இவ்வுலகங்கள் அனைத்தும் வளமான வாழ்வைப் பெறவேண்டுமானல் இந்நாட்டில் தர்மம் தழைக்கவேண்டும். நாம் தர்மத்தைக் காக்கவேண்டும். தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமானல், அந்த தர்மம் முழுமையாக வேதத்தினலேயே அறியத் தகுந்ததாய் இருக்கின்றது. ஆகவே வேதங்களை நாம் ரக்ஷிக்கவேண்டும். வேதங்களை ரக்ஷித்துவிட்டால் உலகத்தையே ரக்ஷித்த புண்ணியம் உண்டு. வேத ரக்ஷணம் செய்யவேண்டிய மனிதனின் முக்கியமான கடமை அதைக் கருத்தில்கொண்டே ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் புதுக்கோட்டையிலும் ஸ்கந்தாச்ரமத்திலும் இரண்டு பாடசாலைகளைநிறுவி தகுந்த ஆசிரியர்களையும்

நற்குலம் நற்பண்புநிறைந்த மாணவமணிகளையும் ஆதரித்து மிகச் சிறப்பாய் பரிபாலித்து வருகின்றனர். இவ்வாருக வேதங்களை ரக்ஷிப்பதில் ஈடுபாடுகொண்ட ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களை வணங்குகின்றேன்.

श्रीमाता भुवनेश्वरी विजयतां ह्रींकारमन्त्रोज्वला
श्रीस्कन्दाश्रमनित्यवासरसिकः स्कन्दश्च दुर्गांबिका ।
यज्ञाल्लोकहितंकरांश्च सततं कुर्वन्कृपावारिधिः
शान्तानन्दयतीश्वरो विजयतां देवीप्रसादाच्चिरम् ॥ १०

புதுக்கோட்டையில் அதிஷ்டானத்தில் இனிதமர்ந்து மக்களைக் காக்கும் ஹ்ரீங்கார மந்திரத்தின் ஒளியான ஸ்ரீபுவனேச்வரி ஜகன்மாதா வாழ்க! சேலம் ஸ்கந்தகிரி ஸ்கந்தாச்ரமத்தில் உள்ள முருகப்பெருமானும் ஸ்ரீஜகன்மாதா துர்கா தேவியும் வாழ்க, உலகம் வளம்பெற்றுவாழ எப்போதும் யக்ஞங்களைச் செய்தருளும் கருணமூர்த்தி ஸ்ரீஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அன்னை பராசக்தி ஸ்ரீபுவனேச்வரி தேவியின் திருவருளால் பல்லாண்டு வாழ்க.

त्रिशिरःपत्तनावासी मुत्तुस्वामि शिरोमणिः ।
अतनोद्यतितोषार्थं पद्यमालामिमां शुभाम् ॥ ११ ॥

இப்பாமலர் காணிக்கையை அன்பர்களின் சார்பாக ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் திவ்ய சரணரவிந்தங்களில் அவர் மகிழ்வைக் கருதி சமர்ப்பணம் செய்தவர் திருவெண்காடு முத்துசாமி சாஸ்திரிகள். இவர் இப்போது திருச்சி, பொன்னகர் ஒன்பதாம் கிராஸ், No. 159-ம் கிரஹத்தில் தங்கியிருக்கின்ருர். நியாய–மீமாம்ஸ சிரோமணியான இவர் பாரத, ராமாயண ஸ்காந்தம் முதலிய ப்ரவசனம் செய்துகொண்டிருக்கிருர். ஸ்ரீ ஸ்வாமிகளிடம் பக்தியுடையவர்.

சத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள்

புலவர் மா. கிருஷ்ணமூர்த்தி, சேலம்

'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழும் உலகம் இன்றைய உலகம். கலிதர்மம் நிறைந்து ஆட்சி செய்யும் சூழல் இன்றைய உலகின் சூழல். பரம்பொருளின் சிந்தனையா? கூடாது. வேதாந்த விசாரமா? கூடாது கூடாது இழிவு என்று துடிப்போர் பலர். இருள்சூழ்ந்த இன்றைய உலகில் குன்றின்மீதிட்ட ஞானதீபம் சத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள்.

மெய்த்துறவுபூண்ட மெய்யன்

பொருட்பற்றே மனிதனின் துன்பங்கட்குக் காரணம் பற்றற்ற தூய உள்ளம், துன்பங்கள் அணுக இயலா மேலான நெஞ்சம் நம் சுவாமிகளின் நெஞ்சம் ஒரேஒரு பற்றினைமட்டும் உறுதியாக பற்றிக்கொண்டு இருக்கின்றார் சத்குரு ஸ்வாமிகள். உரைமனம் கடந்துநின்ற பரசிவப்பற்றே அப்பற்று.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'' —திருக்குறள் 350

(பற்றில்லாதவனாகிய இறைவனுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ளவேண்டும்; உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்றவேண்டும்). மெய்த்துறவுபூண்ட மெய்யனான நம் சுவாமிகள் உலக மக்களின் அறியாமை வலையை அறுத்தெறிந்து மெய்ஞ்ஞான வழியில் மக்களை நடத்திச்செல்ல, மேனெறி அடைவிக்க இடைவிடாது தவமியற்றி வருகின்றார்.

''பொருள்அல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு'' —குறள் 351

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும் என்று நன்குணர்ந்த சத்குரு அவர்கள் ஸ்கந்த குருநாதனை மெய்ப்பொருளாக உலகுக்கு உணர்த்தி வருகின்றார்,

இருள் நீங்கவேண்டும். பேரொளி உணர்தல் வேண்டும். இன்பம் பெறவேண்டும். மருள் நீங்கவேண்டும். மாசறு காட்சி வேண்டும். ஐயத்தை நீக்கவேண்டும். தெளிவு வேண்டும். வையத்தில் வாழ்ந்தே வானம் நண்ணவேண்டும்.

கற்க வேண்டியவற்றைக் கற்கவேண்டும் அங்ஙனம் கற்பதின் பயன் என்னவெனில், மெய்ப்பொருளை உணர்ந்து மற்றீண்டு வாராமையாகும் என்று நாள்தோறும் உபதேசிக்கின்றார் நம் சத்குருநாதர்.

''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி'' [குறள்-356]

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்'' [குறள்-360]

காமம், வெகுளி, மயக்கம் எனும் இம்மூன்றும் முக்குற்றங்கள் ஆகும். இம்முக்குற்றங்கள் நீங்கின் துன்பங்கள் வராமல் கெடும் என்று உபதேசம் செய்வதோடு தம் வாழ்விலும் சுவாமிகள் வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டிவருகின்றார்கள். உலக மக்கள் இவ்வுயரிய வாழ்க்கை நெறியை உணர்ந்து வாழ்ந்து மேன்மை பெறவேண்டும்.

கலைஞர்களின் தாய்

சிற்பக்கலை நம் நாட்டின் பண்டையக் கலை. இன்று அக்கலை போற்றுவார் இல்லாமல் சிற்பக்கலைஞர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். ஸ்ரீ ஸ்கந்தாச்ரமம் மற்றும் புதுக்கோட்டை அதிஷ்டானத்திலும் நம் ஸ்வாமிகள் கம்பீரமான பஞ்சமுக ஆஞ்சனேயர், பஞ்சமுக விநாயகர், தத்தாத்ரேயர் சிலைகளை நிறுவியதுடன் எண்ணற்ற யோகிகள், முனிவர்களின் சிலை வடிவத் திருமேனிகளை நிறுவி நம் ஆன்றோர்களின் மேன்மையினை உலகுக்கு உணர்த்தி வருகின்றார்.

சாதுர்மாஸ்ய விரதம், மற்றும் இந்துமத திருவிழா சிறப்பு நாட்களிலெல்லாம் நாதசுர இன்னிசை, கச்சேரிகள் முதலிய வற்றின்வழி மக்களின் பொழுதுபோக்கும் சத்விஷயத்தில் அமையுமாறு செய்கின்றார்.

கற்றலின் கேட்டலே நன்று என்பர் ஆன்றோர்கள். நம் சத்குருநாதர் விசேட நாட்களிலெல்லாம் சத்கதா காலட்க்ஷேபங்களின் வழியாக எண்ணற்ற அன்பர்களைச் சிரவணம் செய்விக்கின்றார். இங்ஙனம் சத்குருநாதர் அவர்கள் சிற்பக் கலைஞர்கள், இசை மேதைகள் கற்றறிந்த புலவர்கள் என அனைவருக்கும், அனைத்துக் கலைகளையும் வளர்க்கும் கலைஞர்களின் தாயாக விளங்கி வருகின்றார்கள்.

வேத பாடசாலைகளும் மஹாயக்ஞங்களும்

சேலத்திலும் புதுக்கோட்டையிலுமாக அவர்கள் இரண்டு வேத பாடசாலைகளை நடத்தி வருகின்றார். இந்த நாட்டின் பண்பாட்டினுக்கும் மேன்மைகளுக்கும் வேதங்களே ஆணிவேர். சுவாமிகளின் திருவருளினால் வேதங்கள் தழைக்கின்றன.

நவராத்திரியிலும் கோடை காலத்திலும் தவறாது புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் மஹாயக்ஞங்கள் நடைபெறு கின்றன. யாகங்களின் சிறப்பு வெளி நாடுகளிலும் பரவி அக்காலங்களில் வெளிநாட்டு யாத்ரிகர்கள் வருவதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.


உலக நன்மைக்காக வேதகால மஹரிஷிகள் ஆரண்யங்களில் யாகங்கள் நடத்திவந்தனர். இன்று நம் சற்குருநாதர் உலக நன்மைக்காகப் புதுக்கோட்டையில் மஹாயாகங்களைப் பயன் கருதாது செய்துவருகின்றார்.

யாகத்தையும் ஆச்ரம நடைமுறைகளையும் நேரில் காணுவோர் கிருத யுகத்திற்கும், திரேதா யுகத்திற்கும் சென்று விடுவர்.


இத்தகு மேன்மைகளையுடைய நம் சத்குருநாதர் இன்று உலக மக்களுக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்ற மஹான், லோகாரியர். ஆசான் வழியே அனைவருக்கும் பலம் சித்தியாகும். புவனேச்வரி மாதாவும், ஸ்கந்தகுருநாதனும் உலக மக்களின் நன்மைக்காக நம் சற்குருநாதரைப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் நம்மிடையே இருக்கச்செய்து, உலக மேன்மையை விழையவேண்டும் என்று ப்ரார்த்திப்போமாக.

கோள்கள் கூறும் ராமன் கதை


மந்த்ர சாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜ்யோதிஷ கல்பதரு,
உபன்யாஸக ரத்னம், ஸ்ரீ குருவாயூரப்பதாஸன்
B. சுந்தரராமன், M. A., B. Ed.,
பழமானேரி அஞ்சல், (வழி) திருக்காட்டுப்பள்ளி-613 104




ஸ்ரீராமர் ஜாதகம்



ஸ்ரீபரதன் ஜாதகம்



ஸ்ரீலக்ஷ்மணன் ஜாதகம்



ஸ்ரீசத்ருக்னர் ஜாதகம்

பர்ஜனம் பவ பீஜானும் அர்ஜனம் ஸுகஸம்பதாம் |
தர்ஜனம் யம தூதானும் ராம ராமேதிகர்ஜனம் ||

1. புனர்ப்பூசம் 4-ம் பாதத்தில் பிறந்தவர்கள் தம் உருவ அமைப்பால் பிறரைக் கவரக்கூடியவர்கள். கம்பீரமாகப் பேசும் பண்பு, ஒரே நேரத்தில் பல சிந்தனை, கைகால்கள் நீண்டு கண்கள் அகன்று ஆஜானபாஹுவான தோற்றம் உடையவர்கள். கோபிக்காதவர்கள். இவையனைத்தும் 'ஸ்ரீராமனுக்கும் பொருந்தி இருக்கக்காண்கிறோம்.

2. லக்னத்தில் சந்திரன் உள்ளதாலும், மூத்த சகோதர ஸ்தானாதிபதி (11ம் அதிபதி) பெண் கிரகமான சுக்ரன் ஆனபடியாலும், அந்த சுக்ரன் தன் பாக்யத்தில் உச்சம் பெற்று, குரு பார்வை பெறுவதாலும் பெண் சகோதரம் இருக்க நியாயமுண்டு. ராமனுக்கு மூத்த சகோதரி சாந்தை என்ற பெண் தசரதனுக்கு இருந்து அவளை ரோமபாதன் என்ற மன்னனுக்கு தசரதன் தத்து கொடுத்து அவள் ரிஷ்ய சிருங்கரை மணந்த வரலாற்றை தசரத காவியம் போன்ற நூல்கள் கூறுகின்றன.

3. சூர்யன், குரு, சனி, செவ்வாய் இந்நால்வரும் சர ராசி களிலேயே அமையப்பெறின் அந்த ஜாதகர் உலகில் ஏதாவது ஒரு நூதன சாதனைசெய்து உலகப்புகழ் பெறுவர். ஸ்ரீராமனுக்கு இவ்விதம் அமைவதோடு இந்நால்வரும் உச்சமாக அமைவதால் பாறுங்கல்லை அகல்யை எனும் பெண்ணாக்கினார். கடலில் அணை கட்டினார். ஒப்பற்ற சிவதனுசை முறித்தார். இன்னும் பல வியத்தகு செயல்களைச் செய்தார்.

4. 4ல் சனி இருப்பின் ஞானி; யாத்திரையில் விருப்பம் எவ்வளவு சுகம் கிடைத்தாலும் அதில் பற்று வைக்கமாட்டார் எவ்வளவு உயர் பதவி கிடைத்தும் திடீர் வீழ்ச்சி உண்டு. பிறந்த இடத்தைவிட்டு வேறு இடவாசம் ஏற்படும். ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகத்தை அடையும் அரச பதவி உண்டு என்றபோதும் இல்லை என்றபோதும் அன்றலர்ந்த செந்தாமரை போன்ற மாறாத முக அமைப்பும் ஞானவானாகிய உயர்பண்பும் இந்த கிரக அமைப்பால் கிடைக்கின்றன.

5. லக்னம் கடகமாகி அதில் சந்திரன் இருக்க, சூர்யன் 10ல் உச்சனாகி இருக்கப் பிறந்த ஜாதகன் அவன் தந்தை இறக்கும் போது அருகில் இருக்கமாட்டான் என்பது விதி. இவ்வித அமைப்பு ஸ்ரீராம ஜாதகத்தில் உள்ளதால் தசரதன் இறக்கும் போது ராமன் அருகில் இல்லை.

6. 10ம் இடத்தின் அதிபதி மகரத்தில் இருந்தால் ஏர் உழுதல், விவசாயம், மட்பாண்டங்கள் செய்தல் ஆகியவற்றைக் குறிக்கும். ஸ்ரீராமனுக்கு இவ்விதம் இருப்பதால் வனவாசத்தின் போது இத்தகைய கடின வேலைகளையும் தம்பி லக்ஷ்மணனுடன் செய்ய நேர்ந்தது. ஸ்ரீராமனுக்கு 10ல் புதன் இருப்பதால் அனைத்துக் கலைகளிலுமே அவர் தேர்ச்சிமிக்கவர்.

7. ஸ்ரீராமனுக்கு ஜீவனஸ்தானமான 10ம் இடம் மேஷம். இது காடுகளைக் குறிக்கும். இங்கு மலைக்கு காரகத்வம் வாய்ந்த சிம்மத்தின் அதிபதி சூர்யன் உச்சம். எனவே ராமனின் வாழ்க்கையில் பெரும்பகுதி காடுகளிலும் மலைகளிலுமே நடந்தது.

8. 7ல் பாப கிரகங்களோ, செவ்வாயோ இருப்பினும், 6ல் ராகு இருப்பினும் பெண்பகை ஏற்படும். ஸ்ரீராமனுக்கு 7ல் செவ்வாயும் 6ல் ராகுவும் இருப்பதால் தாடகை, கைகேயி, சூர்ப்பனகை, கூனி ஆகிய பெண்பகை ஏற்பட்டு அவரது வாழ்க்கைப் பாதையே திசை திரும்பியது.

9. 6ம் இடம் நான்கு கால் ஜீவனால் வரும் ஆபத்தைக் குறிக்கும். சந்திரன் கொம்புள்ள ஜீவனால் வரும் தீங்கைக் குறிப்பான். ஸ்ரீராமனுக்கு 6ம் அதிபதி குரு லக்னத்திலேயே சந்திரன் சேர்க்கை பெற்று அமைவதால் நான்கு காலும் கொம்பும் உள்ள மாரீசமானல் தீங்கும் ஆபத்தும் ஸ்ரீராகவனுக்கு ஏற்பட்டது.

10. 10ம் அதிபதி மகரத்தில் இருந்தால் இறந்தவர்களை அடக்கம் செய்யும் தர்மத்தில் ஈடுபடுவான் என்பது விதி. ஸ்ரீராமபிரானுக்கு இவ்விதம் உள்ளதால் ஜடாயுவுக்கு தன் கையால் தகனம் செய்தார். கபந்தனை எரித்தார். விராதனைப் புதைத்தார். மற்றபடி வாலி, ராவணன் ஆகியோருக்கு அவர்கள் தம்பியர் நீர்க்கடன் இயற்றவும் ஸ்ரீராமன் உறுதுணையாக இருந்தார்.

11. 10ம் அதிபதி மகரத்தில் உச்சம் பெற்றால் விலங்குகள் கால்நடைகளுடன் ஜீவனத்தைக் குறிக்கும். குரங்குகளுடன் ஸ்ரீராமன் பழகி அவைகளையும் கவர்ந்து குரங்குப் படைக்கே தலைவன் ஆனதும் இதனால் தானே?

12. 6ல் ராகு சத்ருக்களை மித்ருவாக்குவான். ஸ்ரீராமனுக்கு இவ்விதம் உள்ளது. அன்றியும் 6ல் பாவர் அமர்ந்து ஆறும் அதிபன் கேந்திரம் ஏறி நின்றால் எதிரிகளையும் தன் வசப்படுத்தும் குணநலன் உடையவன் ஆவான் என்கிறது ஜாதக அலங்காரம் ஸ்ரீராமனுக்கு 6ல் ராகு அமர்ந்து ஆறும் அதிபதி செவ்வாய் 7ல் கேந்திரம் ஏறி நிற்பதால் முதலில் விபீஷணன் சரணாகதி அடைந்தான். பகைவர்களான ராவணன், இந்த்ரஜித், கும்ப கர்ணன், ஆகியோரும் இதனால் தான் ராமனுடைய குணானு பவத்தில் ஈடுபட்டு அவரைப் புகழ்கின்றனர்.

13. ஸ்ரீராமனுக்கு 10ல் புதன் நிற்பதாலும், புதன் கேந்திர ஸ்தானமான 10ல்நின்று ராசியடிற்குரிய சூர்யன் உச்சம்பெற்று, சுக்ரன் உபயராசியில் ஏறி 3ல் பாவர் அமையாது சுக்ரன் உச்ச மாவதால் ஜோதிட நூல் வல்லவராக விளங்குகிறார். ஆரம்பத் திலிருந்தே சகுன சாஸ்திரங்கள், கோள்கள் நிலையைக் குறிப்பிட்டு ஸ்ரீராமன் இலக்குவனிடம் ஆங்காங்கு பேசிவருவது இக்கருத்தை வலியுறுத்தும். ஸ்ரீராமனுக்கு ஆதித்ய ஹ்ருதய உபதேசம் அகத்தியரால் ஏற்பட்டு ராமன் சூர்ய பகவானை திருப்திப் படுத்துவதும் ஜோதிடநூல் அறிவினாலேயேயாகும்.

14. ஸ்ரீராமனுக்கு ஜலராசிக் கிரகங்களான குரு, சந்திரன் ஆகிய இருவரும் ஜல ராசியில் நிற்றலாலும்; சந்திரன் ஆட்சி, குரு, சனி இருவரும் உச்சமாவதாலும் அன்னிய தேச வாஸத்தைக் குறிப்பிடுகின்றது. 12ல் கேது அமர்ந்து அந்த 12ம் அதிபதி ஜீவன ஸ்தானமான 10ல் இருப்பதாலும், சந்திரனுக்கு 10ல் சூர்யன்+புதன் இருப்பதாலும், கடல் கடந்து இலங்கை சென்றார். அன்றியும் 3க்குடையவர் சர ராசியில் நிற்கவும், அச்சர ராசியாதிபதியும் லக்னாதிபதியும் ஒருவருக்கொருவர் பார்வைபெற்றும், அந்த இருவரும் கேந்திரம் ஏறியும் அமையும் ஜாதகர் வெளிநாடுசென்று புகழ், தனம் சேர்ப்பர் என்பது ஜோதிட விதி. ஸ்ரீராமனுக்கு இதன்படி 3க்குடைய புதன் சர ராசியான மேஷத்தில் இருக்கிறார். அந்த மேஷத்திற்குரிய செவ்வாயும், லக்னாதிபதி சந்திரனும் ஒருவருக்கொருவர் பார்வை பெறுகிறார்கள். இந்த செவ்வாய், சந்திரன் கேந்திரம் ஏறியும் இருக்கிறார்கள். எனவே இலங்கைசென்று வெற்றியும், புகழும், பொருளும் சேர்த்து வந்தார் ராகவன்.

15. 4, 9ம் அதிபர் உச்சமாகியோ அல்லது இருவரில் ஒருவர் லக்னத்தில் இருந்தாலும் வாகன வெகுமதிகிட்டும் என்பது

விதி. ஸ்ரீராமனுக்கு 4ம் அதிபன் சுக்ரன். 9ம் அதிபதி குரு ஆகிய இருவரும் உச்சம். இருவரில் 9ம் அதிபன் குரு லக்னத்திலும் உள்ளான். எனவே ராம ராவண யுத்தத்தில் இந்திரன் தன் தேரை மாதலி என்னும் தன் தேரோட்டிமூலம் ஸ்ரீராமன் உபயோகத்திற்கு அனுப்பினான். அன்றியும் ராவணனது புஷ்பக விமானம் விபீஷணனால் ஸ்ரீராமனுக்கே காணிக்கையாக அளிக்கப் பட்டு ஸ்ரீராமன் அயோத்தி மீண்டதும் அந்த விமானத்தின் உண்மை உரிமையாளனான குபேரனுக்கே திரும்பவும் அளிக்கப் பட்டது.

16. 7ம் பாவத்தின் அதிபதி 4ம் பாவத்தில் இருந்தால் ஜாதகருக்கு மனைவிமேல் சந்தேகம் ஏற்படும். சில சமயம் பொருட்படுத்தாதவர்போல இருந்தாலும், வேறுசில சமயங்களில் மனைவியை சந்தேகிப்பார். சக்ரவர்த்தித் திருமகனும் இதற்கு விதிவிலக்கு இல்லை. 7ம் பாவத்தின் அதிபதி சனி 4ல் உச்சமாக வேறு இருப்பதால் உலகை அனுசரிக்கவேண்டி தவம்செய்த தவமாம் தையல் அன்னை சீதையையே ராகவன் சந்தேகித்து தீக்குளிக்கவைத்தார். அக்னி பிரவேசமாகித் தன் வலிய கற்பினால் நெருப்பையே சுட்டியெரித்த கற்பின் கனலி சீதா தேவியை மீண்டும் சந்தேகித்துத்துக் கானகம் அனுப்பினார்.

17. லக்னத்தினிலே சந்திரன் அமர்ந்து அவரைப் பாவ கிரகம் பார்க்க, 7ல் செவ்வாய் நிற்கத் தன் பிள்ளைகளைப் பிறர் வீட்டில் வளர்ப்பார் என்பது விதி. ஸ்ரீராகவனுக்கு லக்னமான கடகத்தில் சந்திரன் ஆட்சியாகி, அந்த சந்திரனை செவ்வாய், சனி ஆகிய இரு கொடிய பாவர்கள் பார்க்கிறார்கள். அன்றி 7ல் செவ்வாயும் நிற்கிறார். எனவே காகுத்தனின் இரு குழந்தை களான லவகுசர்கள் தந்தையின் வீடான அயோத்தி மாளிகையில் பிறக்காமல் கானகத்தில் தவசி வாள்மீகியின் ஆசிரமத்தில் பிறந்து அங்கேயே வளர்ந்தனர்.

18. ஸ்ரீராமபிரானுக்கு 7ம் அதிபதி சனி ஆதலாலும், 7ல் செவ்வாய் உள்ளதாலும், 7க்கு அதிபன் சனி சரராசியில் உள்ள தாலும் 7ல் பாவிஉள்ளதாலும், 2க்கு உரியவனுடன் 12க்கு உரியவன் கூட்டு ஏற்படுவதாலும், செவ்வாய் 2ஐயும், சனி 2ம் அதிபனையும் பார்த்தலாலும் 10ல் சூர்யன் உள்ளதாலும், இரு தாரம் என்று ஜோதிடம் கூறுகிறது. ஏகபத்னி விரதனை கருணைக்கடவுள் ராமச்சந்திரனை இவ்விதம் கருத்திற்

கொள்ளலாமா? என்றால் கிரக அமைப்பு இவ்விதம் இருப்பதால் அச்வமேதயாகம் நடந்தபோது மனைவி சீதை அருகில் இருக்க வேண்டும் என்ற நியதிப்படி அந்த சீதாதேவி அருகில் இல்லாததால் ஒரு ஸ்வர்ண பிரதிமையை சீதைபோல் செய்து அதை மனைவியாக வரித்து, யாகத்தை ஸ்ரீராமன் பூர்த்தி செய்தார். எவ்விதமோ ஜோதிடம் பொய்க்கவில்லை அல்லவா?

19. சுக்ரன் 9ல் உச்சமானாலும், 10ல் புதன் நின்றாலும் பிரசாரத்தால் புகழ். ஸ்ரீராமனுக்கு இவ்வித அமைப்போடு, குரு பார்வையும் சுக்ரனுக்குக் கிடைப்பதால் ஸ்ரீராமன் புகழ் உலகமெங்கும் இன்றளவும் வால்மீகி, கம்ப ராமாயண பிரசங்கங்களால் பல்கிப் பெருகிவருகிறது அல்லவா? உலகம் உள்ளமட்டும் ராமன் புகழ் நிச்சயம் உண்டு.

20. ஸ்ரீராமனுக்கு உள்ள யோகங்களில் முக்கியமானவை பின்வருமாறு :—

1. ஸ்ரீகண்டயோகம்

லக்னாதிபதி, சூர்யன், சந்திரன் ஆகியோர் உச்சம் அல்லது கோணம் அல்லது ஆக்ஷி அல்லது நட்புபெற்று கேந்திர திரிகோணங்களில் இருத்தல் ஸ்ரீகண்டயோகம். இதன் பயன், விபூதி, ருத்ராக்ஷம் தரித்தல், இடைவிடாத சிவ த்யானம், சைவத்தை அனுசரித்தல் ஆகும். ஸ்ரீராமனுக்கு இவ்வித அமைப்பு இருப்பதாலும், தவிர 10ல் புதன், 12ல் கேது இருப்பதாலும் ராமேச்வரத்தில் ஈசனுக்கு லிங்க பிரதிஷ்டை, கோயில் பணி செய்து ஈசனை வழிபட்டார்.

2. கேஸரி யோகம், குரு சந்திரயோகம், கஜ அச்வாம்பர யோகம்:

சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு நிற்றல் கேஸரியோகம் இதன் அமைப்பால் சத்ரு ஜயம், நீண்ட ஆயுள், கீர்த்தி, செல்வம் ஆகியவற்றை ராகவன் அனுபவித்தார்.

குரு சந்திரனுடன் எவ்வகையிலேனும் சம்பந்தப் பட்டிருத்தல் குரு சந்திர யோகம். குரு, சந்திரன் ஆகிய இருவரும் கூடியிருத்தல் கஜ அச்வாம்பர யோகம் இவை

இரண்டும் ராமபிரானுக்கு இருந்ததால் யானை, குதிரைபோன்ற செல்வச்சேர்க்கைகளையும் ராஜ்யாதி பாரத்தையும் ராமன் அனுபவித்தார்.

3. புஷ்கள யோகம்

லக்னாதிபனும், சந்திரா லக்னாதிபனும் (ராசியாதிபன்) கேந்திரம் அல்லது மித்ரு வீட்டில் நிற்க அமைவது புஷ்கள யோகம். இந்த அமைப்பு தாசரதிக்கு இருந்ததால் ஆபரணம், கீர்த்தி, தலைமை, பிரபுத்வம் ஆகியவற்றைப் பெற்றார்.

4. விருஞ்சி யோகம்

லக்னாதிபதி குரு, சனி ஆகியோர் உச்சம் அல்லது ஆட்சி பெற்று கேந்திரம் அல்லது திரிகோணங்களில் இருந்தால் அது விரிஞ்சி யோகம். இதன் பலனாக நற்குணம் நல்வாக்கு, வேதக் கல்வி, தீர்காயுள், புலனடக்கம் வைதீக நெறியில் நிற்றல், நன்மக்கட்பேறு ஆகியவற்றை ஸ்ரீராமன் பெற்றார்.

5. காகள யோகம்

லக்னாதிபதி, ஸப்தமாதிபதி இவர்களில் ஒருவன் நின்ற ராசி நாதன் ஆட்சி அல்லது மூல த்ரிகோணம்பெற்று கேந்திர திரிகோணங்களில் நின்றால் அது காகள யோகமாகும். இதன் பலனாக ஸ்ரீராமன் பலராலும் வணங்கப்படும் தகுதியை அடைந்தார்.

மேற்கண்டவைதவிர சரஸ்வதி யோகம், லக்ஷ்மி யோகம், குருமங்கள யோகம், சசிமங்கள யோகம் போன்ற பல யோகங்கள் ஸ்ரீராமன் ஜாதகத்தை அழகு செய்கின்றன.

அடியேனுடைய இந்த ஆராய்ச்சிக் கட்டுரைமூலம் கோள்கள் ஸர்வ வல்லபனான ஸ்ரீராமனை ஆட்டிப் படைத்துவிட்டதாக எண்ணக்கூடாது. ஸ்ரீராமன் உலகத்தை அனுசரிக்கவேண்டி இந்த கிரக நிலைமைகள் இருக்கும்போது தான் உலகினில் அவதாரம் செய்தால்தான் இன்ன கார்யங்கள் நடக்கும் என்று திருவுள்ளம் பற்றியே கோள்கள் இவ்விதம் அமைந்த வேளையில் தான் ஜனித்து உலகின் துயரைத் தீர்த்தார்.

ஸ்ரீராம ஷ்டாக்ஷரி மந்திரம் பின் வருமாறு!

''ஓம் ராம் ராமாய நம:''

காமராஜ பீஜ யுக்தமானது: ''ஓம் க்லீம் ராமாய நம:''
மாயா பீஜ யுக்தமானது: ''ஓம் ஹ்ரீம் ராமாய நம:''
இவைகட்குரிய மாலா மந்த்ரம்:

''ஓம் நமோ பகவதே ரகுநந்தனுய''

ஹோமங்கட்கு நம: என்பதற்குப் பதில் ''ஸ்வாஹா'' என்று உச்சரிக்கவேண்டும். இதை அருகம் புல்லால் ஹோமம் செய்ய வியாதி நாசம், வெண்கடுகால் ஹோமம் செய்ய சத்ரு நாசம், சர்க்கரைப் பொங்கலால் ஹோமம் செய்ய காரிய ஸித்தி, வெண்பட்டால் ஹோமம் செய்ய வெள்ளி வியாபார அபிவிருத்தி, மஞ்சள் பட்டால் ஹோமம் செய்ய தங்க நகை வியாபாரம், மஞ்சள் கிழங்கால் ஹோமம் செய்ய விவாஹ ப்ராப்தி ஏற்படும். ஹோமம் செய்துகொள்ள விரும்பும் நேயர்களும், ஸ்ரீராமர் ஜாதகம் இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்பும் நேயர்களும், 0-80 பைசா தபால் தலை வைத்து ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் B. சுந்தரராமன், பழமார்நேரி வழி, திருக்காட்டுப்பள்ளி 613104 தஞ்சை ஜில்லா என்ற முகவரிக்கு எழுதிப் பயன் பெறலாம். ஜாதகப் பரிசிலனைகட்கு ஒரு கேள்விக்கு ரூ. 5/- வீதம் M. O. செய்யலாம்.

துன்மதி ஆண்டு வருஷப் பிறப்பும், ஸ்ரீராம நவமியும் ஒரே தினத்தில் வருவதால் எங்கும் மங்களம் பொங்கட்டும்.

ஸ்ரீஸத்குருநாதரின் ஜாதக ஆராய்ச்சி

ஜ்யோதிஷ ரத்னம் B. ரவீந்திரன், B. A.,
2, கிழக்கு ஒற்றைத் தெரு அக்ரஹாரம், திப்பிராஜபுரம்-612402
கும்பகோணம் (வழி)

சூர்	செவ் கேது சுக்ரன்		
புதன்			
			குரு சனி
ல/	சந்	ராகு	

ஸ்ரீ ஸ்வாமிகள் ஜாதகம்

மஹான் ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் கடந்த 60 ஆண்டுகட்கு முன் ரௌத்ரி வருஷம் பங்குனி மாதம் க்ருஷ்ணபட்சம் விசாக நட்சத்திரத்தில் இந்த பூலோக ஜனங்களை உத்தாரணம் செய்வதற்காக திரு அவதாரம் செய்தார். இவரது ஜாதக ஆராய்ச்சியை சமீபத்தில் ஒரு ஜோதிட இதழில் கண்டேன். ஆனல் அக்கட்டுரையில் ஸ்ரீஸ்வாமிகளின் அவதார கால கிரஹ நிலைமையும் தரப்படவில்லை. அந்த கிரஹ நிலைமையை தன் வாழ்க்கையில் ஸ்ரீயதிராஜர் எவ்விதம் அனுசரித்தார் என்பதும் கூறப்படவில்லை. ஆனல் நமது சத்குருநாதரின் ஜாதக அமைப்பும், மற்றும் சில மஹான்களின் ஜாதக அமைப்பும் ஒப்பிடப்பட்டு இருந்தது. இந்த ஒப்புமையை படித்த நாள் முதலாக எனக்கு சுவாமிகளின் ஜனன ஜாதகரீதியாக மேலும் சில புதிய தகவல்களை வாசகர்கட்கு தரவேண்டும் என்ற ஆவல் இருந்துவந்தது. அத்தகைய பவித்ரமான ஜ்யோதிஷ ஆராய்ச்சியை பூஜ்யஸ்ரீ சுவாமிகளின் அனுக்ரஹத்துடனும், எனது ஸஹோதரரும், எனக்கு ராமஷடாக்ஷரீ, அகோராஸ்த்ரம்,

போன்ற மஹாமந்த்ரங்களை உபதேசம் செய்துவைத்த என்து குருநாதருமான பழமார்னேரி ஸ்ரீகுருவாயூரப்ப தாஸன் சுந்தரராமன் அவர்களின் ஆசீர்வாதத்துடனும் தொடங்கு கிறேன்.

1. ஜம்புரிஷிவாக்யம் என்ற நூலில் கூறியபடி ஸ்ரீஸ்வாமி களுக்கு ஒன்பதாம் அதிபதி சூர்யன் குருவுடன் பரிவர்த்தனை பெறுவதாலும் மூன்றும் அதிபதி சனியுடன், குரு கூடியுள்ள தாலும், சந்யாசியாகி மடாதிபதியாக விளங்குகிறார்.

2. தேசிகரின் குமார சுவாமியம் என்ற நூலில் செவ்வாய் கேந்திரம் அல்லது கோணமேறி, ஆட்சி அல்லது உச்சமாகி, சுபர் சேர்க்கை அல்லது சுபர் பார்வைபெற அமைந்தால் அதை "ருசக யோகம்" என்று குறிப்பிடுகிறது. ஸ்ரீபுதுக்கோட்டை பெரியவாளின் ஜாதகத்தில், த்ரிகோணத்தில் செவ்வாய் ஆட்சி ஆகி, நீசபங்க ராஜயோகமாக அமைந்து சுபரான குரு பார்வை பெறுவதால் கீர்த்தி, தேஹகாந்தி, கரசரணங்களில் உத்தம ரேகைகள் காணப்படுகிறது.

3. கேதுவும், செவ்வாயும் எங்கு கூடினாலும் ஞானியாக இருப்பார்கள். 9 அல்லது 11ல் கூடினால் ராஜயோகி வள்ளலார் ராமலிங்க சுவாமிகள்போல் ஐந்தாம் இடத்தில் கூடினால் கர்ம யோகி. நம் யதீந்த்ராளுக்கு ஐந்தாம் இடத்தில் இவ்விதம் இருப்பதால் லோக க்ஷேமத்தை விரும்பும் கர்ம யோகியாக விளங்குகிறார்.

4. லக்னாதிபதி குரு சந்திர கேந்திரம்பெற்று லக்ஷ்மி யோகம் அமைவதால், தேஜஸ், பிரஸித்தியுடன் விளங்குகிறார்.

5. இரண்டாம் அதிபதி சனி பகையிலும் 7ம் அதிபதி புதன் மூன்றில் மறைவும், எட்டாம் அதிபதி விரயத்தில் நீசமாகியும், வலிமை குன்றி, 3, 5, 12ம் பாவங்கள் வலுத்தும் இருப்பதால் தான் தலைசிறந்த துறவியாக விளங்குகிறார்.

6. 9ல் குரு இருப்பதால் பல மஹான்களிடம் உபதேசமும், 9ம் அதிபதி கேந்திரம் ஏறியதால் ஞானியாகவும், குரு சுக்ரனையும் பத்தாம் அதிபதி புதனையும் பார்ப்பதாலும், குரு சுக்ரர் நன்றாக உள்ளதாலும், அடிக்கடி யாகங்கள், ஹோமங்கள்செய்து உலக நலனுக்குப் பாடுபடுபவராகவும் விளங்குகிறார்.

7. ஐந்தாமிடமும், ஏழாமிடமும் மந்த்ர ஸ்தானமாகும். சுவாமிகளுக்கு ஐந்தாமிடத்தில் மோக்ஷ ஸ்தானாதிபதி செவ்வாய் ஆட்சி. சந்திரன் நீசமாகி, செவ்வாய் ஆட்சி பெற்று நீசபங்க ராஜயோகம் அமைகிறது. மோக்ஷகாரகன் கேதுவும் ஐந்தில் உள்ளார். அசுரகுரு சுக்ரனும் உள்ளார். எனவேதான் சந்திர, சுக்ரரது காரகமாக மாதா புவனேச்வரி உபாஸனையும், அங்காரக காரகத்வமாக சேலம் ஸ்கந்தகிரி அமைத்து ஸுப்ரமண்ய உபாசகராகவும் விளங்குகிறார். மோக்ஷ மார்க்கத்தில் தலைசிறந்து விளங்குவதற்கும் இதுவே காரணமாகும்.

8. ஏழாம் அதிபதி புதன் தைர்ய ஸ்தானத்தில் மறைவதால் தைரியமாக மந்த்ரங்களில் பல புதிய உத்திகளைக் கடைபிடிக்கிறார். ஸ்ரீமத் ராமாயணத்தில் வஸிஷ்டர், தசரதனிடம் விச்வாமித்ரரை பற்றிக் கூறுகையில், ''இவர் தாமே பல புதிய மந்த்ரங்களையும், அஸ்த்ரங்களையும் படைக்க வல்லவர்'' என்கிறார். இந்த்ரஜித்தின் மீது லக்ஷ்மணன் ஐந்த்ராஸ்த்ரத்தை விடும்போது, அதற்கு ராம சக்தியை ஸம்புடிதம் செய்ததுபோல், நமது ஸத்குருநாதர் பல செயல்கள் செய்துள்ளார். உதாரணமாக 'யேனேதுச்சரிதாஸோ' எனத்தொடங்கும் அதர்வரிக்கை ஸம்புடிதம் செய்து ''அஸ்த்ர வாராஹீ'' ஹோமம் நடத்தினார்கள்.

9. சூர்யனுக்கு இருபுறமும் கிரகங்கள் இருப்பதாலும், 4ம் இடத்துடன் குரு சம்பந்தம் இருப்பதாலும் ஸ்வாமிகளின் எந்த ஸத்காரியங்களுக்கும் மஹாலக்ஷ்மி கடாக்ஷம் குறைவற உண்டு. மேலும் லாபாதிபதியும், தனகாரகனுமான சுக்ரன் பூர்வபுண்யத்தில் அமர்ந்துள்ளார். இதுவும் இதற்கு ஒரு முக்யமான காரணம் ஆகும்.

10. ஒன்பதாம் அதிபதி கேந்த்ரம் ஏறி அந்த இடம் ஜல ராசியாகி, சுபரான குரு பார்வை பெறுவதாலும், விரயாதிபதி ஆட்சி ஆதலாலும், 12ல் சந்த்ரன் உள்ளதாலும் ஸ்வாமிகள் செய்யாத க்ஷேத்ராடனமோ, தீர்த்தாடனமோ கிடையாது.

ஸ்வாயம்புவ மனுவின் புத்ரனான ஆக்னீத்ரன் வழியில் பகவான் மஹாவிஷ்ணுவே ரிஷபதேவர் என்ற பெயரில் அவதரித்து, யோக மஹிமையால் தன் நாட்டில் மழை பொழிவித்து, கடைசியில் அவதூத சந்நியாச தர்மத்தைக் கடைப்பிடித்தார். இவர் வழியில் வந்த ஜடபரதரும் மஹாஞானியாக விளங்கினார். அதுபோல்

தற்போதைய வைவஸ்வத மன்வந்தரத்தில் லோக க்ஷேமத்திற்குப் பாடுபடும் அவதூத ஸந்நியாசியான ஸ்ரீ சாந்தானந்த ஸத்குரு ஸ்வாமிகளை, நான் ஒரு ஸ்வருபத்துடன் நடமாடிவரும் ஸ்ரீ லலிதா பரமேச்வரியாகவே காண்கிறேன். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும்,

स एव ललितारूपस्तद्रूपा ललिता स्वयम् ।
न तयोर्विद्यते भेदो भेदकृत्पापकृद्भवेत् ॥

''ஸ ஏவ லலிதாருபஸ்தத்ருபா லலிதா ஸ்வயம் ।
ந தயோர் வித்யதே பேதோ பேதக்ருத்பாபக்ருத்பவேத் ॥''

என்கிறது. இதன் கருத்தாவது, லலிதா தேவிக்கும், அந்த உபாஸகருக்கும் பேதமில்லை. இரண்டும் ஒன்றே. அப்படி ஸ்ரீஅம்பாள் உபாஸகன் என தனியே பேதம் செய்தால் அது பாபமாகும் என்று கூறுகிறது. ஸுந்தரதாபினீயம் என்ற கிரந்தமும், மந்த்ரம், தேவதை, குரு மூன்றும் ஒன்றே என்கிறது. எனவே, நம் ஸத்குருநாதரின் கருணையை, அனுபவித்தவர்கட்கே அதன் ருசி தெரியும். சிவஸூத்திரத்தில் ''மஹா ஹ்ரதானு ஸந்தானுத் மந்த்ர வீர்யானுபவ'' என்று குறிப்பிடப்படுகிறது. மந்திரத்தின் சக்தி அனுபவித்தால்தான் புரியும் என்கிறது இதன் பொருள்.

மந்திர ஸ்வருபியான ஸ்ரீஸ்வாமிகள் நம் யாவரையும் தன் கருணை அலைகளால் கரையேற்ற பிரார்த்திக்கிறேன். வாசகர்கள் தம் ஜாதக பரிசிலனை செய்துகொள்ள விரும்பினுல் கேள்வி ஒன்றுக்கு ரு. 10/- விதம் அனுப்பி பயனடையலாம். ஜாதக பரிசிலனைக்கும், ஹோமம் முதலிய பரிகாரங்கட்கும் கட்டுரை முகப்பில் உள்ள என் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

Oh mind, Beware: God sits within you and holds ceaseless vigil over every act that you do. Do not commit sin on the sly, in the belief that none is seeing you if you should avoid terrible punishment.

— Gospel of Swamy Sri Santananda

வழிகாட்டும் சாந்த மாமுனிவர்

புலவர் ப. சிகாகிரீசன், புதுக்கோட்டை

சாந்தம் தவழும் வதனம், புன்முறுவல் மிளிரும் இதழ்கள்; கருணைபொழியும் விழிகள், பொன்னார்மேனி, செஞ்சடை முதல்வனை நினைவூட்டும் சடைமுடி; உள்ளத்தை ஈர்க்கும் அருள் மொழிகள் இத்துணையும் ஒன்றுகூடி ஒரு வடிவம் பெற்றதென்றால் அதுதான் ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தவச்செல்வர் அவர். 'கரதல பிக்ஷு: தருதல வாஸ:' என்று பெரியோர்கள் பாடினார்களே! அதற்கு இலக்கியமாகத் திகழ்பவர்கள் நம் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்.

மிக இளம் பருவத்திலேயே துறவுபூண்டு தவத்தை மேற் கொண்டவர் அவர். ஆசைக்கும் பாசத்திற்கும் ஆட்பட வேண்டிய பருவத்தில் அவை அவரை நெருங்க அஞ்சின. ஒருமையில் ஆமைபோல் ஐந்தடக்கி ஐந்தெழுத்தோதி ஆண்டவன் இடத்தில் நெஞ்சைநிறுத்தி நீள்புகழ் கொண்டவர் அவர். அரசியலா? ஆன்மீகமா? என்று சஞ்சலப்பட்ட காலமும் அவர் வாழ்வில் உண்டு. ஆனால் வெற்றி கண்டது ஆன்மீகமே. பாரத புண்ணிய பூமியில் அவர் திருவடிபடாத திருத்தலமே இல்லை. காடும் மலையும் அவருக்கு ராஜபாட்டையாயின. கிடைத்தால் உண்பார், இல்லையென்றால் சஞ்சலம் இல்லை. செஞ்சொல் மந்திரங்கள் உண்டு. அவர்கள் தூங்கிய இரவுகள் சிலவே. 'யா நிசா ஸர்வபூதானும் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ' என்ற கீதா வாசகத்திற்கு அவர் இலக்கியமாகத் திகழ்ந்தார். தத்தாத்ரேய அவதார பரம்பரையில் வந்தவர்கள் ஆகையால் அவர்கள் அடைந்த இன்னல்கள் ஏராளம், ஏராளம். எந்நிலை யிலும் உறுதி தளராமல் தவநெறி மேற்கொண்ட அவரது ஆற்றல் வரலாற்றுச் சிறப்புமிக்கதேயாகும்.

வேட்கை மிகுந்தவன் நீரைத்தேடி அலைவதைப்போல அவர் குருநாதரைத்தேடி அலைந்தார். பாரதத்தின் வடகோடியில்

இமயமலைச் சாரலில் அவர் பல்லாண்டு தவம் கிடந்தார். காஞ்சி காமாட்சி, திருப்பதி வேங்கடவன் இப்படி எண்ணற்ற திருத்தலங்களில் அருள்வேண்டி அருந்தவம் புரிந்தார். அப்பொழுதெல்லாம் அவர் உள்ளம் இறையருளையேவேண்டி ஏங்கியது. நாவோ திருநாமத்தையே ஒலித்தது. தவம் பலித்தது. ஆட்கொள்ள இருகரம்நீட்டி வரவேற்றார் ஸ்வயம்ப்ரகாசர். காடு மேடுகளில் தேடியலைந்து ஸத்குருநாதனைச் சேந்தமங்கலத்தில்கண்டு மகிழ்ந்தார் சாந்தானந்தர். கடலில் கங்கை சங்கமமாவதுபோல் குருநாதரிடம் இரண்டறக் கலந்தார் சாந்தானந்தர். அஞ்ஞான இருள்நீக்கி ஞானசூரியனாய் குருநாதர் ஸ்வயம் பிரகாசர் சாந்தானந்தர்முன் நின்றார். குருநாதருக்கு அவர் ஆற்றிய பணிகள் மயிர்சிலிர்க்கச் செய்பவை.

பரமகுருநாதரான ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகள் அவர்களின் திருப்பணி ஸ்ரீ சாந்தானந்தரைப் புதுக்கோட்டைக்கு அழைத்தது. காடாகக்கிடந்த பரமகுருவின் ஸமாதியைப் புதுமை பொலியும் பொற்புடைத்தலமாக ஆக்கினார் ஸ்ரீ சாந்தானந்தர். 1956-ல் தொடங்கிய அப்பணிகள் இன்றும் தொடர்கின்றன. ''எண்ணிய எண்ணியாங்கு எய்து'' என்ற வாக்கிற்கேற்ப எண்ணியதை முடித்தே தீருவார் அவர். நினைத்ததை முடிப்பார், முடிவதனையே நினைப்பார். இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அவர்கள் ஆற்றிய வேள்விகள் ஆச்சரியமானவை. மந்த்ர சாஸ்திரங்களில் புதைந்து கிடக்கும் மகாமந்த்ரங்களை புத்தகங்களோடு மக்கி மறைந்துபோக விடாமல் காத்த பெருமை சாந்தானந்தருக்கு உண்டு. உக்ர ப்ரத்யங்கிரா, வாராஹி, சரபம் முதலான மந்திரங்களை உச்சரிக்க அஞ்சிவந்த நிலை மாற்றி அச்சம் தவிர்த்த ஆன்றோராய் அவர் விளங்குகிறார். அந்த மந்திரங்களால் உலகம் பெறவேண்டிய நலன்களை நமக்கு அளித்தவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களே. பல நூறு ஆண்டுகளாக நடைமுறையில் மறைந்துபோன வேள்விகளை அவர் புத்துயிர் பெறச்செய்தார். இன்று பல மஹா மந்த்ரங்கள் மக்களிடையே பிரபலமாகியுள்ளமைக்கு ஸ்ரீ ஸ்வாமிகளுடைய தொண்டுதான் காரணம். அல்லற்படும் மனித குலத்திற்கு அவர் வழிகாட்டியாய், கலங்கரை விளக்கமாய், கார் இருளில் நல்லொளியாய்த் திகழ்கின்றார். அவர்களுடைய வழிகாட்டுதலில் நிமிர்ந்து நின்ற குடும்பங்கள் ஏராளம்,

அல்லற்பட்டுத் தம்மைச் சரணடைந்த பக்தர்களுக்கு அவர் கூறுவது இதுதான், ''அன்னை ஸ்ரீ புவனேச்வரியை நம்புங்கள். அவள் உங்களைக் கைவிடமாட்டாள்.'' ஆழ்ந்த பக்தியை வளர்த்து நம்பிக்கையூட்டி, அவநம்பிக்கைமூலம் மக்கள் குலம் மடிந்து போகாமல் தடுத்து அவர் துணைபுரிந்து வருகிறார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு நல்ல நிர்வாகி. இதனை விழாக் காலங்களில் அனைவரும் பார்த்திருக்கலாம். எவ்வளவு தூய்மையாக ஒரு இடத்தை வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு அதிஷ்டானமே சான்று. அவரவர் கடமையைச் செம்மையாகச் செய்யவைப்பதில் அவர் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார். சிறிதுகூட அவர்களுக்குச் சோம்பலே கிடையாது. நாளை என்று எந்த வேலையையும் ஒத்திவைக்கமாட்டார். உரிய காலத்தில் திறம்படச் செய்வதில் அவர் மிக வல்லவர். அதிஷ்டானத்திற்கு வருகை தரும் அன்பர்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கச் செய்வதில் அவர் மிகவும் கவனமாக இருப்பார்.

ஒரு பெரிய மஹான் வாழ்கின்ற காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதே நமக்குப் பெருமை. சிறப்பாக அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளும் நாம் மிகப் பெரும்பேறு பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை.

தாம் வழிபடும் தெய்வமாகிய புவனேச்வரியை புதுக்கோட்டையில் பிரதிஷ்டை செய்து அந்நகரை புதுமை பொலியச்செய்தார். மாமன்னர்களாலும் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத மாபெரும் வேள்விகளை அன்பர்களின் துணைகொண்டு மிக எளிதாகச் செய்துமுடித்துள்ளார்கள். சேலத்திற்கு அருகில் அவர் அமைத்துள்ள ஸ்கந்தகிரி ஓர் அற்புதப்படைப்பு. பாரத சமய ஒற்றுமைக்கு ஓர் ஒப்பரிய சான்று. அங்கு சைவ, வைணவ பேதங்கள் இல்லை. அன்றுமுதல் இன்றுவரை வாழ்ந்து மறைந்த மகான்கள், பக்தர்கள், பண்பாளர்கள், அடியவர்கள் ஆகிய அனைவருக்கும் வேறுபாடின்றி பெருஞ்சிலா விக்ரஹங்கள் அமைத்து இருப்பது சமயத் துறையில் வேறுபாடு இல்லை என்பதற்கு நல்ல சான்று. நிமிர்ந்து நிற்கும் மாபெரும் விக்ரஹங்கள் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களின் மிகப்பெரிய மனப்பாங்கிற்கு எடுத்துக்காட்டு. காண்போருக்குக் கண்கொள்ளாக் காட்சி.

ஒரு துறவி, அப்பப்பா! எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவா? இல்லை. நம் நலத்திற்கான விழா. அறப்பணிகளுக்கான விழா. இது நம் விழா. கைமாறு கருதா நற்பணிக்கு நாம் அஞ்சலி செலுத்தும் விழா. செயற்கரியன செய்துவரும் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய திருவடித் தாமரைகளைப் பணிந்து நாம் உய்யும் விழாவல்லவா இது. அவர் திருவடி பணிந்து அவர் காட்டும் வழியில் வாழ்ந்து நலம் பல பெறுவோம்.

If your worship of Divine Mother is true and sincere you must believe that all women are but the embodiment of Divine Mother Where is the difficulty? Please tell me.

— **Gospel of Swami Sri Santananda**

பிரும்ம ஸாயுஜ்யம்

மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகள்

स्वाध्यायेन व्रतैः होमैः त्रैविद्येनेज्यया स्तुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥

ப்ரம்மஸாயுஜ்யம்பெற மனு ஸ்மிருதியில் கூறும் அரும்பெரும் வசனம் மேலே காட்டியது. முதலில் வேதம் பயின்று அதை உயிர் இவ்வுடலில் உள்ளவரை ஓதிவருவது. இரண்டாவதாக கள், மாமிசம் போன்ற பொருளைத் தொடாமல் இருப்பது என்ற வ்ரதம் இருப்பது. மூன்ருவதாக ஸாவித்ர சர முதலானதுகளினுல் காலை, மாலை ஹோமம் செய்வதும், நான்காவதாக த்ரைவித்யம் என்ற வித்யாப்யாஸத்தை 40 வருஷங்கள் குருகுலவாசம்செய்து கல்விகற்பதும் இது ஒரு பெரும் வ்ருதமாகவும் நினைத்து அனுஷ்டிப்பது தான் இதில் மிகவும் முக்கியமானது. வேறு வ்ருதம் இதைவிட சிறந்தது இல்லை என்றதால் (த்ரைவித்யம் வ்ருதம்) என்று கூறியது. இனி ஐந்தாவது இஜ்யா என்பது பிரும்மசாரியாக இருக்கும்போது தேவரிஷி பிதிரு ப்ரீதிகரமாகவும் கிருஹஸ்தனுக இருக்கும்போது பிள்ளைப்பேறு போன்ற தர்மமும் ஆருவதாக பிரும்மயக்ஞும்போன்ற வேதத்தில் கூறிய

पञ्च वा एते महायज्ञाः

ஐந்து மஹா யக்ஞும் என்று போற்றப்படும் வைச்வ தேவாதி யக்ஞுமும் ஏழாவதாக யக்ஞும் என்பது ஜ்யோதிஷ்டோமாதி யக்ஞுங்கள் அச்வமேதம் ராஜஸூய யாகம்வரை செய்யப்படும் கர்மாக்கள்

ब्राह्मी—ब्रह्मप्राप्तियोग्या—इयं तनुः—तन्ववच्छिन्न आत्मा
ब्रह्मज्ञानेन मोक्षावाप्तिरिति कुल्लूकभट्टेन व्याख्यातम्—

இதுபோன்ற 7 கார்யங்களையும் செய்வதினுல் பிரும்ம ப்ராப்திக்கு ஸாதனமாகி பிரும்மஞானம் ஏற்பட்டு மோக்ஷத்தை அடைய அரும்பெரும் மார்க்கம் என்று மனு கூறினுர். அதை குல்லூகபட்டர் வ்யாக்யானம் செய்தருளினுர்.

இத்தகைய பிரும்ம ப்ராப்தி ஸாதனத்தை பேருபகாரமாகச் செய்து இந்நாட்டு மக்களை இந்த மனுஸ்மிருதியில் கூறியபடி ஏழுவித மார்க்கங்களாலும் கடைத்தேறச் செய்து (ஒரு) பேசியும் நடமாடியும் நம்மில் ஒருவராக இருந்தும் ஜாஜ்வல்யமான பிரும்ம தேஜஸ்ஸுடனும் ஸாக்ஷாத் பரப்ரும்ம தரிசனம் செய்தும் நம்மிடத்திலேயே தயையும், கருணையும், தானமும், அனுக்ரஹமும்

अनुग्रहं च दानं च सतां धर्मस्सनातनः

என்ற வ்யாஸ வசனப்படி அனுக்ரஹம் தானம் தனது உள்ளத்திலேயே வைத்திருக்கும் (ஒரு) இக்கலியிலும் (ஒரு) கிருத யுகம் தோற்றுவித்தும் மருத்துவ மஹாராஜா மாந்தாதா ஹரிச்சந்தர மஹாராஜா போன்ற மஹாராஜ ராஜர்களால் அனுஷ்டிக்கப் பட்ட மஹா மந்த்ர யாகங்களை அனுஷ்டித்து இவ்வுலகத்தை ரக்ஷிக்கும் மஹா பிரபு ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகர்களான ஸ்ரீமத் சாந்தானந்த மஹா ஸ்வாமிகள் அவர்கள்தான் நம் எல்லோரையும் ரக்ஷிக்கும் குருநாதராகவும், கடவுளாகவும் இருக்கிறவர்கள், ஸ்ரீபுவனேச்வரி, சூலினி, ப்ரத்யங்கிரா, சரபேச்வரர், முதலான ஜகத்ரக்ஷண தெய்வங்களை மக்களுக்குக்காட்டி அருள் பெறச் செய்தவர்கள் பக்தி என்ற அமுதத்தை மக்களுக்கு வாரி வழங்கியவர். தான் எப்படி இவ்வுலகில் குரு, பரமகுரு திருவருளைப்பெற்றுரோ அதுபோல் மக்களுக்கு அருளை வாரி வாரி வழங்கும் கருணை வள்ளல் இத்தகைய மஹாத்மா ஸ்ரீசாந்தானந்த ஸத்குரு ஸகல ஜீவனிடமும் ஸமத்வமும் ஏழைப் பங்காளராகவும் புதுக்கோட்டை ராமனுதபுரம் மஹா ராஜ ராஜ ஸார்வ பௌமர்களுடைய குருவும் அன்பர்களாகவும் திகழ்கின்றவர்கள்.

இந்த புண்ய மூர்த்திக்கு ஷஷ்டி அப்த பூர்த்தி மணிவிழா வருவது நாம் செய்த பாக்யபுண்யத்தால் வருகிறது. நான் முதலில் அதாவது, இந்த மஹா மங்கள மூர்த்தியான ஸ்ரீ சாந்தானந்த குரு மஹாராஜரை முதலில் பார்த்த வைபவத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு என் ஆனந்த நிலையை பேரன்பர் களுக்கும் கொடுத்து மகிழ்கிறேன்.

புதுக்கோட்டையில் பரமபாகவதர் ப்ரஹ்லாதனைப் போன்ற பக்தமணி ப்ரும்மஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதர் அவர்களை

அறியாத மனிதன் இருக்கமுடியாது. அவர்களுக்கு ஷஷ்டி அப்த பூர்த்தி வந்தது அவர்கள் தனது ஷஷ்டி அப்த பூர்த்தியை பஜனை யாகவே கொண்டாடினார்கள். அந்த பஜனை செய்து வரும்போது ஸ்ரீபாகவத ஸ்வாமிக்கே உரிய திவ்ய சாரீரத்துடன் அதிஅத்புத பாவத்துடன் ஜடாமண்டல முகத்துடன் தம்பூராச்ருதியுடன் ப்ரத்யக்ஷ நாரதரைப் போல் காக்ஷி அளித்துக்கொண்டு ''ஆலோல துளஸிவனமாலபூஷண'' என்ற கீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும் போது அவர் துளஸீ மாலைகள் ஆட நர்த்தனம் செய்து உள்ளம் உருகி அடுத்த கீர்த்தனம் ''ஆயாஹி மாதவ'' என்ற பகவானை அழைத்து ஆனந்த பாஷ்பம் பெருக அழைத்து அழைத்து நர்த்தனம் செய்து எங்கோ பகவான் இருக்கிறார், இவர் பேரன்புடன் அழைப்பதால் கட்டாயம் வருவார் என்று ஒன்றும் அறியாத மூடமனத்திலும் தோன்றும்போது ஸ்ரீ பாகவதர் இரு கைகளாலும் ''ஆயாஹி ஆயாஹி'' என்று வாவா மாதவா வாவா என்று தேனொழுக அழைத்தார்.

நான் திரும்பிப் பார்த்தேன்; உண்மையில் பகவானையே பார்த்தேன். ஆம் அவர்தான் பகவானே தான் வந்துகொண்டு இருந்தார். உருக்கிவார்த்த தங்கம்போன்ற திவ்ய மங்கள சரீரமும், காரிருளைக் காட்டிலும் கருத்த ஜடையும் சூர்ய பிம்பத்தைக் காட்டிலும் ஜாஜ்வல்யமான பிரும்மதேஜஸும் நெருப்பின் ஜ்வாலையைக்காட்டிலும் சிவந்த காஷாய வஸ்திரமும் சந்திரிகை போன்ற பற்களின் காந்தியும் கருணை தயை சாந்தம் மாதுர்யம் நிறைந்த முகமும் உள்ள பேரன்பே உருவெடுத்து வந்ததுபோன்ற உருவமும் மார்க்கண்டேய மஹரிஷியைப் போன்ற நவயௌவன 16 வயதுடைய ஸாக்ஷாத் ரிஷி ரூபமாகவும் தத்தாத்ரேய மஹ ரிஷியே வந்ததுபோன்ற உணர்வடைந்தேன் உடன் காணற்கரிய கடவுளைக்கண்ட உணர்வில் என்மனம் ஒன்றும் தோன்றாதநிலையை அடைந்து இதுவரை கிடைக்காத பேரின்பநிலையை மனம் அடைந்தது (இந்த வைபவம் நடந்ததுதான்).

ஸ்ரீ பாகவதர் ஆயாஹி கீர்த்தனம் பாடி பகவானை அழைத்தவர், அங்கு அப்போது ப்ரத்யக்ஷமான தத்த குரு போன்ற நம் ஸ்ரீ சாந்தானந்த ஸத்குருவை உள்ளம் உருகி கண்களில் நீர் மல்க அழைத்தார். அந்த வைபவத்தின்போது

தான் நான் முதலில் நம் குருநாதரைக் கண்டேன். உள்ளத்தை அந்தப் பொன்னடியில் வைத்தேன். முதலில் ஒரு ஷஷ்டியப்த பூர்த்தியில், 29 வருஷம் கழித்து அந்த மங்கள மூர்த்தியின் ஷஷ்டி அப்த பூர்த்தி நடக்க இருக்கிறது. நம் பாக்யம் என்றாலும் முதலில் பார்த்தபோது பால்வடியும் முகமும் உக்ரமானதவம் மலைக் குகைக்குள் இருந்து செய்தபடியால் முகத்தில் அட்டை போன்ற ஜந்துக்களால் பீடிக்கப்பட்டு முகத்தில் அம்மைவடு போன்ற வடுக்களும் அழகான ஜடையும் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவழம்போல் மேனியின் பால் வெண்ணீரும்' உடைய எம்பெருமான் குருநாதர் பரம சாந்த சாந்தானந்த மஹா ராஜ ராஜ ஸத்குரு என் உள்ளத்தில் அன்றே இருக்கையில் அமர்ந்தார். என் உள்ளத்தில் அமர்ந்த கருணை வடிவம், ஒரு அன்னையும் தந்தையனும் எனக்கு வழங்கி என்னை ஆட்கொண்டது.

இவ்வுலகின்கண் ஸ்ரீசாந்தானந்த ஸத்குரு தோன்றாவிடில் வேத சாஸ்த்ர, மந்திர சாஸ்த்ர, வைதீக அனுஷ்டானங்கள் பரமபக்தி முதலிய எல்லோரும் பாரதமாதா ஸ்ரீபுவனேச்வரியின் குழந்தைகள் என்ற உணர்வு இன்றி இருப்பதுபோல் இவ்வளவு இருக்கமுடியாது. இத்தகைய ஜகத்ரக்ஷக ஜகத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸத்குருமஹாராஜாவின் ஷஷ்டி அப்தபூர்த்தி மஹோத்ஸவத்தை அடியார்கள், சீடர்கள், பக்தர்கள், ஆஸ்திகர்கள், அன்பர்கள் எல்லோரும்சேர்ந்து இதுவரைசெய்த வேள்விக்கும், தர்மத்திற்கும் உத்ஸவம் கொண்டாடுவதாக எண்ணி பெரு விழாவாக கொண்டாடி பேரருள் பெருவோமாக.

O Mind, a true warrior is he who knows no fear. It is only a true warrior who will believe in truth. Cowards are opportunists. These lily-livered cowards are a burden to the earth.

— Gospel of Swamy Sri Santananda

ஸ்ரீபுவனேச்வர்யை நம:

ஸ்ரீமாதா பூரிக்கின்ருள்

வைரம் ராஜகோபால்

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய்'' —குறள்

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன், உயர்ந்தவன் என்று பிறர் கொண்டாடும்போது அதைக்கண்ட, கேள்வியுற்ற தாயானவள் அந்த மகனைப் பெற்ற சமயத்திலுற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள்—குறளின் கருத்து.

எவ்வளவு அனுபவபூர்வமான ஆழ்ந்த கருத்து! இன்று தன் மகனின் பெருமைகண்டு தாய் பூரித்துப் போயிருக்கிருள். எந்த தாய்? ஜகன்மாதா புவனேச்வரிதான்! உலகத்துக்கெல்லாம் தாயான இந்த அன்னைக்கு கோடானுகோடி குழந்தைகள்! ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் எல்லாமே அவளுடைய குழந்தைகள். இப்படிப்பட்ட மகன்களில் ஒரு மகன், உலகத் தோரால் ''மஹான்'' என்று போற்றப்படுவதையும் அந்த மகன் இன்று மக்களுக்கெல்லாம் நல்லுபதேசம் செய்துகொண்டும், யாவருக்கும் உள்ளன்போடு ஆசி கூறுவதும் விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் அருள் செய்வதையும், மற்றும் உலக க்ஷேமத் திற்காகவே வேதரக்ஷணம், கோசம்ரக்ஷணம், மகாயக்ஞங்கள், ஹோமங்களை நடத்திக்கொண்டும் ஆலய திருப்பணிகளும் அறப் பணிகளும் செய்துகொண்டு ஆயிரமாயிரம் உள்ளங்களில் நிறைந்து நிற்கும் தன் மகனைக்கண்டு பெருமிதம்கொண்டு பூரித்திருக்கிருள் இந்தத் தாயாகிய ஜகன்மாதா!

இந்த மாதா மட்டுமா மகிழ்கிருள்! ஆயிரக்கணக்கான ஆஸ்திக அன்பர்களும் பூரித்து மகிழ்கிருர்கள். இந்த ஆண்டில் இந்த மார்ச் மாதம் 25 தேதியில் நமது இதயத்திலே இடம் பெற்றுள்ள ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளின் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா நடைபெறுவதைக்காண என்ன பாக்யம் செய்திருக்கிருேம் என்று எண்ணி மகிழ்கிருர்கள். இந்த விழாவை

23, 24, 25 ஆகிய மூன்று தினங்களில் முறைப்படி பல விசேஷ ஜப ஹோமங்களுடன் கொண்டாடி மகிழக் கொடுத்து வைத்து இருக்கவேண்டும் என்று எண்ணி பூரித்துப் போகிருர்கள்.

மனித வாழ்க்கையில் 60 ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட காலம். இந்த 60 ஆண்டுகளையும் கடந்து விட்டோம் என்று பெருமைப்பட்டுக்கொள்வதைவிட இந்த நீண்ட 60 ஆண்டு காலத்தில் என்ன சாதித்தோம் என்று எண்ணிப்பார்த்து சாதனை களை மட்டுமே கண்டு பெருமைப்படவேண்டும். இப்படிப் பார்க்கும் போது நமது ஸ்வாமிகளின் சாதனைகள் மிகமிகப் பெரியது என்பது யாவருக்கும் தெரியும்.

ஒரு குழந்தை பிறக்கிறது, வளருகிறது. ஆனல் அந்தக் குழந்தை பிற்காலத்தில் எப்படி இருக்கப்போகிறது என்பதை முன் கூட்டியே யாரால் அறியமுடியும்? ஜெகன்மாதாவுக்குத் தெரிந்து இருக்கலாம் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது.

குழந்தையாகப்பிறந்து, சிறுவனுகிப் பெரியவனுகி வயோதி கனுகவும் ஆகிவிடலாம். ஆனல் இவ்வளவு காலம் வாழ்ந்த போது தனக்காக என்ன செய்து கொண்டோம் என்று எண்ணிப் பார்ப்பதை விட பொது நன்மைக்காக என்ன செய்தோம் என்று எண்ணிப்பார்த்தால் நல்லது.

சுயநலத்துக்காகவே பலர் வாழ்ந்திருக்கிருர்கள். பொது நலத்துக்காக வாழ்ந்திருப்பவர்கள் ஒரு சிலரே என்பது தான் உண்மை. அதிலும் கூட அனேகருடைய அன்பைப் பெற்றிருப் பவரும் போற்றப்படுபவரும் வெகுசிலரே! அப்படிப் போற்றப்படு பவர்களில் நம் ஸ்வாமிகளும் ஒருவர் என்பதைப் பலரும் அறிவார்கள் ஒப்புக்கொள்வார்கள்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இந்தப் புதுக்கோட்டை நகரிலே இப்படி ஒரு அதிஷ்டானம் ஏற்படப் போகிறது என்றோ, இங்கு ஜெகன்மாதா ஸ்ரீ புவனேச்வரி எழுந்தருளி அருள் பாலக்கப் போகிருள் என்றோ யாருக்குத் தெரியும்? ஆனல் இப்படி எல்லாம் நடைபெற வேண்டுமென்று முன்னமேயே அந்த ஜெகன் மாதா திருவுளம் கொண்டிருந்தாள் போலும் அதைச் செயல் முறையில் செய்து முடிக்கத்தகுந்த ஒருவரையும் பெற்றெடுத்து இருந்தாள். உரியகாலத்தில் அதை செய்து முடித்துக்கொண்டாள்.

இதற்காகவே அன்னை பெற்றெடுத்த குழந்தைதான், அவள் விருப்பத்தைப் பூர்த்திசெய்து இன்று நம்மிடையே அறுபது வயதுக் குழந்தையாக காட்சி தருகிறது. அன்பு வடிவமாகவும், அருள் தெய்வமாகவும் புன்னகை தவழும் முகமுமாக காட்சி தருகிறது. இன்னும் 70, 80, 90, 100 என்று வயதானாலும் கூட அந்த அன்பும் அருளும் மாறாத குழந்தையாகவே இருக்கும்.

ஸ்ரீமத் ஸ்வாமிகளின் சரித்திரம் ஆச்சர்யமானது! அதிசய மானது! இதையே தனிப் புஸ்தகமாக போடவேண்டியது. அவ்வளவு விஷயங்களும் சம்பவங்களும் நிறைந்துள்ளது (தனி புஸ்தகமாக போட்டிருக்கிறார்களோ, என்னவோ! போட்டிருந் தாலும், போட்டாலும் அது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்).

எப்படியோ பிறந்து வளர்ந்து எங்கெல்லாமோ சுற்றியலைந்து ஒரு சத்குருவைத் தேடிக் கண்டு பிடித்து அவரது சீடராகி அந்த குருவின் அருள் பெற்று அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைத்து ஆஸ்திக அன்பர்களால் கொண்டாடப்பட்டு அனைவரது உள்ளத்திலும் வாஸம் செய்கிறார் நம் ஸ்வாமிகள். இதெல்லாம் சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்டதல்லவா!

ஸ்வாமிகளின் சாதனைகளைக்கண்டு திகைத்துப் போகிறார்கள். பக்தர்கள் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமத்தை தரிசித்தவர்களுக்குத் தெரியும் ஸ்வாமிகளின் சாதனை. அதிஷ்டானத்தில் பிரதி வருஷம் நடை பெறும் ஹோமங்களை தரிசித்தவர்களுக்குத் தெரியும். ஸ்வாமிகள் இதையெல்லாம் எதற்காகச் செய்து கொண்டிருக்கிறார்? மக்களின் க்ஷேமத்துக்காக ! உலக நன்மைக்காக.

ஏதோ பிறந்து வாழ்ந்துபோவது என்பது சாதாரண ஜீவன் களின்நிலை. ஏதோ கர்மபலனை அனுபவிப்பதற்காக எடுத்த ஜன்மாக்கள்.

ஆனால் பிறந்து வளர்ந்து லோக நன்மைக்காக பாடுபடும் பிறர் நலத்தையே சதா நினைத்து மக்களின் க்ஷேமத்திற்காகவே பாடுபட்டுக்கொண்டிருப்பதுதான் விசேஷமான ஜன்மா. இவர் களைத்தான் மஹான்கள் என்று போற்றிப் பணிகிறோம்.

இப்படிப்பட்ட மஹான்களெல்லாம் ஏதோ சில சாதனைகள் செய்வதற்காகவும் உலக மக்களுக்கு சாஸ்வதமான சில நன்மை

களைச் செய்வதற்காகவுமே அவதரித்தவர்கள் என்று சொல்ல வேண்டும். பல மஹான்களின் சரித்திரங்களைப் படித்துப் பார்க்கும்போது அவர்கள் பிறவி எடுத்ததே ஒரு காரணத்திற்காகத்தான் என்பது விளங்கும். ஆதிசங்கரர், ராமானுஜர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகாநந்தர் இப்படி வரிசையாக யாரை எடுத்துக்கொண்டாலும் இவர்களெல்லாம் சரித்திரம் படைக்கவந்த புண்ணியாத்மாக்கள், மக்களை நல்வழிப்படுத்த வந்த பரமாத்மாக்கள் என்றுதான் தோன்றுமேதவிர ஏதோ பூலோக வாழ்வை அனுபவிக்கவந்தவர்களாக எண்ண இடமில்லை. இதே பிரகாரம் பார்க்கும்போது நமது ஸ்வாமிகளும் அந்த வரிசையில் வைத்து வழிபட வேண்டியவர்தான் என்பதை அவரை நேருக்குநேர் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நினைப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

''பரோபகாரமே தியாகம்; பற்றுதலை நீக்குவதே தியாகம். தன்னலமற்ற சேவையினால் நிஷ்காம்ய கர்மாவைச் செய்பவர் எல்லோரிடத்திலும் பகவானுடைய லோக ஸாக்ஷாத்வத்தைப் பார்க்கிறார்'' என்று சொல்லப்பட்டுள்ளது. நமது ஸ்வாமிகளின் நிலையும் அப்படியே உள்ளது!

''அத்வேஷ்டா ஸர்வ பூதானாம் மைத்ர: கருண ஏவச ।
நிர்மமோ நிரஹங்கார: ஸம து:க்கஸுக: க்ஷமீ ॥

என்றபடி ஒருவரிடத்தும் துவேஷம் கொள்ளாமல் எந்த உயிரிடத்தும் அன்பும் கருணையுமுடையவராய் அஹங்கார, மமகாரமற்றவராய், சுக துக்கங்களைப் பாராட்டாமல் சம புத்தியுடன் இருப்பவர் கடவுளுக்குப் பிரியமானவர் என்று சொல்லப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட குணங்கள் நிரம்பிய நம் ஸ்வாமிகளிடத்தில் பக்தியும் அன்பும் செலுத்தும் நமது அன்பர்கள் பாக்கியசாலிகள் அல்லவா?

''சேரிடம் அறிந்து சேர்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ''நல்லவர்களை நாடு'' அவர்கள் காட்டும் வழியில் நட என்று எல்லாம் சொல்லி நம்மை ஜாக்கிரதையாக இருக்கும்படி உபதேசித்துள்ளார்கள். நாம் எங்கே செல்லவேண்டும்?

யாருடைய துணையை நாடவேண்டும்? ஸ்வாமிகளைப் போன்ற மஹான்களை நாடவேண்டும். அவர்கள் அன்பையும் அருளையும் பெறவேண்டும்.

''எப்படி வேண்டுமானாலும் வாழலாம்'' என்பது சிலரது கொள்கை. ''இப்படித்தான் வாழவேண்டும்'' என்பது ஒரு சிலரது கொள்கை. முதலில் சொன்னபடி வாழ்பவன் நன்மை அடைவதே கிடையாது. இரண்டாவதாகச் சொன்னபடி வாழ்பவன் கட்டாயம் நன்மை பெறுவான். இது அனுபவத்தில் கண்ட உண்மை.

ஸ்வாமிகளைப்போன்ற மஹான்களைக் காணவும் அவருடன் பேசவும் போதனைகள் பெறவும் நாம் பாக்கியம் செய்துள்ளோம். அவரது ஷஷ்டி அப்தபூர்த்தி விழாவையும்கண்டு தர்சித்து அவரது ஆசியையும் பெறுகிறோம். இதை நமது பெரிய பாக்கியமாகக் கொள்ளலாம். ஸ்ரீ ஜகன்மாதாவின் அருளால் ஸ்வாமிகள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு காலம் திருத்தொண்டுகள் செய்துகொண்டே நம்மையும் உய்விக்க வேண்டுமென ஸ்ரீபரா சக்தியை வேண்டுகிறேன்.

[இந்த ஷஷ்டி அப்தபூர்த்தி விழா மலரில் அடியேனது உள்ளத்தில் தோன்றிய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததும் என் பாக்கியம் என்று நினைக்கிறேன். இதுவும் ஸ்ரீமாதாவின் கருணை]

Your mind becomes a hell when it is filled with the consciousness of other selves and you do not see your own self.

All actions of a man without a pure heart will be contaminated by sins.

— Gospel of Swamy Sri Santananda

ஸ்ரீமஹா கணபதி துணை ஸ்ரீமாதா புவனேஸ்வரி துணை
ஸ்ரீஸத்குருப்யோ நம: ஸ்ரீசரவணபவாய நம:

ஸ்ரீஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம், புதுக்கோட்டை

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களின் ஷஷ்டி அப்தபூர்த்தி வைபவ நினைவு வெளியீடு

இயற்றியவர்: குழலிசைத் தமிழ்மணி சரளகவி
சங்கீத ப்ரவசன பாஸ்கர அதிஷ்டான ஆஸ்தான வித்வான்
குன்னக்குடி V. வெங்கட்டராம பாகவதர்

ஸ்ரீஸத்குரு அருள் நாமாவளி

சித்தம் இனித்திடும் குரு நாமம்
சிறப்பு மிகுந்திடும் ,,
பிறப் பிறப்பறுக்கும் ,,
பிரும்மானந்தமயம் ,,
உண்மையை உணர்த்தும் ,,
ஊக்கமளித்திடும் ,,
வந்திப்பவர்க்கருளும் ,,
வாழ்வை உயர்த்தும் ,,
பஞ்சம் பகை தீர்க்கும் ,,
பந்தம் தனை அகற்றும் ,,
வந்தனைக்கு கந்ததாம் ,,
வாயாறச் சொல்லி மகிழும் ,,
கவலைகள் தீர்க்கும் ,,
கருணை வடிவாம் ,,
மனக்குறை தீர்க்கும் ,,
மாண்புறச் செய்யும் ,,
கல்வி செல்வம் தரும் ,,
காமக் குரோதம் போக்கும் ,,
இன்னல் தனை அகற்றும் ,,
இன்பமெல்லாம் நல்கும் ,,
அக்ஞான இருள் போக்கும் ,,
அத்புதச்சரிதமாம் ,,
இறைவனைக்காட்டும் ,,

இகபரம் தந்திடும்	குரு நாமம்
பக்தியை ஊட்டிடும்	,,
பாக்யமெல்லாம் தரும்	,,
துன்பம் போக்கும்	,,
தூயவனுக்கும்	,,
அச்சம் அகற்றும்	,,
அபயமளிக்கும்	,,
தர்மத்தைக் காக்கும்	,,
தாரித்திரியம் போக்கும்	,,
சொல்ல இனிக்கும்	,,
சோகமகற்றும்	,,
பதவிகள் தந்திடும்	,,
பரவசமாக்கும்	,,
அமுதப்பெருக்காம்	,,
ஆறுதலளிக்கும்	,,
சத்ருவை அகற்றும்	,,
சக்திகள் அளிக்கும்	,,
முந்தவினை தீர்க்கும்	,,
முழுவதும் காக்கும்	,,
தன தான்யம் கொடுக்கும்	,,
தாயினும் அன்பாம்	,,
நினைத்ததைத் தந்திடும்	,,
நித்தியானந்தம்	,,
இறையருள் தந்திடும்	,,
இன்ப ஜோதியாம்	,,
வறுமை அகற்றும்	,,
வல்லமை தந்திடும்	,,
குவலயம் போற்றும்	,,
குற்றம் பொறுக்கும்	,,
பக்தியைக் கொடுக்கும்	,,
பாக்கியம் உண்டாக்கும்	,,
நன்மைகள் அளிக்கும்	,,
நாவாறச் சொல்லுவோம்	,,
மகிமை மிகுந்ததாம்	,,
மகிழ்ச்சியைக் கொடுக்கும்	,,
வெங்கடேசன் போற்றும்	,,
விமல சாந்தானந்த	,,

ॐ

ब्रम्हैव सत्यम्

ஸ்ரீஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம், புதுக்கோட்டை622001

ஆஸ்திகோத்தமர்களுக்கு மிக முக்கிய வேண்டுகோள்!

அன்புடையீர்! ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் தங்களுக்கு விசேஷ அனுக்ரஹத்துடன் தெரிவிக்கச் சொன்னதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்வதாவது,

ஒரு முன்னூறு ரூபாய்களும் [300/-] அதற்கு மேற்பட்ட தொகைகளையும் தங்கள் பெயரில் ''ஸ்ரீ புவனேச்வரி சாரிடீஸ் டிரஸ்ட் [ரிஜிஸ்டர் செய்யப்பட்டது] அதிஷ்டானம், கீழ 7-ம் வீதி, புதுக்கோட்டை'' என்ற விலாசத்தில் பாங்கில் நிரந்தரமான வைப்புத் தொகையாக வைத்து, அதில்வரும் வருஷத்தின் வட்டித் தொகைகளை, ஸ்ரீமாதா புவனேச்வரிதேவியின் ஸன்னதியில் (அதிஷ்டானத்தில்) நடைபெற்றுவரும் ''க்ருஷ்ண யஜுர்வேத பாடசாலை பத்து [10] பையன்களின் வருஷத்தின் ஒருநாள் உணவிற்கோ'' அல்லது ''அதிஷ்டானம் நித்ய பூஜை காரியங் களுக்காகவோ'' என்று குறிப்பிட்டு, ஸ்ரீ புவனேச்வரி சாரிடீஸ் டிரஸ்டின் காரியதரிசி அவர்கள் மேற்கண்ட தொகைகளின் வட்டியை மட்டில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தாங்கள் மேற்கண்ட மூலதனத்தை யாராலும் எடுக்கமுடியாத சாஸ்வத மான வைப்புத் தொகையாக ஆக்கிவைத்து **(Fixed Deposit)** அதிஷ்டானத்தில் நடைபெற்றுவரும் வேதபாடசாலையைத் தாங்கள் நிரந்தரமாக நடத்திக்கொடுத்து அல்லது அதிஷ்டானம் நித்ய பூஜைகளை நடத்திக்கொடுத்து ஸ்ரீ புவனேச்வரிதேவியின் பரிபூர்ண கடாக்ஷத்தையும், வேதமாதாவின் திருவருளையும் சாஸ்வதமாகத் தாங்கள் பெற்றுய்ய வேண்டுமெனக் கோருகிறோம்.

மேற்கண்ட கைங்கர்யங்களில் தாங்கள் ஈடுபடுவதுடன், தங்களைச் சேர்ந்த பந்துக்கள், நண்பர்கள் அனைவரையும் ஈடுபடுத்த வேண்டுமாகக் கோருகிறோம்.

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்கள்
ஆக்ஞைப்படி,

Dr. N. தியாகராஜன்
காரியதரிசி, அதிஷ்டானம்,
புதுக்கோட்டை-622001

श्रीगुरुभ्यो नमः

अखिलभुवनकर्त्रीं भारतीं ब्रह्मरूपां
अखिलभुवनगोप्त्रीं मातरं विष्णुरूपाम् ।
परमशिवमयीं तां सर्वसंहारकर्त्रीं
अमितसुखददक्षामाश्रयामो भवानीम् ।। 1

अम्बां श्रीभुवनेश्वरीं हृदि सदा ध्यायन्तमीशप्रियं
शान्तानन्दयतीश्वरं निजगुरोराराधने दीक्षितम् ।
कल्याणाय च यस्समस्तजगतां सेवाभिलाषी महान्
वन्दे तं गुरुराजमाशुसुखदं शिष्यैस्सदाराधितम् ।। 2

सत्यानन्दमयीं सदाशिवमयीं ध्यायन् जगन्मातरं
योगक्षेमधुरन्धरं च परमं सर्वेश्वरं चार्चयन् ।
यो दुर्गां च गणेश्वरं गुहमपि वातात्मजं सेवते
शान्तानन्दगुरुं नमामि सततं तं सर्वलोकप्रियम् ।। 3

शान्तानन्दयतीश्वरो विजयते धर्मं प्रतिष्ठापयन्
योगी योगविदांवरश्च गुरुराट् यज्ञे रतस्सर्वदा ।
कल्याणं तनुते च यो जानमतां सम्प्रार्थ्य सर्वेश्वरं
वन्दे तं गुरुराजमाशु सुखदं शिष्यैस्सदाराधितम् ।। 4

मन्त्रज्ञं मतिदायकं गुरुवरं वन्दे जटाभूषणं
शान्तं शान्तिदमाशुतुष्टमनघं मातृस्वरूपं गुरुम् ।
सर्वज्ञं शरदिन्दुकान्तिवदनं षष्टयब्दपूर्णं शिवं
शान्तानन्दगुरुं नमामि सततं तं सर्वलोकप्रियम् ।। 5

शमितसकलदुःखं शान्तमानन्दमूर्तिं
अगणितगुणपूर्णं प्रेममूर्तिं गुरुं त्वाम् ।
अभयवरददक्षं ज्ञानदं शान्तमूर्तिं
गुरुवरमतिधीरं सन्ततं चिन्तयामि ।। 6

हैदराबाद् नागसुन्दरः
9-8-81

1. Let us take refuge in Bhavani who is capable of bestowing limitless comfort, who is Bharathi in the form of Brahma creating the entire Universe, who is MOTHER in the form of Vishnu protecting the entire universe and who is All auspicious Shiva in withdrawing the universe within Herself.

2. My prostrations to the lord of preceptors who is easily pleased and always adored by His disciples. He meditates always on Mother Bhuvaneswari and is beloved of Lord Shiva. He is lord of "Yathis" and revels in worshipping His Guru. He is desirous of Service for the welfare of the world. He is Great.

3. Contemplating on the MOTHER of the Universe who is Truth and Bliss and is all auspicious and worshipping the Lord Shiva who is the bestower of divine knowledge, Sree Santhananda, the beloved of the worlds, worships also Durga, Ganesa, Subrahmanyam and Hanuman

4. Sadguru Santhananda Shines in all glory establishing Dharma He is a Yogi and is greatest among those who know Yoga. This king of preceptors revels in performance of sacrifices. By praying to the Lord he is ensuring the prosperity of one and all. My prostrations to him who is easily pleased and always adored by his disciples.

5. My prostrations to Sree Santhananda the beloved of the worlds, He knows the manthras and is bestower of good knowledge. He is great among preceptors and is adorned by matted hair. He knows everything and his face is like the autumn moon. He has attained 60 years of age and is Shiva.

6. Calm and full of Bliss. he puts down all the grief of people. He is an embodiment of all good qualities and is full of love. He gives freedom from fear and grants whatever we ask for. He is the bestower of knowledge and is PEACE personified. I always contemplate on You, the great preceptor full of courage.

துன்மதி-சித்திரை மாத ராசிபலன்

ஜ்யோதிஷவிசாரத் S. வைத்யனுதன்
ஆசிரியர்: ஜோதிடக்கடல், திருச்சி

(1981 ஏப்ரல் 14 முதல் மே 14 வரை)

ஸ்ரீபுவனேச்வரி அருளால் லோகத்தில் சுபிட்சமும் சௌகர்யமும் எல்லோரும் அடையப் பிரார்த்திக்கிறேன்.

மேஷம்: (அசுவனி, பரணி, கார்த்திகை 1ம்பாதம் முடிய)

ஆரோக்கியம் அவ்வளவு திருப்தியில்லை. உஷ்ண சம்பந்தமான வியாதிகள் ஏற்படும். உத்தியோகத் துறையில் சினேகித விரோதம் வெளியூர் அலைச்சல் இவற்றை ஏற்கவேண்டிவரும். வியாபாரி, தொழிலதிபர்களுக்குப் போட்டியில் தொல்லைகளைச் சமாளித்தாக வேண்டும். மே மாதம் 5ம் தேதிக்குமேல், காரியவெற்றி பண வரவு எல்லாம் ஏற்படும். கடிதப் போக்குவரத்தால் அவ்வளவு நன்மைகள் இல்லை. ஸ்திரீகளுக்கு மனஸ்தாபம், தாம்பத்ய பூசல்கள், உஷ்ண சம்பந்தமான ஆரோக்கிய நலிவு முதலியன ஏற்பட்டாலும் மாத மத்தியிலிருந்து நற்பலன்களே. விபத்துக்கள் ஆபத்து இருப்பதால் வண்டி வாகனங்களில் செல்லுவோர் ஒட்டுவோர் எச்சரிக்கையாயிருக்க நன்மை, அலட்சியம் உதவாது.

ரிஷபம்: (கார்த்திகை 2, 3, 4, ரோஹிணி, மிருகசீர்ஷம் 1, 2)

அலைச்சல், அகால போஜனம் இவையெல்லாம் சகஜமே பண வரவிற்கு பஞ்சமில்லை. உத்யோகத் துறையினருக்கு அதிக வேலைப்பளு, சில்லரை மனஸ்தாபங்கள் இவை ஏற்பட்டாலும் காரியம் நடந்துகொண்டுதான் இருக்கும். வியாபாரி, தொழில் அதிபர்களுக்கு சில சில்லரை நஷ்டங்கள் ஏற்படலாம். யோசித்துச் செயல்படவும். ஸ்திரீகளுக்கு வீண் விரோதங்கள் ஏற்படலாம். எனவே எச்சரிக்கையாய்ப் பழக நன்மை. மே மாதம் 5ம் தேதிக்குப்பின் எதையும் நிதானித்துச் செய்யவும்

சிலர் அவசர வைத்திய உதவியும்பெற நேரிடலாம். கடிதப் போக்குவரத்தால் அவ்வளவு நன்மைகள் இல்லை. நேத்திர உபாதையும் சிலருக்கு ஏற்பட்டு தொல்லைகள் ஏற்படலாம்.

மிதுனம்: **(மிருகசீர்ஷம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம்)**

மனநிம்மதி ஒன்றைத்தவிர மற்றதெல்லாம் இருக்கும். உத்தியோகத் துறையினருக்கு நல்ல காலமும், எல்லாம் எதிர் பார்த்ததுபோல் நடக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்வோர் நல்ல பலனடைவர். வியாபாரி, தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம், பணவரவு ஏற்படும். பொருள்களும் திருட்டுப் போகலாம், இல்லை தீ விபத்துக்களால் நாசமடையலாம். எனவே எச்சரிக்கை அவசியம். ஸ்திரீகளுக்கு ஆரோக்கிய அபிவிருத்தி, மகிழ்ச்சி, சௌபாக்ய நிகழ்ச்சிகளில் பங்கு முதலியன ஏற்படும். கடிதப் போக்குவரத்தால் நன்மைகள் உண்டு. குலதெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்ய ஏற்ற தருணம் இது. சத்ருக்களால் வியாகூலம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அளந்து பேசவும். யாரையும் எளிதில் நம்பவேண்டாம்.

கடகம்: **(புனர்பூசம் 4, பூசம், அயில்யம் முடிய)**

நல்ல காரிய வெற்றி, பெரிய மனிதர் ஆதரவு, பணவரவு எல்லாம் மகிழ்வூட்டும். ஆயினும் சில்லரை சரீர பீடை, ஒருவித பயமும் கூடவே இருக்கும். உத்தியோகத் துறையினருக்கு நல்ல பெயர், மேலதிகாரிகளின் பாராட்டு அல்லது ஆதரவு இவற்றைப் பெறலாம். வியாபாரி, தொழிலதிபர்களுக்கு நல்ல முன்னேற்றம் பணவரவு ஏற்பட்டாலும் சில வீண் விரோதங்களும் ஏற்படலாம். போட்டியை சமாளித்தால் போதும். ஸ்திரீகளுக்கு நல்ல மகிழ்ச்சி, பணவரவு எல்லாம் உண்டு. வீண் சபலத்திற்கு ஆளாகக்கூடாது. அது முக்கியம். சிலர் திடீர் வெளியூர் பிரயாணங்களை ஏற்க வேண்டிவரும். அஞ்சாமல் தனிவழியே செல்லவேண்டாம். ஔவை வாக்கு இது.

சிம்மம்: **(மகம், பூரம், உத்திரம் 1ம்பாதம் முடிய)**

எதிர்காலம் பற்றிய கவலையும், பணம் பற்றுக்குறையும், மேலோங்கி நிற்கும் வாழ்க்கை எப்படியோ ஓடும். உத்தியோகத் துறையினருக்கு எச்சரிக்கை நன்மை தரும். கடமையை ஒழுங்காகச் செய்தல் நன்று. வியாபாரி தொழிலதிபர்களுக்கு மே மாதம்

5ம் தேதிக்குமேல் நல்ல லாபம், பணவரவு எல்லாம் சொல்லலாம். அதுவரை சிரமத்தின்பேரில் பலன்களே, அலைச்சல் அதிகமிருக்கும். ஸ்திரீகளுக்கு ஆரோக்கியத்தொல்லைகளும், வீண் அவேஷங்களும் ஏற்படலாம். பொறுமையே பூஷணம், மே முதல் வாரத்திலிருந்து நல்ல சுப பலன்கள் உண்டு. கடிதப் போக்குவரத்தால் துயரச் செய்திகள் வரலாம். ஒருசிலர் திடீர் பிரயாணம் ஏற்க நேரிடலாம். சந்ததிகள் போக்கால் கவலை இல்லை, அவர்கள் ஆரோக்கியத்தால் கவலை.

கன்னி: (உத்திரம் 2, 3, 4, ஹஸ்தம், சித்திரை 1, 2 முடிய)

எப்படி வாழ்க்கையை சமாளிப்போம் என்ற கவலை ஏற்படும். எதிர்பாராதவிதமாக பணவரவும் வரும், எப்படியோ சமாளிப்பீர்கள். அதுதான் வாழ்க்கை, உத்தியோகத் துறையினருக்கு வீண் பொல்லாப்புகள் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் எல்லாம் ஏற்படும். வியாபாரி, தொழிலதிபர்களுக்கு கடன் தொல்லை இல்லை. பணம் பற்றுக்குறைதான் பிரச்சனையாய் இருக்கும். எப்படியோ காரியம் கடைசி நிமிஷத்தில் நடந்துவிடும். ஸ்திரீகளுக்கு பித்தத் தொல்லைகள், ஆரோக்கிய பாதிப்பு அலைச்சலெல்லாம் உண்டு. மே மாதம் 5ம் தேதிக்குமேல் வஸ்திர, தனலாபம் ஏற்படும் காணிக்கை செலுத்த சிலர் செல்லலாம். விபத்துக்கள் ஆபத்து இருப்பதால் வண்டி வாகனங்களில் செல்லுவோர் ஓட்டுவோர் எச்சரிக்கையாய் இருக்க நன்மை.

துலாம்: (சித்திரை 2, 3, சுவாதி, விசாகம் 1, 2, 3 முடிய)

மகிழ்ச்சி ஒருபுறம், மனக் கவலைகள் ஒருபுறம். அதுதான் வாழ்க்கை. ஆரோக்கியத் தொல்லைகள், அலைச்சல் இவற்றிற்கு பஞ்சமே இருக்காது. உத்தியோகத் துறையினர் அதிக வேலை சக ஊழியர் ஒத்துழையாமை இவற்றால் அவதிப்படுவர். வியாபாரி, தொழிலதிபர்களுக்கு பணப்பற்றுக்குறையால் அதிகக் கவலைகள், மே மாதம் 5 தேதிக்குமேல் நல்ல காலம் ஆரம்பம். ஸ்திரீகளுக்கு சரீரப் பீடைகளும், வீட்டில் அமைதியின்மையும் தாம்பத்ய பூசல்கள் ஏற்படலாம். எனவே அதற்கு இடம் கொடுக்காதீர்கள். சந்ததிகளும் எதிர்த்துப் பேசலாம், அனுசரித்து அரவணைத்துக் கொண்டுபோக நன்மை. கடிதப் போக்குவரத்தால் சில நன்மைகள் உறவினர் திடீர் வருகை தரலாம்.

விருச்சிகம்: (விசாகம் 4, அனுஷம், கேட்டை முடிய)

எண்ணிய காரியத்தை திருப்திகரமாக சாதித்த ஒரு பெருமை, விச்ராந்தி, சத்ருக்களின் தொல்லைகள் அநேகமாக ஒழிந்த மாதிரியே. இனிமேல் பயமில்லை. வியாபாரி, தொழிலதிபர்களுக்கு நல்ல வரும்படி லாபம். புதிய திட்டங்களைச் செயல்படுத்த நல்ல தருணமிது. உத்தியோகத் துறையினருக்கு வெற்றி, நல்ல வருமானம், நற்பெயர் எல்லாம். ஸ்திரிகளுக்கு மனக்கவலை அதிகம் இருக்கும். அதிக வேலைகள், சிரமம் ஏற்படும். பணப் பற்றுக்குறை, அதிகச் செலவு கவலை தரும். உஷ்ண சம்பந்தமான ஆரோக்யத் தொல்லைகளும் ஏற்படலாம். கடிதப்போக்குவரத்தால் நன்மைகள் ஓரளவு எதிர்ப்பார்க்கலாம். சிலர் துக்க நிகழ்ச்சிகளில் பங்குபெற நேரிடலாம். எதிர்பாராத வகையில் பந்துக்களிடையே விரோதம் ஏற்படலாம்.

தனுசு: (மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் முடிய)

ஒருவித சோம்பலும், தயக்கமும் உங்கள் எதிரிகள், எதையும் ஸிரத்தையோடு செய்தால் நல்ல பலன் ஏற்படும். உத்தியோகத் துறையினர் வேலைகளை ஒத்திப்போடக் கூடாது அதனுல் தொல்லைகள் விளையும். வியாபாரி தொழிலதிபர்களுக்கு மே மாதம் 5ம் தேதிக்குமேல் போட்டி கவலையைத் தந்தாலும் அதை சமாளித்துவிட முடியும். உங்களால் துணிந்து செய்யவும் எதையும். ஸ்திரீகளுக்கு எதிரிகளால் அவமானப்படவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். எனவே கூடுமானவரை பேச்சைக் குறைக்க நன்மை, யாரையும் எளிதில் நம்பிவிடவேண்டாம். சந்ததிகள் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். கடிதப் போக்கு வரத்தால் அதிருப்தியான தகவல்கள் வரலாம். அனுவசியமாகப் பிறர் விஷயங்களில் தலையிட வேண்டாம்.

மகரம்: (உத்ராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2)

அலைச்சலும், அகால போஜனமும், சர்வ சகஜம். அவமானப்படவேண்டிய சூழ்நிலைகளும் உருவாகலாம். எனவே மௌனம் நன்மை தரும். உத்தியோகத் துறையினருக்கு கடின உழைப்பு, வீண் பொல்லாப்புகள் ஏற்படலாம். வியாபாரி, தொழிலதிபர்களுக்கு மே மாதம் 5ம் தேதிக்குமேல் நல்ல பலன்கள் உண்டு. ஆயினும் போட்டியின் தொல்லைகள் தொடரவே

செய்யும். ஸ்திரீகளுக்கு உடல் ஆயாசம், அலைச்சல், அதிக உழைப்பு, வெளிவட்டாரப் பழக்கங்களைக் குறைத்துக்கொள்ள நன்மை. புத்திரர்களால் மகிழ்ச்சியும் உண்டு. ஒருசிலர் தாய்மையடைந்து (முதன் முறையாக) மகிழலாம் கடிதப் போக்குவரத்தால் சில நன்மைகள் ஏற்படும்.

கும்பம்: (அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3)

காரியவெற்றி, தைரியம், மன மகிழ்ச்சி எல்லாம் உண்டு. அதோடு கவலைகளும் உண்டு. உத்தியோகத்துறையினர் மே மாதம் 5ம் தேதிக்குப்பின்பு தஸ்தவேஜுகளைப் படித்துவிட்டு கையெழுத்துப்போட நன்மை. வியாபாரி, தொழிலதிபர் களுக்கு மேற்கண்ட தேதிக்குமேல் நிதானம் அவசியம். அவசரப் போக்கால் நஷ்டம் ஏற்படலாம். ஸ்திரீகளுக்கு சுகம், மகிழ்ச்சி, பணவரவு இருந்தாலும் ஒருவித பயம் மனதை பாதித்துக் கொண்டுதான் இருக்கும். சந்ததிகளாலும் தொல்லைகள் ஏற்படலாம். கடிதப் போக்குவரத்தால் ஓரளவு நன்மைகள் சொல்லலாம். வியாபாரிகளின் கணக்கு திடீர் சோதனைக்கு உள்ளாகலாம் எனவே உஷார்.

மீனம்: (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

வியாகூலம், சில்லரை ரோகங்கள் அதனால் செலவு, காரியத் தடைகள் ஏற்பட்டாலும் பணவரவு, சுகம் எல்லாம் மே முதல் வாரத்திலிருந்துகிட்டும். உத்தியோகத்துறையினர் கடமையில் கண்ணுங்கருத்துமாக இருப்பது அவசியம். சபல புத்தி அறவே உதவாது. வியாபாரி, தொழிலதிபர்களுக்கு போட்டியை சமாளித்தே ஆகவேண்டும், அதுதான் பிரச்சனை. ஸ்திரீகளுக்குச் செலவைக் கட்டுப்படுத்துவது அவசியம். ஆரோக்கியம் பாதிக்கப் பட்டாலும், பெரிதாக பயப்பட ஏதும் இல்லை, உடலில் காயங்கள் பட சந்தர்ப்பப்படுவதால் கவனமாக இருக்கவும், கத்தி, அரிவாள் மனை இவற்றைக் கையாளும்போது. கடிதப் போக்குவரத்தால் சில நன்மைகள் உண்டு.

—

(தொடரும்)

அமுது ஊறும் அதரங்கள்

ரா. வீழிநாதன், சென்னை

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இருக்கும். மாலை நேரம், கால்போன போக்கில் புறப்பட்டேன். என்றாலும் அவை என்னைத் தியாகராய நகர், சிவ-விஷ்ணு ஆலயத்தின் பக்கமே இட்டுச் சென்றன.

கோவிலின் நுழைவாசலில் ஓர் அறிவிப்புப் பலகை. அதில் ''ஆறரை மணிக்கு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் விஜயம்'' என்று எழுதியிருந்தது. கடிகாரத்தைப் பார்த்தேன். ஆறரைக்கு மேல் ஆகியிருந்தது. உள்ளே நுழைந்தேன். ஸ்ரீ ஸ்வாமிகள் எதிரில் வந்துகொண்டிருந்தார்கள். கூட்டத்தைப் பிளந்துகொண்டு அவரைத் தரிசித்தேன்.

அப்போது அவரோடு வந்துகொண்டிருந்த நண்பர் ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணன் என்னைச் சுட்டிக்காட்டி ''வீழிநாதன்'' என்றார்கள்.

''தெரியுமே!'' என்றார்கள் ஸ்ரீ ஸ்வாமிகள்.

அன்றுதான் ஸ்ரீ ஸ்வாமிகளை முதன்முறையாகப் பார்க்கிறேன். ''என்னைத் தெரியுமாமே'' எனக்கு ஒரே வியப்பு.

அவர் விழிகளும் உதடுகளும் என்னை ஈர்த்தன. விழிகளிலே பளிச்சிட்டது காந்தக்கவர்ச்சி. அதரங்களிலே ஊறிச் சுரந்தது அமுதனைப்பு. ஆம், என்றென்றும் காயாத ஈரப்பசையை அவை தாங்கியிருந்தன.

அன்று நடந்த உபன்யாசத்தின் முடிவிலே அவர் அருளுரை வழங்கினார். அதிலே மழலை தெரித்தது.

விடைபெறும்பொழுது, 'நானே குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்கலாமே!' என்றார்.

'எப்பொழுது தரிசனம் செய்ய வரலாம்?' என்று நான் கேட்க வேண்டியிருக்க, அவர் முந்திக்கொண்டதில் சிலிர்த்துப் போனேன்.

மறுநாள் குறித்த நேரத்துக்கு நான் அங்கே போனேன். வெளியே சென்றிருந்த அவர் திரும்பச் சற்று நேரம் ஆகிவிட்டது. என்னைப் பார்ததும், ரொம்ப நேரம் காக்க வைத்துவிட்டேனே? என்றார்.

குருவருளுக்கும் திருவருளுக்கும் காத்து நிற்கவேண்டிய நம்மையா ஸ்வாமிகள் இப்படிக் கேட்கிறார்? 'என்னே எளியனும் தன்மை!' என்று நான் மெய்விதிர்த்துப் போனேன்.

அப்பொழுதுதான் அவர்வந்த பரம்பரையின் முன்நிகழ்ச்சி நினைவு வந்தது.

பொறுமையே இன்னதென்று அறியாத அநசூயை, அத்ரி மகரிஷியின் தர்மபத்தினி. கற்பின் வடிவமாக விளங்கிய அவளிடம் மும்மூர்த்திகளின் மனைவிமார்களே பொறுமை கொண்டனர். தங்கள் கணவன்மார்களை ஆட்டிப் படைத்து அவளிடம் பிக்ஷைக்கு அனுப்பினர். அவர்கள் பிக்ஷைக்குவிதித்த நிபந்தனையைப் பெண்டாட்டி தாசர்களாகி மும்மூர்த்திகளும் ஏற்றனர்.

அவர்கள் பிக்ஷாடன வேஷம் போட்டுக்கொண்டு போன பொழுது அத்ரி மகரிஷி வீட்டில் இல்லை.

பிக்ஷைக்கு அவர்கள் விதித்த நிபந்தனையைக் கேட்டு அநசூயை மிரளவில்லை. 'இதோ வருகிறேன்'! என்றுகூறி உள்ளே சென்றவள் கணவரின் கமண்டலத்திலிருந்து ஒரு கை நீர் எடுத்து வந்து அவர்கள்மீது தெளித்தாள்.

அடுத்த கணம் அவர்கள் பச்சிளம் பாலகர்களாகிக் 'குவா, குவா' அழலாயினர். அநசூயை அவர்கள் ஆசையை நிறைவேற்றித் தொட்டிலில் இட்டுத் தூங்கப் பண்ணினாள்.

வீடு திரும்பிய அத்ரி மகரிஷி தொட்டிலில் மூன்று குழந்தைகள் இருப்பதைக் கண்டார். ஒரு குழந்தைக்காக ஏங்கித் தவம்கிடந்த அவருக்கு மூன்று குழந்தைகளைக் கண்டதும் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. ஓடி மூன்று குழந்தைகளையும் ஒன்றாகத் தூக்கிக் கொண்டார். பலன், மூன்று ஒன்றாகியது. தலை மூன்று, உடல் ஒன்று என்று!

ஞான திருஷ்டியால் மூன்று கடவுளர்களும், குழந்தையாகி வந்ததோடு, அத்வைதத்தை நிலைநாட்ட ஒன்றாகி நிற்பதைக் கண்டார். அவர்கள் அத்ரிக்குத் தங்களை ஈந்ததனால் தத்தாத்ரேயர் என்று பெயர் பெற்றார்கள்.

தத்தாத்ரேய பரம்பரையில் வளர்ந்த ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் விழிகளிலே பளிச்சிடும் தெய்விக ஒளியும், உதடுகளிலே சுரக்கும் அமுதமும் அவரை இன்னார் என்று இனம் காட்டிக்கொடுக்கிறாற்போலத் தோன்றுகின்றன.

ஸ்ரீஸ்வாமிகள் புதுக்கோட்டையில் ஸ்ரீசதாசிவ ப்ரும்மேந்த்ர சரஸ்வதி அவதூத ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் தமது இஷ்ட தெய்வமான அன்னை புவனேச்வரியை பிரதிஷ்டைசெய்து உலகெலாம் அவள் குழந்தை என்பதை நிரூபித்திருக்கிறார்கள். அவள் சந்நிதானத்தில் ஆண்டுதோறும் உலக க்ஷேமத்திற்காக நடைபெறும் ஹோமங்களும் யக்ஞங்களும் பார் அறிந்தவை.

ஸ்ரீ ஸ்வாமிகள் பேச்சோடு பேச்சாக, ''ஒருமுறை புதுக்கோட்டைவந்து அங்கு நடக்கும் ஹோமங்களைக் காணலாமே!'' என்றார்கள்.

''கரும்பு தின்னக் கூலியா? கட்டாயம் வருகிறேன்!'' என்று கூறினாலும் உள் மனம் போவதாக இல்லை.

ஆனால் அருள் எப்படியோ என்னை அங்கு கொண்டு நிறுத்தி விட்டது. அன்னை புவனேச்வரியையும் அவள் சந்நிதானத்தில் நடக்கும் ஹோமங்களையும் மூன்று நாட்கள் தங்கிக் கண்டேன். காணாததைக் கண்டேன் என்று அதன் தெய்வீகத்தைக் கூறினால் மிகையாகாது.

ருத்விக்குகளும் பிரதிப் பிரயோஜனம் பாராத பக்தி சிரத்தை யுடன் ஈடுபடுகிறார்கள். அவர்களது மந்திரச் சொற்கள் எல்லோருடைய செவிகளையும் நிறைக்கவேண்டும் என்பதற்காக ஒலிபெருக்கி ஏற்பாடு என்பது ஒருபுறம் இருக்க ஸ்ரீஸ்வாமிகள் மந்திரலோபம் ஏற்படக்கூடாது என்பதற்குச் செய்த ஏற்பாடா கவும் படுகிறது. மந்திர உச்சாடனத்தில் யாராவது வேகம் காட்டினால், ஒலிபெருக்கியைச் சீர்செய்ய வருகிறாற்போல் ஸ்ரீஸ்வாமிகள் வந்து நிற்பார்கள் மந்திரம் கட்டுப்படும்.

சேலத்தில் ஸ்கந்தாச்ரமம் நிறுவியுள்ள ஸ்ரீஸ்வாமிகள் வேதாத்யயனத்துக்கும் வழிவகை செய்துள்ளார்கள். ஸ்ரீஸ்கந்தர் ஆச்ரமத்தில் பஞ்சமுக விநாயகர், பஞ்சமுக ஆஞ்சனேயர் போன்ற அற்புதச் சிலை வடிவங்கள் இருக்கின்றன.

புதுக்கோட்டை அதிஷ்டானத்திலும் பஞ்சமுக ஆஞ்சனேயரைக் சுதையில் விசுவரூபம் எடுக்க வைத்துள்ளார்கள் இதன் குறு வடிவத்தைச் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவத்தூரில் காணலாம்.

எனது புதுக்கோட்டை வாசத்தின் இரண்டாம் நாளன்று நடந்த நிகழ்ச்சி நினைவு கூறாமல் இருக்கமுடியவில்லை.

ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீஆஞ்சநேயர் சிலைக்கு அடியிலேநின்று சென்னையில் என்னை அறிமுகப்படுத்திவைத்த ஸ்ரீகிருஷ்ணன் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஹோமத்தில் இருந்த என்னைத் திடீரென்று அழைத்தார்கள். ''உங்களுக்கு இப்பொழுது வயது . . . . இருக்குமா?'' என்று கேள்வி பிறந்தது.

''குறைவாக மதிப்புப் போடுகிறீர்களே! அடுத்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டு அறுபதாம் கல்யாணம்!'' என்றேன்.

ஸ்ரீ ஸ்வாமிகள் வானளாவி நின்ற ஸ்ரீ ஆஞ்சநேயரைச் சுட்டிக் காட்டி, ''இப்படிச் சிரஞ்ஜீவியாக இருக்கவேண்டும்'' என்று வாழ்த்தினார்கள். முதல் வாழ்த்து; முன்கூட்டிய வாழ்த்து!

''இப்படியல்ல; அப்படி!'' என்பதுபோல் என் மனைவியைச் சுட்டிக்காட்டினேன்.

''சொல்லவும் வேண்டுமா? அது அவன் தலைப்பொறுப்பு அல்லவா? ஸீதாராமன் அதற்குச் சாட்சி!' என்றவர், 'உங்களுக்கு ஒரு பணி தரலாம் என்றிருக்கிறேன்!' என்றார். ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளாணைப்படி வெளிவருகிற ''ஸ்ரீ புவனேச்வரி விஜயத்தின்'' ஆசிரியப் பொருப்புத்தான் அந்தப்பணி.

ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்நிதியில் நான் இஞ்சி தின்ற குரங்காக நின்றேன். காரணம், எனக்கு அத்தகைய பத்திரிக்கைகள் நடத்த அறிவோ, அருகதையோ இல்லை என்பது ஒன்று. இரண்டாவது

நான் இப்போது நடத்திவரும் ''அமர்பாரதி''க்கு டிக்ளரேஷன் வாங்குமாறு ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் முன்பே பணித்திருந்தது.

முன்னுக்குப்பின் முரணாக நான் உளறுவதாகத் தோன்று கிறதா? அப்படி ஒரு குருவாணை பிறந்தபொழுது நான் பயம் அறியாத இளங்கன்றாகிவிட்டேன். வயது அறுபது ஆனாலும் ஆன்மீக விஷயத்தில் நான் இளம் கன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

நான் திக்கித் திணறினேன், சொல்லவும் மெல்லவும் முடியாமல்.

''இந்தப்பணி உன்னை எதிர்நோக்கி நிற்கிறது!'' என்று பூடகமாகக் கூறியவர் எனக்குப் பின்னால் வந்தவர்களுக்கெல்லாம் விடைகொடுத்து அனுப்பிவிட்டார். எனக்குமட்டும் தரவில்லை.

கடைசியில் என் பிடிவாதம் பிரியா விடைபெறச் செய்தது. மிகவும் பிரியமாக வேதோக்த பிரசாதம் கொடுத்து அனுப்பினார். அவர் மனத்தில் அத்தகையதோர் இடம்பெற்றது என்முன்வினைப் பயன்தான்.

அந்த ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளுக்கு வயது அறுபது. என் அறுபதுக்கு ஸ்ரீ ஆஞ்சநேயரைக்காட்டி வாழ்த்திய ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் அறுபதை நாம் வாழ்த்தி வணங்குவோம்.

அவரது அருள்நோக்கும், அமுதச் சொற்களும் நமக்கு என்றென்றும் கிடைத்துக்கொண்டிருக்க அன்னை புவனேச்வரியின் அருளை நாடுவோம்.

O Mind, if duties are performed without attachment towards them or their fruits, they purify your heart and save you by releasing you from the bonds of bitth and death.

— **Gospel of Swami Sri Santananda**

श्रीरामजयः

श्री सद्गुरुचरणारविन्दाभ्यां नमः

कुशलम् 18-3-81

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्याणां पादारविन्दयोः शुक्ल यजुर्वेदी ना. वे. शिवरामकृष्णशर्मा घनपाठी अनेकसाष्टाङ्ग-प्रणामपूर्वकं सविनयं विज्ञापयति ।

श्रीचरणानां पूर्णानुग्रहेण अत्राहं श्रीदुर्गापरमेश्वरीं यथामति आराधयन् श्रीदुर्गासप्तशतीपारायणं कृत्वा वर्ते ।

तत्र श्रीचरणानां षष्ट्यब्दपूर्तिमहोत्सवः अचिरात् भविष्यतीति पत्रिकाद्वारा जाने । तत्र समये श्रीचरणानां अनुग्रहं प्राप्तुमिच्छन् यथामति पारायणं कृत्वा आत्मानं कृतार्थीकर्तुं अभिलषामि । मयि पूर्णानुग्रहेण पारायणकरणे अनुमतिदानेन अनुग्रहः कर्तव्य इति अभ्यर्थये । अन्यत् सर्वं समक्षं निवेदयिष्यामि । सन्तु कोटयः श्रीमतां अनुग्रहपात्रम् ।

ना. वे. शिवरामकृष्णः
एक्सप्रेस् एस्टेट्
मौण्ड रोड् मद्रास-2



श्री

॥ गुर्वष्टकम् ॥

शान्तानन्दो गुरुर्ह्येष: लोककल्याणकारक: ।
सम्सारसागरोन्मग्न जनतोद्धारवद्धधी: ॥
मन्त्रशास्त्रप्रभावज्ञ: यज्ञयागक्रियारत: ।
भुवनेश्वरी जगन्माता पदचिन्तनमग्नधी: ॥
स्कन्धाश्रमसुनिर्माता गुरुपादप्रपूजक: ।
महालक्ष्मी प्रतिष्ठाता योगक्षेमकृदीश्वर: ॥
आहर्ता सर्वयज्ञानां संहर्ता पापकारिणाम् ।
दाता धाता विधाताऽयं वर्धतामभिवर्धताम् ॥
सेन्दमङ्गलवासी च सदाशिवसरस्वती ।
गुरूमुख्यौ महाप्राज्ञौ रक्षतां न: भवे भवे ॥
षष्ट्यब्धिवैभवे पूर्णे प्रार्थयामो वयं मुदा ।
शान्तानन्दो महानेष शतानन्दो भवत्विति ॥
शान्तानन्दमहागुरुर्जनयति यो पूज्यास्सदा सज्जनै:
माता श्रीभुवनेश्वरीचरणसत्पूजारतो निर्मम: ।
लोकानुग्रहतत्परो यतिवर: कारुण्यवारांनिधि:
वन्दे तं जनतापपापविमुखं शान्तिप्रदं सद्गुरुम् ॥
जयतु जयतु नित्यं शान्तद: सद्गुरुर्न:
त्रिभुवनकमनीया साऽपि धात्री सुमाता ।
जयतु जयतु यज्ञा: लोककल्याणजाता:
जयतु जयतु धर्मो वेदशास्त्रार्थसार: ॥

इत्थं अनन्तं

(गोयम्बुत्तूर् वासिन: श्रीरामनाथ शर्मण: पुत्री)
नारायण राधेश्याम

கண்டு கொண்டேன்! கருணை முகிலை

மந்த்ர சாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜ்யோதிஷ கல்பதரு,
உபன்யாஸக ரத்னம், ஸ்ரீ குருவாயூரப்பதாஸன்
B. சுந்தரராமன், M. A., B. Ed.,
பழமானேரி அஞ்சல், (வழி) திருக்காட்டுப்பள்ளி-613 104

விருஷா என்பவன் இந்திரனுக்கு அடிக்கடி பல யாகங்களில் ஹவிர்பாகம் அளித்துத் தன்னிடமே வைத்துக்கொண்டான். இதனால் ஏற்பட்ட இந்திரனின் பிரிவைச் சகிக்காத இந்திராணி மிகவும் பயந்து தன்னை, இந்திரனைவிட்டுப் பிரிக்கவே வ்ருஷா இவ்விதம் சூழ்ச்சி செய்வதாக இந்திரனிடம் புகார் செய்கிறாள். இதற்கு ரிக் வேதம் 10-வது மண்டலம் 96-வது ஸூக்தம் 6-வது சுலோகத்தில் இந்திரன் பதில் சொல்கிறான். தனக்கு மந்த்ர ஆஹுதிகளில் எவ்வளவு பிரியம் உண்டோ அதே அளவு சமமான பிரியம் இந்திராணியிடமும் உண்டு என்று இந்திரன் சொன்னதாக அறிகிறோம். எனவே தேவதைகட்கு ஹவிர்பாகத்தில் உள்ள ஈடுபாடு இதன்மூலம் தெரியவருகிறது. இவ்விதம் சூலினி, வாராஹி, ப்ரத்யங்கிரா, சரபம் போன்ற ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்த தேவதைகட்கு எல்லையற்ற ஹவிர்பாகம் அளித்து தமக்குள் அந்தர்முகமாக ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் நிறுத்திவைத்திருக்கிறார் என்றால் மிகையாகாது. எனவே ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசித்தால் இவ்வளவு தேவதைகளைக் கலியிலும் தரிசித்த பலன் உண்டு என்பது நிச்சயம்.

துரவு என்றால் கேணி என்று பொருள். இது எப்படி தானே தண்ணீரைக் குடிக்காமல் இறைக்க இறைக்க ஊறித் தோட்டத் திற்குப் பாய்கிறதோ, அப்படித்தான் துறவும். துறவி என்பவர் இறைக்க இறைக்க வற்றாத கருணைவாரிதி. தான், தன்னுடையது என்பதை விட்டவர் துறவி. புகழ், பொருள் இரண்டையும்விட்டு உலக நன்மைக்கு பணிபுரிபவரே துறவி. இவை யாவற்றிற்கும் இலக்கணமாக நம் ஸ்வாமிகள் திகழ்வதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

ஸ்ரீ ஸத்குருநாதரைப் பற்றி மாதாமஹர் திப்பிராஜபுரம் 'தசரதர்' ஸ்ரீ K. N. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அடிக்கடி கூறுவார். இவர் 95 பிராயம் இருந்து 1970-ல் உயிர்நீத்தார். பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகளின் அருமை சீடரான இவர் அடியேனுக்கு

வடமொழியைப் போதிக்கத் தொடங்கும்போதே புவனேச்வரி ஸ்தோத்ரம் போன்ற எளிமையான சொல்லமைப்புள்ளவற்றையே முதலில் உபதேசித்தார். எங்கள் குடும்ப சொத்தான ஸ்ரீசக்ர மஹாமேரு ஒன்றை இவர் திப்பிராஜபுரம் அபிராமி ஸன்னிதிக்கு அளித்துவிட்டார். எனக்கு வெகு காலமாக அதைப்பெற்றுப் பூஜிக்க ஆவல். 1975ம் வருடம் மே மாதம் 2ம்தேதி காலையில் எனக்கு ஒரு ஸ்வப்னம் ஏற்பட்டது. ஸ்வாமிகள் கனவில்வந்து அந்த மேருவைக்கேட்டுப் பெறும்படியும், ஒருநாள் பூஜிக்கும் வாய்ப்புத்தான் உண்டு, பிறகு பல க்ஷேமங்கள் உண்டு என்றும் சொன்னார். அதன்படி பூர்வீக கிராமமான திப்பிராஜபுரம் சென்று தர்ம கர்த்தாவிடம் மேருவைக் கேட்டேன். (கனவைப் பற்றி இது வரைச் சொல்லவில்லை) எந்த ஆட்சேபமுமின்றி அதைத்தர ஸம்மதித்து குருக்களிடமும் சொல்லிவிட்டார். இனி இது நமக்குத்தான் என்ற குதூகலத்துடன் அதைப்பெற்று த்ரிசதீ, ஸஹஸ்ரநாமம்முடித்து நிவேதனம் முடிக்கும்போது என் அன்பிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமான பல நண்பர்கள் திரண்டு வந்து மீண்டும் கோவிலுக்கே அதை அளித்துவிடவேண்டும் என்றும் மன்றாடினார்கள். ஸ்ரீஸ்வாமிகள் ஒருநாள் பூஜிக்கும் பாக்கியம்தான் என்று கனவில் சொன்னதும் ஞாபகம் வந்தது. அன்றியும் மேருவைப்பெற்றது மிதுன லக்னம். பூர்வ புண்ய ஸ்தானாதிபதியும், மோக்ஷ ஸ்தானாதிபதியுமான சுக்கிரன் மோக்ஷ ஸ்தானத்தில் ஞானகாரகன் கேதுவுடன் ஸம்பந்தப்பட்டதால் பரம்பரைப் பூஜையைப்பெறும் பாக்கியம் கிட்டியது. ஆனால் லக்னாதிபன் புதன் விரையத்தில் இருப்பதால் உடனே அது கையை விட்டுப் போகப்போகிறது என்று உணர்ந்துகொண்டு மன திருப்தி யுடன் மீண்டும் ஆலயத்திலேயே சேர்ப்பித்துவிட்டேன். ஆனால் அதன்பிறகு எனக்கு வாழ்க்கையில் பல முன்னேற்றங்கள். நான் தாமிரத்தில் தயாரித்துத்தரும் ஸ்கந்தமேருவினால் என்னைப் பல பிரமுகர்கள் அறிய நேர்ந்தது. இன்று பல வியாபாரிகள் கிருஹஸ்தர்கள் வீட்டில் நான் தயாரித்தளித்த ஸ்கந்தமேரு பூஜையிலிருந்து ஸகல ஸௌபாக்யங்களையும் அளித்து வருகிறது என்றால் மிகையாகாது.

எங்கள் குடும்ப நண்பரான டாக்டர் ஒருவரின் அருமை மகளுக்கு டிடானிஸ் நோய் ஏற்பட்டு அவர் தஞ்சையில் மருத்துவ மனையில் குழந்தையை அட்மிட் செய்துவிட்டு நம்பிக்கையற்று வீட்டில் இருந்த சமயம் ஸ்ரீஸ்வாமிகள் திடீரென எவ்வித முன் அறிவிப்புமின்றி அவர் வீட்டிற்கு விஜயம்செய்து ஆறுதல்கூறி

திவ்ய குங்கும பிரஸாதமளித்துச் சென்றார். நண்பருக்கு நடந்தது நனவா அல்லது கனவா என்று புரியவில்லை பிரஸாதத்துடன் அவர் தஞ்சை சென்றபோது குழந்தை எழுந்து உட்கார்ந்திருந்தாள். ஸ்வாமிகள் கருணைக்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டும் வேண்டுமோ?

புவனேச்வரி விஜயத்தில் தொடர்ந்துவரும் 'க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்' கட்டுரைக்குப் பெயரிட்டதே ஸ்ரீஸ்வாமிகள் தான். அந்தக் கருணைக் கடைக்கண் வீச்சால்தான் என்னைபும் அறியாமல் அது மிக சிறப்பாக அமைந்து வருவதாகப் பல்வேறு வாசகர்கள் எழுதி என்னை ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.

'' பிந்ததிசைலன் உததீப்லவந்தி
வ்யத்யாஸயந்தி க்ஷிதிமந்தரிக்ஷம்
த்ருணீக்ருத ப்ரஹ்ம புரந்தராணும்
கிம் துஷ்கரம் சங்கர கிங்கராணும்''

''மலைகளைப் பிளக்கிறார்கள் ஸமுத்ரங்களைக் காற்றைப்போல் வீசுகிறார்கள். பூமியை அந்தரிக்ஷமாகவும், அந்தரிக்ஷத்தை பூமியாகவும் மாற்றுகிறார்கள். பிரம்மன், இந்திரனின் செயல்களை த்ருணமாகக் கருதுகிறார்கள். சங்கர தாஸர்களுக்கு செய்ய முடியாத கார்யமென்ன இருக்கிறது என்று மார்க்கண்டேயர் கூறியபடி ஸ்ரீஸத்குருநாதரின் கடாக்ஷம் நம்மீது பூரணமாக இருக்கும்போது நம்மால் முடியாதது ஒன்றுமில்லை.

கற்பூரம் நெருப்பைத் தேடுவதுபோல மின் சக்தி எப்போதும் நிலத்தின் மீது குதித்து மறையக் காத்திருப்பதுபோல, பாலைவனத்து ஒட்டகம் நீரைத் தேடுவதுபோல நானும் எனக்கு உரிய ஸத்குருவைப் பலகாலம்தேடி இன்று கண்டுகொண்டேன். சஷ்டி அப்தபூர்த்தியடையும் ஸ்ரீஸத்குருநாதர் சதாபிஷேகமும் அதற்குமேலும் பலகாலம்கண்டு நம்மை என்றென்றும் ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று ஸ்ரீகுருவாயூர் அப்பனைப் பிரார்த்திக்கிறேன்.

'' திருவாழ் உரனே! செழுநீலமலர்
தருமேனியனே! தலைவா! சரணம்! !
ஒருவாதுனையே உரைக்க அருள்செய்
குருவாதபுரிக் குடநாட்டவனே!

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பங்குனி-மீ

22 ஸர்வ அமாவாசை

23 யுகாதி பண்டிகை

25 கார்த்திகை வ்ரதம்

26 சதுர்த்தி வ்ரதம்

27 ஷஷ்டி வ்ரதம்

30 ஸ்ரீராம நவமி

துன்மதி-ஞு சித்திரை மீ

1 ஸம்வத்ஸராதிப் பண்டிகை, மேஷ ரவி 28-1
விஷு புண்யகாலம், வஸந்த ருது

3 ஸர்வ ஏகாதசி

4 துவாதசி, மஹாப்ரதோஷம்

6 பௌர்ணமி வ்ரதம், திதி, சித்ரா பௌர்ணமி

7 பௌர்ணமி பூஜை

11 சங்கடஹர சதுர்த்தி

18 ஸர்வ ஏகாதசி

19 துவாதசி, மஹாப்ரதோஷம்

This jumble of transient things called world does not concern a man who longs not for it. Are you born in this world to think of things that are alien to you? Become mad with the joy of contemplation on your soul. You will become the enlightened one.

—Gospel of Swami Sri Santananda

சர்மாஸ் சானடோரியம் ப்ரஸ், கணேஷ்நகர், புதுக்கோட்டை